347

347
4.55

கி
ர
ட்
டு

மன்மத ஞல
ஆடி - ஆவணி

பத்திரிகை தர்மம்

திருமணப் பரிசு!

வாகன வாசகசாலை

பாதை வாசிகளுக்கு
வீடு, வாசல் (படங்களுடன்)

பேனு மன்னர்களின்
பரிதாப நிலை

ஹிமாலய வீரர்

இந்தியாவிற்கு ஒரு
புது வாசல் (படங்களுடன்)

இன்னும் தொடர் நாவல்,
நாடகம், சிறு கதைகள், பல
விசேஷக் கட்டுரைகள்
நிறைந்தது.

AUGUST—1955
Vol. 2. No. 8.
96 பக்கங்கள்

6
அணு

13 JUL 1955
ந211, N5354
N55.2.8
198761

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

திரட்டு

Vol. 2. பொருளடக்கம் No. 8.

பத்திரிகைகளின் தர்மம் ... 3
தொல்லை தீர்க்கும் தில்லை (படங்கள்) ... 6
வேருக்கு ஊற்றிய தண்ணீர் ... 9
அவசரக் குழந்தை ... 16
இந்தியாவிற்கு ஒரு புது வாசல் ... 17
விஞ்ஞானம் படுத்தும் பாடா? விதியின் விளையாட்டா? ... 22
உயிர்க்கனல் ... 25
வைத்தீசுரன் கோயில் ... 29
ஈசுவர தரிசனம் ... 31
வில்வாதி லேகியம் ... 33
ஜாபாலி உபநிஷத் ... 35
ராமஸ்வாமி தீக்ஷிதர் ... 37
மேவாரின் வீழ்ச்சி ... 41
ஹிமாலய வீரர் ... 45
சிறிய உருவிலும் பூரண தரிசனம் ... 49
பழமையில் மோகம் ... 53
பெண் மனம் ... 55
அதிசய நாடு ... 56
நீதி மலர்கள் ... 57
அரசனும் சிறுவனும் ... 59
பரமஹம்சர் ... 60
பேறு மன்னர்களின் பரிதாப நிலை ... 62
மகான்கள் நிலை நாட்டியவை ... 65
ஸ்ளிதக் கலைகள் ... 66
வாகன வாசகசாலை ... 68
தானே தண்டித்துக்கொண்ட நாய் ... 69
வேலொடு நின்றான்...... ... 71
ஆசியாவின் கவலையில்லாத தேசம் ... 73
நியூயார்க்கில் ஒரு நாள் ... 75
திருமணப் பரிசு! ... 76
பாதைவாசிகளுக்கு வீடு, வாசல் ... 81
மனித இனம் ஒழிய வேண்டுமா? அல்லது யுத்தம் ஒழிய வேண்டுமா? ... 85
கவியின் கனவு ... 89
நிறங்களின் கருத்து ... 95

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்
("எஸ்-100" ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணணூர் ரயில்வே ஸ்டேஷன்.





உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம்:

உரிமையாளர்
எம். கே. ரங்கநாதன்

சென்னை-600 008

"THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

ஆகஸ்டு 1955

'பத்திரிகைகள் சமூகத்தின் சாபக்கேடு' என்ற அபிப்பிராயத்தை மகாத்மா காந்தியுள்பட சில சிந்தனையாளர்கள் வெளியிட்டுள்ளனர். ஆனால் பத்திரிகைகள் நடத்துபவர்களுக்கும் சில நியதிகளுண்டு.

பத்திரிகைகளின் தர்மம்

ஒவ்வொரு பத்திரிகைக்கும் இரு அம்சங்களுண்டு. பத்திரிகை வெளியிடுவதும் ஒரு வியாபாரம் தான். மற்றெல்லா வியாபாரங்களையும் போலவே இதிலும் லாபமிருந்தால் தான் சுவாரஸ்யப்படும்.

ஆனால் பத்திரிகைகள் பிரசுரிப்பதை ஒரு வியாபாரமாக மட்டும் கருதுவது மிகத் தவறாகும். வியாபாரநோக்கமென்பது பத்திரிகை விஷயத்தில் மிகவும் அற்பமான அம்சந்தான். ஏனெனில் ஒவ்வொரு பத்திரிகையும் ஒரு ஸ்தாபனம் என்ற மதிப்பு வாய்ந்தது. மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கவும் அதை பாதிக்கவும் சக்தி பெற்றது. ஏன், பத்திரிகை ஒரு நாட்டின் நிர்வாகத்திற்கே உதவும் கருவியெனவும் கூறலாம்; பொது மக்களின் சிந்தனைக்குத் தூண்டு கோலாயிருக்கிறது. மனிதனுக்கு அறிவூட்டவும் அவனைப் பேதமையிலாழ்த்தவும் ஒரு பத்திரிகைக்கு சக்தி உண்டு. ஆகையால் ஒரு பத்திரிகையென்பது ஊனக்கண் மூலமும் ஞானக்கண் மூலமும் மனிதனைப்

பாதிக்கும் சக்திகளை வெளியிடும் கருவியாகும். இந்தச் சக்திகளில் மனிதனை எது அதிகமாகப் பாதிக்கின்றதோ அதிலிருந்து பத்திரிகையின் உண்மைத் தரம் வெளியாகும்.

பத்திரிகையின் தரம் என்பது மனிதன் தரம் போலத்தான். அதற்கு அநேக அம்சங்களுண்டு. அதன் தன்மையை நாவால் வர்ணிக்க இயலாது. அதை மனத்தாலேயே அறிந்துகொண்டும். சென்ற காலத்தில் மனிதன் புரிந்துள்ள செயல்கள், சிந்தனைகள் இவற்றிலிருந்து எஞ்சியதே மனிதனின் தரமெனப்படுவது மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய பொக்கிஷங்கள் அனைவற்றிலும் மிக உயர்தரமானதாகும் இது. நேர்மை, தூய்மை, தைரியம் பக்ஷபாதமின்மை, பொதுமக்களுக்கு நலம் புரிய வேண்டுமென்கின்ற அக்கறை இவைதான் பத்திரிகையின் தரத்தை வெளியாக்கும் அம்சங்கள்.

பத்திரிகையின் ஒரு விசேஷகுணமென்னவென்றால் மற்றதாலும் இயலாத ஒன்றைச் சாதிக்கும் ஏகபோக சக்தி இது பெற்றுள்ளதுஎன்பதாகும். இந்தசக்தி வாய்த்திருந்தால் அதைத் தன்னலத்திற்குப் பயன்படுத்துவதே மனிதனின் இயற்கையான குணம். அப்படி செய்யாமலிருப்பது தான் பத்திரிகையின் தரத்தை வெளிப்படுத்துவதாகும். பத்திரிகையின் முக்கிய கடமை செய்திகளைத் திரட்டி வெளியிடுவதுதான் செய்திகளை வெளியிடுவதில் நேர்மை இருக்கவேண்டும். பிரசுரிக்கவேண்டிய செய்திகளைத் தேர்ந்தெடுப்பது, பிரசுரத்திற்கு லாயக்கில்லை என்ற சாக்கில் சில செய்திகளை ஒதுக்குவது, பிரசுரிக்கும் பாணி இவை எதனாலும் உண்மைக்குப் பங்கமேற்படக்கூடாது. செய்திகளைப் பற்றிய அபிப்பிராயங்கள் கூறுவதற்குப் பூரண சுதந்திரமுண்டு. ஆனால் செய்திகளின் புனிதத் தன்மை பெற்றுள்ளவை யாதலால் அவற்றை இஷ்டம் போல் பிரசுரிப்பதற்குச் சுதந்திரம்கிடையாது. உண்மைச் செய்திகள் என்பதற்கும் பிரசாரம் என்பதற்கு வெகு தூரம். நண்பர் குரலும் எதிரியின் குரலும் ஒன்றுபோல் பத்திரிகையில் தொனிக்கவேண்டும். அபிப்பிராயங்கள் கூறுபவர்களும் ஒருகட்டுப்பர்டுவைத்துக்கொள்ளவேண்டும். ஓங்கி அடித்துச் சொல்வதைவிட பாரபட்சமின்றி அபிப்பிராயம் கூறுவதே மேல். இந்த முறையை அணுவளவு கூட மீறாமல் நடப்பது மனிதனுக்கு சாத்தியமாகாதாயினும் இதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு முயற்சி செய்வதுதான் பத்திராதிபரின் தர்மம்.

அபிப்பிராய சுதந்திரம் என்பது பத்திரிகைகளுக்கிருக்க வேண்டிய ஒரு விசேஷ அம்சம். எந்தக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் எந்தக் கட்சி சார்பாக பிரசுரத்தில் ஈடுபட்டிருந்தாலும் பத்திரிகைக்கு ஒரு தனித் தன்மையிருக்கவேண்டும். இக்காலத்தில் பல பத்திரிகைகளையும் ஒரே மனிதரோ அல்லது ஒரு ஸ்தாபனமோ கையாள முயற்சி செய்கிறுர்கள். இதனுல் பத்திரிகைகள் பல அபிப்பிராயங்கள் கூறுவதற்குப் பதிலாக அநேக பத்திரிகைகள் ஒரே அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றன. மேலும் தனிப்பட்ட பத்திரிகைகளை வெளியிடுவதற்குள்ள செலவு அதிகமாகிக்கொண்டிருப்பதனுல் ஒரே ஸ்தாபனம் பல பத்திரிகைகளை வெளியிட்டால் மொத்த செலவும் குறைவாகிறது. ஆனுல் இவ்வாறு செய்வதால் பத்திரிகையின் விசேஷ குணங்கள் மறைந்துவிடுகின்றன. பத்திரிகைகளின் தரம் குன்றக் கூடாதென்று கருதுபவர்கள் தங்கள் பத்திரிகைகளை நேர்மையாக நடத்தி வந்தால் போதும். ஒரு பத்திரிகையின் வெற்றியை அதன் மூலம் கிடைக்கும் லாபத்தினுல் அளவிடக் கூடாது. உயர்தர லட்சியங்களைக்கொண்டு அவற்றை நிறைவேற்றுவதற்காக வகுக்கவேண்டிய துறையர்கும் இது.

காலும் கையும் கொண்ட எவருமே ஒரு பத்திரிகையை நடத்தி விடலாமென்ற அபிப்பிராயம் கொண்டவர்களும் இக்காலத்தில் இருக்கிறுர்கள். கால், கை தவிர மற்ற ஒரு விசேஷ அம்சமில்லாதவர்கள் பத்திரிகைகளை நடத்த முயற்சி செய்து தோல்வி யடைந்துள்ளார்கள். பத்திரிகை நடத்துவதற்கும் ஒரு தனித் திறமை மிகத் தேவையானது. எந்த வியாபாரத் துறைக்கும் தேவையான வியர்பாரத் திறமை இத்துறையிலும் அவசியம் தான். ஆனுல், பத்திரிகைத் தொழிலில் வியாபாரத் திறமைதான் மற்ற அம்சங்களைவிட முக்கியம் என்று கொள்வதுதான் தவறு. வியாபாரத் திறமையும் பத்திரிகையாளரின் தனிப்பட்டத் திறமையும் ஒன்றுபடவேண்டிய ஒரு அரங்கமாகும் ஒரு பத்திரிகாலயம். ஆனுல், இவ்விரண்டு அம்சங்களில் பத்திரிகையர்ளரின் தனிப்பட்ட திறமைதான் வியாபாரத் திறமையைவிட சற்று உயர்ந்ததென்பதை எவரும் மறக்கக்கூடாது.

பத்திரிகையாளர்களுக்குள் ஒற்றுமைதான் பிரதானம். அனைவரும் ஒருவருக்கொருவர் நண்பர்களாகவே நடந்து கொள்ளவேண்டும். இதன் அர்த்தம் ஒருவர் அபிப்பிரர்யத்தை மற்ருெருவர் ஆமோதிக்கவேண்டுமென்

பதல்ல. எந்தப் பத்திரிக்கைக்காக உழைக்கிறார்களோ அந்தப் பத்திரிகையின் லக்ஷியங்களனைத்தையும் அப் பத்திரிகையில் சேவை புரிபவர்கள் கைக்கொள்ளவேண் டும். படகைச் செலுத்துபவர்களனைவரும் ஒத் துழைத்து குறிப்பிட்ட ஸ்தலத்திற்கு படகைச் செலுத்துவது போல் ஒவ்வொரு பத்திரிகையிலும் ஐக்கியத்துடன் பத்திரிகாலயத்தார் ஒத்துழைத்தால் தான் பத்திரிகையின் கொள்கைகளை நிறைவேற்றலாம்.

—Abstract of Article by C. P. Scott in
The Manchester Guardian (Courtesy —*The Hindu.*)

சமீபத்தில் சமபநெறி செழித்தோங்க தில்லையில் விசேஷ கும்பாபிஷேக வைபவம் நடந்தது.

தொல்லை தீர்க்கும் தில்லை

★

"செல்வர் வாழ் தில்லைச்
சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ்
செல்வஞ் செல்வமே"

பூலோக கயிலாயம் என்று சொல்லப்படும் மகாக்ஷேத்திரம். தரிசிக்க முத்தியளிக்கும் தலம். பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் ரிஷிகளுக்காகச் சபாநாயகர் பஞ்ச சபைகளில் ஒன்றாகிய கனகசபையிலே எக்காலமும் ஆநந்ததாண்டவஞ் செய்தருளும் பதி "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சபா நாயகராலேயே புகழ்ப்பட்ட பெரும் பாக்கியத்தை யுடையவர்களாகிய தில்லை மூவாயிரவர் பூசிக்குந் திவ்ய க்ஷேத்திரம்.

மாணிக்கவாசகஸ்வாமிகள், திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கூற்றுவ நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், கணம்புல்ல நாயனார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய எண்ணிறந்த அடியார்கள் முத்திபெற்ற தெய்வீக ஸ்தலம். மணிவாசகப் பெருமான் 'திருச்சிற்றம்பலக் கோவையார்" பாடி யருளின பழம்பதி. சேரமான் பெருமாள்நாயனார் 'பொன் வண்ணத்தந்தாதி' பாடின திருப்பதி. சபாநாதருடைய திருவடிகளே நமக்குப் பெருந்துணை' என்று நம்பி பூசித்து வந்த அச்சேரமான் பெருமாள்நாயனாருக்கு அவர் பூஜை முடிவிலே சபாநாயகர் தம்முடைய திருச்சிலம்பொலி கேட்கும்படிச் செய்து வந்த திருநகர். திருக்கோவலூரி

லிருந்த மெய்ப்பொருள்நாயனர் தாம் உயிர்விடுங்காலத்தில் சபா நாயகரைத் தியானம்பண்ண, சபாநாயகர் அவருக்குத் தோன்றி முத்தி யருளிய முதுநகர்.

படைத்தல், காத்தல், அழித்தல், கரத்தல், அளித்தல் என்னும் ஐம்பெருந் தொழில் புரியும் அம்பலவாணன்.

அபயகுலசேகர சோழ மகாராஜாவின் காலத்திலே நம்பி யாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட ஸ்தானம். அநபாய சோழ மகாராஜாவின் காலத்திலே சேக் கிழார் நாயனர் பெரிய புராணம் பாடி யரங்கேற்றிய அரும்பதி.

மற்ற எல்லா க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவகலைகள் அனைத் தும் அர்த்த ஜாமத்தில் தன்னிடத்தில் வந்து சேரப்பெற்ற ஒப்புயர் வில்லாத க்ஷேத்திரம். இன்னும் சொல்லுதற்கரிய அநேக மகி மைகள் பொருந்திய இணையில்லாத மஹா க்ஷேத்திரம். ஆலயம் சிதம்பரம் ரெயில் நிலையத்திலிருந்து முக்கால் மைல் தொலைவி லுள்ளது.

சுவாமி—திருமூலநாதர், தேவியார்—உமையம்மை.

மூலம் :— காளத்தி நடேச முதலியார் இயற்றியுள்ள இறை வனின் உறைவிடங்கள்'' என்ற நூல்.

தில்லை ஆலயக் காட்சிகள்







"வேருக்கு ஊற்றிய தண்ணீர்"

"நிதாயி"

★

★○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○★

"பணங்காசுகளை அடிப்படையாகக் கொண்டு பேத புத்தியுடன் செய்யப்படும் செயல்கள் பயத்திற்கு மூல மாகும்; அவ்வாறு இல்லாமல் எப்பொருளிலும் பக வானைக் கண்டு 'ஒன்று' என்ற எண்ணத்துடன் செயல் புரிபவன் வேருக்கு நீர் ஊற்றுவதால் பயப்பட அவ சியம் இல்லை".

—பாகவதம்.

★○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○★

பகவானுடைய லீலைகளை வர்ணித்துவிட முடியாது. ருசிக்காக ஒவ்வொரு மன்வந்தரத்திலும் செய்த ஒவ்வொரு லீலை சொல் லிக்கொண்டு போக எண்ணி தர்மஸமன்வந்திரத்தில் ஹரி என்று பெயர் தரித்த பகவான் கஜேந்திரனை பிரியத்துக்கு ஆளாக்கிக் கொண்டார் என்றும், ரைவத மன்வந்தரத்தில் வைகுண்டன் என்ற பெயரைத் தரித்து வைகுண்டமென்று பிரஸித்தியான லோகத்தை ஸாதுக்கள் வாஸஸ்தானமாய்ச் செய்து கொண்டார் என்றும், பிறகு ஸ்வாரோசிஷ மன்வந்திரத்தில் அஜிதனென்று பெயர் பூண்டு பால்-கடலைக்கடைந்து அம்ருதத்தை தேவர்களுக் குப் பங்கிட்டார், என்ற சுகரை எவ்வளவு லீலைகள் சொல்லச்சொன் னலும் சொல்லியிருப்பார். இப்பொழுதுகூட சுகரைப்போல் 'பத்ம மாதாவை' பகவான் செய்த எவ்வளவு லீலைகளுண்டோ அவ் வளவையும் சொல்லச் சொன்னல் சொல்லிக்கொணடே இருப்பார் கள். கேட்கிறவர்கள் இல்லையே! மாதாவாகவே, ஒருவரும் கேட்கா மலே சொல்லும் பகவானுடைய லீலைகளையே கேட்பவர்களில் லையே! மாதாவைக்கேட்டு அவர்கள் சொல்லும் லீலைகளை யார் கவ னிக்கப் போகிருர்கள்? பின்வரும் ஸந்ததிகளுக்கு பாக்கியமிருக் கிறது. இதைப்போல் அன்றும் சுகம் சொல்லிக் கொண்டே போகும் சமயத்தில் சில சில இடங்களில் பரீக்ஷித் கேட்டு நமக்குக் கிடைத்த பாக்யம்தான் பாகவதம். "பால் சமுத்திரத்தைக் கடைந் தார்; அம்ருதத்தை தேவர்களுக்குப் பங்கிட்டார்" என்று கேள்விப் பட்டார். "தனக்குப் பிரியனுன கோபாலன் தயிர் கடைந்த வெண் ணெயைச் சாப்பிட்டார்" என்பது ஞாபகத்துக்கு வந்தது. "இந்த கதையைச் சொல்லுங்கோ" வென்று கேட்டார். சுகருக்கு இதைக் கேட்பார் என்று தெரியும். கதையை விஸ்தாரமாய்ச் சொன்னர். ஆனல் இங்கு அது சுருக்கமாகத்தான் சொல்லப்படும். அந்தக் கதையில் முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டியதை மட்டும் சொல் லிக்கொண்டு போகப்படும்.

காணப்படாத பகவானை ஸ்தோத்திரம் செய்தல்—தேவர்களுக்கு கஷ்டம் உண்டாயிற்று. காரணம்? துர்வாஸ மகரிஷியின் சாபமாம். அதற்குக் காரணம்? அதற்குக் காரணம்? இப்படியே கேட்டுக்கொண்டு போனால் கடைசியில் பகவானிஷ்டம் என்று முடியும். தாத்தா பிரம்மாவிடம் சொன்னார்கள்; பிரம்மாவுக்கும் பகவானை ஞாபகமூட்டினார்கள். இல்லாவிட்டால் அவர் காரியத்தில் (ஸ்ருஷ்டியில்) அவர் ஆழ்ந்திருப்பார். பிரம்மாவுக்கு பகவான் ஏன் இப்படியெல்லாம் செய்கிறார் என்று தெரியாது. கேட்டுத் தெரிந்துகொள்ளவும் ஆத்திரமில்லை. தேவர்கள் வந்துவிட்டார்கள். பகவான் "க்ஷேமம விதாஸ்யதி ஸ ந:" என்று சொல்லித் தனக்குப் பகவானை ஸ்தோத்திரம் செய்யும் பாக்கியம் கிடைத்தது என்று எண்ணி சந்தோஷித்து, காணப்படாத-ஆனால் முன்னமே கேட்கப்பட்டிருந்த—பகவானைப் புகழ்ந்தார். நீங்களும், நீலபாலன் எதிரில் இல்லையே; அவனை எப்படிப் புகழ்வது? அவன் காதில் விழாதே! நம்முடைய, அவனைப்பற்றிய புகழ்ச்சி அரண்ய—ருதிதமாய் விடுமோ? என்றெல்லாம் ஆலோசிக்காமல், எப்பொழுதும் அவனைப் புகழ்ந்துகொண்டே இருக்கவேண்டும். "என்ன பயன்?" என்று கேட்கிறீர்களா? இந்தக் காணப்படாத பகவானை எப்பொழுதும் புகழ்ந்து கொண்டேயிருந்தால்தான் உயிர் உடலிலிருக்கும் என்று தோன்றும். இதுதான் அதன் பலன்.

ஒரு வஸ்துவினிடத்திலும் த்வேஷம் கூடாது:–காணப்படாத பகவானைப் புகழ்ந்தார். பகவான் பிரம்மாவுக்கு மட்டும் காணப்பட்டார். அவர் சொன்னார், "உங்களுக்கும் காரியம் ஸாதிக்கவேண்டுமென்றிருந்தால் எதிரிகள் காலிலும் விழவேண்டும். காரியம் ஸாதித்த பிறகு அவர்களை லட்சியம் பண்ண வேண்டாம்" என்றார்.

பெரிய காரியம் சாதிக்க வேண்டியதாயிருக்கும் சமயத்தில் சத்துருக்களையும் சிநேகம் செய்து கொள்ளவேண்டும். காரியம் ஸாதித்தபிறகு நீங்களும் (தேவர்களும்) அஸுரர்களும் பாம்பும் எலியும் போல் ஆகிவிடுங்கள்" என்றார். இது எவ்வளவு ரஸமாயிருக்கிறது! என்ன ஆழமான அர்த்தம்! "உங்களுக்கு அம்ருதம் வேணுமா? அசுரர்களைப் போய் சிநேகம் பண்ணிக்கொள்ளுங்கள்! பால் சமுத்திரத்திலே மந்தர மலையைப்போட்டு, வாஸுகியைக் கயிறாக வைத்துக்கொண்டு கடையுங்கள்! அம்ருதம் வரும்! அதைச் சாப்பிட்டால் சண்டையில் சாகமாட்டார்கள்! சாகாமல் சண்டை போட்டுக் கொண்டேயிருக்கலாம்" என்று சொன்னதாக தேவர்கள் அறிந்தார்கள். பகவானைச் சேர்ந்தவர்கள் என்ன நினைத்தார்கள்! "பகவானை அடையவேண்டும். பகவத்-ஸ்ம்ருதியை என்றைக்கும் இழக்கக்கூடாது. இந்தப்பெரிய காரியம் சித்திக்க வேண்டுமானால் உலகத்தில் எல்லோருடனும் ஸ்நேகமாயிருக்கவேண்டும். யாரோ, டாவது நாம் சிநேகமாயில்லாத போனால் பகவான் அந்த ரூபமாய் வருவான். நாம அவனை அவமதிக்க நேரிடும். பிறகு எப்படி அவனுடைய கிருபை ஏற்படும்?"

"அத்வேஷ்டா ஸர்வபூதானம் மைத்ர: கருண ஏவ ச"—'ஒரு பிராணியையும் வெறுக்காமல் அருளும் அன்பும் நிறைந்தவனாகி'' என்ற பகவானுடைய வாக்யம் ஞாபகத்திற்கு வருகிறது போலும்! சரிதானே!

''உயிர்களிடத்தெல்லாம் என் (பகவான்) உணர்வு வருமளவும் மனம் மொழி மெய்களால் உபாசிக்கவும்'' என்ற ஸ்ரீமுகத்தால் சொன்ன வாக்கியமும் ஞாபகத்திற்கு வருமே! சரிதான். பகவத் ப்ராப்தியை விரும்புகிறவன் "ஸம சித்த விருத்தி'' யாய் இருக்கவேண்டும் என்று ப்ருது மகாராஜாகூடத் தெரிந்துகொண்டாரே! மறந்து போகவில்லையல்லவா!

காரியத்தை சாதிக்க இறங்கின பிறகு எவ்வளவோ ஆபத்துகள், இடைஞ்சல்கள் எல்லாம் வருவதுபோல இருக்கும்; அதையெல்லாம் லக்ஷியம் செய்யக்கூடாது.

அசுரர்களோடு சிநேகமாய் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டு, மேலும் பகவான் " சமுத்திரத்தைக் கடையும்போது விஷம் வரும், அதையும் கண்டு பயப்படாதீர்கள். அம்ருதத்தைத் தவிர மற்ற வஸ்துக்கள் வரும் அதில் ஆசை கொள்ளாதீர்கள். விஷத்தைக்கண்டு பயந்து ஓடினாலும், மற்ற வஸ்துக்களில் ஆசை கொண்டாலும், அம்ருதம் உங்களுக்குக் கிடைக்காது'' என்றார். பகவானைச் சேர்ந்தவர்கள் அங்கேயே இருந்து இந்த வார்த்தையைக் கேட்டு "என்னே பகவானுடைய கருணை! அவரை அடையவேண்டிய வழிகளை எவ்வளவு ரஸமாயும் அழகாயும் சொல்லுகிறார்! ஆமாம் 'பகவானுடைய கிருபை ஒன்றுதான் பெரிது' என்று எண்ணினவன்—பகவானுடைய கிருபையில் பூர்ண நம்பிக்கை கொண்டவன்—எதற்கும்—மான அவமானத்திற்கும், பிராண ஹானிக்கும்-அஞ்சான்: உலகத்தில் எதைக்கண்டும் ஆசைப்படமாட்டான்; என்றல்லவோ சொல்லுகிறார்'' என்றார்கள்.

மேலே சொன்ன மூன்று விதமான உபதேசங்களைச் சொல்லி பகவான் மறைந்தார். தேவர்கள் இதைக் கேட்டு காரியத்தி லிறங்கினார்கள். பலியிடம் சென்று அவனை ஸ்நேகம் செய்து கொண்டு பகவான் சொன்னதைச் சொல்லி அம்ருதத்தை எடுக்க பிரயத்தனப் பட்டார்கள். முதலில் மந்தர மலையைப் பிடுங்கி எடுத்து சமுத்திரத்தினருகில் தூக்கி வந்தார்கள். கொஞ்சதூரம் தூக்கி வருவதற்குள் அசுரர்களும் தேவர்களும் களைத்துப் போனார்கள். மலையைக் கீழே போட்டுவிட்டார்கள். அநேகம் தேவதைகளும் அசுரர்களும் நசுங்கி போனார்கள். "பகவான் பயப்படக் கூடாது'' என்று சொன்னாரே அது ஞாபகத்திற்கு வந்தது. பகவான் கருடாரூடராய் வந்து மலையைக் கருடன்மேல் வைத்துக் கொண்டு சமுத்திரத்தின் நடுவில் கொண்டுபோய் மத்தைபோல் வைத்தார். வாஸுகியையல்லவா கயிறாக வைத்துக் கொள்ள

வேண்டுமென்று சொன்னார். வாஸுகியிடம் சென்று, "உங்களுக்கும் அம்ருதம் கொடுக்கிறோம்" என்று அவனைக் கயிறாக ஆக்கிக் கொண்டார். பகவானும் தேவர்களும் பாம்பின் தலைப்பக்கத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அசுரர்கள் வாலைப் பிடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இந்த அவமானம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "நாங்கள் படித்தவர்கள்" என்று சொல்லிக்கொண்டு வாலைப் பிடிக்க மறுத்தார்கள். பகவான் சிரித்துக்கொண்டு தலையை விட்டு விட்டு வாலைப் பிடித்துக்கொண்டார். தேவர்களும் அப்படியே செய்தார்கள்.

சமுத்திரத்தை அப்படியும் இப்படியுமாகக் கடைய ஆரம்பித்தார்கள். கடைந்துகொண்டேயிருக்கும்போது மலை கிடு கிடுவென்று சமுத்திரத்திலே மூழ்கிப்போயிற்று. போன இடம் தெரியவில்லை. என்ன பண்ணுவது! "பகவான் ஒன்றுக்கும் பயப்படக் கூடாது" என்று சொன்னது தேவர்களுக்கு ஞாபகம் வந்தது. தேவர்கள் பயப்படவில்லை. இதைக் கண்டு அஸுரர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் தைரிம்தான். மலை மூழ்கிப் போய்விட்டதே! யாருக்குக் கவலை? "படைத்தவனுக்குத்தான் படைப்பைப் பற்றிய கவலை". பகவான் ஆமை ரூபமெடுத்துக் கொண்டு சமுத்திரத்தின் அடியிலே போய் மலையைத் தூக்கி மிதக்கும்படி வைத்துக் கொண்டிருந்தான். பெரியதிலும் பெரிய ஆமை ரூபம்! மலையைத் தாங்க வேணுமோ இல்லையோ? மறுபடியும் கடைய ஆரம்பித்தார்கள் ஆமை முதுகுமேலே மலை சுற்றுகிறது ஆமைக்கு சொரிஞ்சு கொடுத்தாற் போலே இருந்ததாம். சரி கடைந்தது என்ன ஆயிற்று? இழுத்து இழுத்து அசுரர்கள் தேவர்கள் களைத்துப் போனார்கள். யாருக்குக் கவலை? பகவான் அவர்களுக்குள்ளே புகுந்து அவர்களுக்கு பலத்தைக் கொடுத்தான். வாஸுகி-கயிறு தொஞ்சு போயிற்று. யாருக்குக் கவலை? பகவான் வாஸுகிக்கு உள்ளே போய் த்ருடமான கயிறாக ஆனான். இப்போது பலமாகச் சுற்றினால் மலை மேலே ஆகாயத்தில் கிளப்பிவிட்டது. ஒரு கையினாலே பகவான் அதை அமுக்கிப் பிடித்துக்கொண்டார். மறுபடியும் கடைந்தார்கள். மலை பொடியாகப் போய்விடும் போல் ஆயிற்று. மலைக்குள்ளே புகுந்து பகவான் அதை கெட்டியாக இருக்கும்படி செய்தார். இப்படி மலைக்குக் கீழே, மேலே, உள்ளே பகவானிருந்துகொண்டு, கயற்றிலே இருந்துகொண்டு, இழுக்கிறவர்களிடத்திலேயும் இருந்துகொண்டு இழுத்தார். ஊஹும் பிரயோஜனமில்லை. பாம்போ நெருப்பைக் கக்குகிறது. அசுரர்கள் தேவர்கள் முகம் வாடிப்போய்விட்டது. பகவானே மலைபோல் பெரிய ரூபத்தை எடுத்துக்கொண்டு ஒரு கையினால் தலையையும் ஒரு கையினால் வாலையும் பிடித்துக்கொண்டு மன்மதனைப் போன்ற ரூபத்துடன் வெகு வேகமாய்க் கடைந்தார். அந்தச் சமயத்தில் முதல் முதலில் விஷம் வந்தது. ஹாலாஹலம் என்ற பெயர் கொண்ட மகா க்ரூரமான விஷம். எட்டுத் திக்குகளையும், ஆகாசத்தையும் பாதாளத்தையும் நெருப்பினாலும், கசப்பினாலும்,

வேதனையாலும், பிராணிகளின் ப்ராண மர்மங்களைப் பிளந்து கொண்டு பரவிற்று. எல்லா உலகத்திலுமிருந்த எல்லா ஜீவ ராசிகளும் ஓட்டம் பிடித்தன. எங்கு ஓடுவது? தாய்தானே கதி; தாயாகவே இருக்கும் தாயுமானவரிடம், தாயாகவே இருக்கும் அர்த்தநாரீசுவரரிடம் ஓடினார்கள். அழுதார்கள். கதறினார்கள். பகவானான பரமசிவன் காலில் விழுந்தார்கள். அஜிதனான பகவான் சொன்னது பரமசிவனுக்குத் தெரியும். "ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். எல்லோரிடமும் ப்ரியமாயிரு" என்று சொல்லியதன் அர்த்தம் பகவானான பரமசிவனுக்குத் தெரியும்.

பகவானுடைய லீலா ப்ரபஞ்சத்தில் விளையாட்டுதான் முக்கியக் கருத்து. அந்த விளையாட்டில் ஒருவர் மற்றொருவரைக் கொல்வதுதான் சகஜம். இவ்விதம் கொல்லப்படும் தருவாயிலிருப்பவனைக் காப்பாற்றுவதுதான் பகவானுடையவும் பகவானைச்சேர்ந்தவர்களுடையவும் வேலை. இப்படிக் காப்பற்ற எத்தனிக்கும் பொழுது தன்னுடைய ப்ராணனும் போய்விடும். இவ்விதம் என்றைக்கும் போகக்கூடிய ப்ராணனையும் போகச்செய்துகொண்டும் மற்றவர்களைக் காப்பாற்றுவதே சாதுக்களின் வேலையாய் பகவானுடைய லீலா தத்வமிருக்கிறது.

எல்லா ஜீவன்களிடமும் அன்பு செலுத்துகிறவன், பகவானை திருப்தி செய்கிறான். பகவான் எப்பொழுது திருப்தி அடைந்தானோ அப்பொழுது அன்புக்கு பாத்ரமானவர்கள் எல்லோரும் திருப்தி அடைகிறார்கள். நீ எல்லோரிடமும் ப்ரியமாயிருப்பது உன் அன்பைக் காட்டும். அவர்கள் அதை அறிந்தபோதல்லவா அவர்கள் சந்தோஷிக்கப் போகிறார்கள். நீ எல்லோரிடமும் அன்பு பாராட்டினால், அப்பொழுதுதான், எல்லோரும் உன் அன்பை உணர்ந்து சுகிப்பார்கள்; திருப்தி அடைவார்கள். நீ சிலரிடம் மட்டும் அன்பு பாராட்டி, சிலரிடம் துவேஷத்தைக் காட்டினால், நீ யாரிடம் அன்பு வைத்திருக்கிறாயோ அவர்கள்கூட உன் அன்பை உணரமாட்டார்கள் என்று கருத்து. சரிதானே?

இப்படிச் சொல்லி பகவான் பரமசிவன் விஷத்தை தானே உண்டு உலகத்தின் துக்கத்தைத் தீர்த்தான். "நம: பார்வதீ பதயே". ஓடினவர்கள் திரும்பி வந்தார்கள். "பகவான் பயப்பட வேண்டாம்" என்று சொன்னானே! நாம் பயந்து போனோமோ என்று சொல்லிக்கொண்டே தேவர்களும் வந்தார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த பக்தர்கள் "ஸுதாம் அபி ஆஸ்வாத்ய" என்று சொல்லிக்கொண்டு அம்மாவை நினைத்தார்கள்.

மறுபடியும் சமுத்திரத்தைக் கடைய ஆரம்பித்தார்கள். ஒவ்வொன்றாய் சமுத்திரத்திலிருந்து புறப்பட்டார்கள். காமதேனு முதலில் வந்தது. ரிஷிகள் அதை எடுத்துக்கொண்டார்கள். உச்சைச்ரவஸ் என்ற குதிரை வந்தது. பலி அதை எடுத்துக்

கொண்டான். ஐராவதம் என்ற யானை நாலு பல்லுடன் வெளிக் கிளம்பியது. கௌஸ்துபம் வந்தது. பகவான் மகாவிஷ்ணு அதை எடுத்துக்கொண்டார். பாரிஜாதம் என்ற கல்பக விருக்ஷம் வந்தது. அது ஸ்வர்க்கலோகத்தில் தங்கியது. பிறகு அப்ஸரஸுகள் வந் தார்கள். அவர்களும் ஸ்வர்க்கத்திலேயே தங்கினார்கள். பிறகு மாதர்வான லக்ஷ்மி தோன்றினாள். இதுவரையில் பகவான் சொன் னது "ஒன்றிலும் ஆசை வைக்கக்கூடாது" என்று சொன்னது ஞாபகம் வந்தது. அம்மா வந்தவுடன் எல்லோரும் "அம்மா அம்மா" வென்று கூவ ஆரம்பித்தார்கள். அம்மா "குழந்தைகளை தான் பார்த்து என்ன ப்ரயோஜனம்? பகவானல்லவோ பார்க்க வேண்டுமென்று" எண்ணி எல்லோரையும் பகவானுடைய சர ணத்தை அடையும்படி செய்வதற்காக தானே முதல் முதலில் பக வானை நோக்கிச் சென்று அவனுக்கு மாலையிட்டாள். பகவானுக்கு திருப்தி. ஆகையால் எல்லோருக்கும் திருப்தி. வேரில் தண்ணீர் ஊற்றினால்?

"மரத்தின் வளர்ச்சிக்கு வேரில் தண்ணீர் ஊற்றுவதுபோல ப்ரபஞ்சத்தின் புஷ்டிக்கு பகவானை பூஜிக்க வேண்டும்" (பாக வதம்) என்று பிரம்மாகூட சொல்லவில்லையா!

மறுபடியும் சமுத்திரம் கடையப்பட்டது. தன்வந்தரி என்ற பெயர் பூண்ட பகவான் ஸ்வர்ண பாத்திரம் நிறைய அம்ருதத்தை வைத்துக்கொண்டு சமுத்திரத்திலிருந்து கிளம்பினார். வெளியில் வந்தாரோ இல்லையோ, அஸுரர்கள் அதைப்பலாத்காரமாய் பிடுங் கிக்கொண்டு ஓடினார்கள். தேவர்களுக்கு அழுகை அழுகையாய் வந்தது. என்ன இதைக் கேட்டால், "போரும் போரும் இந்த ஸ்வர்க்கலோகமும் தேவர்களின் வாழ்வும்" என்று தோன்று கிறதோ இல்லையோ? ஆமாம் பகவானுடைய லீலைகளை கேட்டா, என்று சொல்லத்தான் தோன்றுமா? ஆனால் தேவர்களா கட்டும், அஸுரர்களாகட்டும் வெகு காலம் அழவேண்டியிருக் காது. பகவானை நினைக்கணும். "நினைக்கிறது என்று ஏற்படுகிற போது பகவானை நினைக்காதவர்கள் கஷ்டப்பட வேண்டியதுதான். வாயைத்திறந்து பேசுவது என்று ஏற்படுகிறபோது, பகவானைச்சொல் லாத போனால் யாரானால் என்ன...? கஷ்டம்தான். சொன்னால் யார் ஆனால் என்ன? சுகம்தான்" தேவர்கள் அழுதார்கள். காரணம்? பகவான் "அழவேண்டாம்" என்று சொன்னதை மறந்தார்கள். அதனால் அழுதார்கள். அவர்கள் மறந்தால் என்ன? பகவான் அவர்களை மறப்பாரா? மறக்கவில்லை. அழுகிற தேவர்களிடம் வந்து "அழாதீர்கள்! உங்களுக்கு உபகாரம் செய்வேன்" என் றார்.

இதற்குள், அம்ருத கலசத்தைப் பிடுங்கி போனார்களே அவர் களுக்குள்ளேயே சண்டை ஏற்பட்டது. இப்படித் தமக்குள்ளே சண்டை போட்டுக் கொள்வதுதானே அசுரர்களுடைய லக்ஷணம். சண்டையிலேயே அசுரர்கள் காலத்தைப் போக்கிக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது அவ்விடத்திலேயே வெகு அழகான

ஸ்திரீரத்னம் காணப்பட்டாள். எல்லோரையும் மயக்கக்கூடிய சக்தி வாய்ந்த மோஹினி. அவளுடைய நடை, உடை, பாவனை இவைகளைக்கண்ட அஸுரர்கள் எல்லோரும் அந்த ஜகன் மோஹினியிடம் ஆசை கொண்டார்கள். பகவானுன, அந்த ஜகன் மோஹினியை, "தான் தூக்கி கொண்டு போய் தன்னுடைய பெண் சாதியாய் வைத்துக்கொண்டு விடவேண்டுமென்று ஒவ்வொரு அசுரனுக்கும் ஆசை. தேவர்களுக்கு இந்த ஆசை உண்டாக்க வில்லை. "அம்ருதத்தை தவிர வேறொன்றிலும் ஆசை வைக்க கூடா" தென்று பகவர்ன் தான் சொல்லியிழிக்கிருரே!

மோஹினியைக் கண்டு மயங்கின அசுரர்கள், பல்லைக் காட்டிக் கொண்டு அவளிடம் சென்று, "நான் முன்னே நான் முன்னே" என்று சொல்லிக்கொண்டு அவளைத் தொடுவது போல் நின்று பேசினுர்கள். என்ன பேசினுர்கள் என்றும், என்ன பதில் பகவான் கொடுத்தான் என்றும் அவர்களுக்கு தெரியாது. கவலையும் இல்லை. ரூபமாதுர்யத்தில் மயக்கம். கையிலிருந்த அம்ருத கல சத்தைக் கொடுத்து எல்லோருக்கும் சமமாய் நியாயமாய் பங்கிடச் சொன்னுர்கள். அசுரர்கள்கூட என்ன நினைத்தார்கள்? ஸ்திரீ ஜாதிக்குதான் சமநிலை, நியாயம், தர்மம் இதெல்லாம் தெரியு மென்று எண்ணினுர்கள். (பிறகு ஏமாந்தார்கள் என்பது இப் பொழுது எண்ணக்கூடாது.) பகவான் அந்த கலசத்தை வாங் கிக்கொண்டு, "இப்படி ஒரு தேவடியாளான என்னை நம்பி இதைக் கொடுக்கிறீர்களே! ரொம்ப ரொம்ப அத்யயனம் செய்து இப்படி மயங்கி ஏமாந்து போகிறீர்களே!" என்றுர். "பாதகமில்லை நீ ஏமாற்றி ஏமாறும் பாக்கியம் எங்களுக்கு கிடைக்கட்டும் என்று அசு ரர்கள் சொன்னுர்கள்". தீரர்கள் தானே!

தேவர்கள், அசுரர்கள் ஸ்னனம் செய்து வந்தார்கள். "வேத ரிக்குகளைச்" சொல்லிக் கொண்டு முதல் வரிசையில் அசுரர் கள் உட்காந்தார்கள். தேவர்கள் கோடியில் உட்காந்தார்கள். பகவான் அம்ருதத்தை தேவர்களுக்குப் பரிமாறினுன். அசுரர் களுடன் பேசினுன். தேவர்களுக்குக் கிடைத்தது அம்ருதபானம் வாய் வழியாய் வயிற்றில். அசுரர்களுக்கு கிடைத்தது பகவா னுடைய ரூபமாதுர்யம் கண் வழியாய்; பேச்சின் இனிமை காது வழியாய் உள்ளே சென்றது. பகவானைப் பாரபக்ஷமுடையவர் என்று சொல்ல முடியுமா? அசுரர்கள் பாக்கியசாலிகளா? தேவர் கள் பாக்கியசாலிகளா? நீங்கள் தான் சொல்லவேண்டும். எனக்குத் தெரியவில்லை.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

அவசரக் குழந்தை!

கொச்சி திருவாங்கூர் ராஜ்யத்தில் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பஸ்ஸில் ஒரு கர்ப்பிணி பிரசவித்து விட்டாளாம். கிராமவாசியான இந்த ஸ்திரீ பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்க்கென்றேதான் பஸ்ஸில் ஏறினளாம். பஸ்ஸில் ஏறி, ஆஸ்பத்திரியை அணுகுவதற்கு முன்பே வலி ஏற்பட்டுவிட்டதாம். டிரைவர் மிகச் சாமர்த்தியமாக பஸ்ஸிலிருந்த மற்ற பிரயாணிகளை இறங்கச் சொல்லி பஸ்ஸை சாலை ஓரத்தில் நிறுத்தினர். பஸ் நின்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் பிறந்த பச்சிளம் குழந்தையின் குரல் கேட்டது.

டிரைவரும் மற்ற பிரயாணிகளும் நிம்மதியடைந்தனர். பிறகு இந்த ஸ்திரீயை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு பஸ் பிரயாணத்தைத் தொடர்ந்தது.

குறைந்த சார்ஜில் ரூம்கள் வாடகைக்கு விடப்படும்
கப்பல் பிரயாணிகளுக்கும் வெளியூர்வாசிகளுக்கும்
தங்குவதற்கு இடவசதியுண்டு.

சிங்கப்பூர் விடுதி

தி ஸௌத் இண்டியன் லாட்ஜ்
1/8, வானல்ஸ் ரோட்,
எழும்பூர் P. O. மதருஸ்-8.

S. I. R. ஐஸ் பேக்டரி எதிரில் இருக்கிறது.

Prop: **D. VELAYUTHAM PILLAI**
(Passage Broker)

ஒரு விமானப் பிரயாணியின் கற்பனையிலுதித்த துறைமுகம்.



இந்தியாவிற்கு ஒரு புது வாசல்

★

இந்தியாவில் தோன்றியுள்ள ஒரு புதுநகரமாகும் காண்ட்லா. இங்கு முன் காலத்திலிருந்தே ஒரு சிறு துறைமுகம் உண்டு. ஒரு சிந்திக்காரரின் கற்பனையிலிருந்து தோன்றியதாகும் இப்பொழுது இங்கு புதிதாக வளர்ந்து வரும் நகரம்.

பம்பாயைப் போல் ஒரு மிகப் பெரிய துறைமுகமாக இதை அமைப்பதற்கு மிகத் தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பிரமாண்டமான கப்பல்கள் கூட இத் துறைமுகத்திற்கு வருவதற்கு வசதிகள் உண்டு. கடலோரப் பிரதேசமானதால் இங்கு ஏராளமான உப்பளங்கள் இருக்கின்றன. இந்தியாவின் மிகப் பெரிய உப்புத் தயாரிப்பு ஸ்தாபனம் இங்குதான் உள்ளது. கட்ச் என்ற சிறு ராஜயத்திலிருக்கிறது காண்ட்லா. குஜராத்திற்கு வடக்கிலிருக்கும் கட்ச் ராஜ்யத்திற்கும் இந்தியாவின் மற்ற இடங்களுக்கும் போக்குவரத்து அக்காலத்தில் அவ்வளவாக இல்லை. இதற்குக் காரணம் இதன் நாலா பக்கங்களிலும் நீர் மயமாயிருப்பதேயாகும்.

பருவ மழைப் பிரதேசங்களுக்கு அப்பாலிருப்பதால் கட்ச் ராஜ்யத்தில் ஜலக் கஷ்டமும் அதிகம். இந்தக் காரணங்களினாலேயே காண்ட்லா வெகு காலமாய் முக்கியத்துவம் பெறாமலிருந்தது.

கட்ச் ராஜ்யத்தின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்து போக்குவரத்து வசதிகளை அதிகரித்து தொழிற் சாலைகளை ஏற்படுத்தி, குடி தண்ணீர் வசதியையும் அளித்தால்தான் காண்ட்லாவிற்குள்ள இயற்கை வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்த முடியுமென்பதை சிந்திக்காரரான பிரதாப் தயாள்தாஸ் என்பவர் உணர்ந்தார். சிந்து மாகாணத்திலிருந்து அநேகாயிரம் ஹிந்துக்கள் தங்கள் உடைமைகள் யாவையும் பறிகொடுத்து இந்தியாவிற்கு ஓடோடியும் வந்தபோது அவர்களுக்கெல்லாம் வசிப்பதற்கும் தொழில்களிலும், வியாபாரங்களிலும் ஈடுபடுவதற்கு வசதிகள் மிகத் தேவையாயிருந்தன. முக்கியமாக இந்த சிந்தி அகதிகளை உத்தேசித்துத்தான் ஸ்ரீ தயாள்தாஸ் காண்ட்லா துறைமுகத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்கும், அதை அபிவிருத்தி செய்வதற்கும் முயன்றார். சிந்து புனருத்தாரண சங்கம் என்ற ஒரு சங்கத்தை துவக்கி வைத்தார்.

இந்திய சர்க்காரின் உதவியோடு காண்ட்லாவை ஒரு தனி நகரமாக்குவதற்கும் முயற்சிகள் ஆரம்பமாயின. துறைமுகத்

புது துறைமுகத்தின் கம்பீரத் தோற்றம்

ஒரே சமயத்தில் நாலைந்து கப்பல்கள் வந்து தங்க வசதிகள், கப்பல்கள் பழுதுபார்ப்பதற்குத் துறை, அயல் நாடுகளிலிருந்து வந்திறங்கும் சரக்குகளை சேமிக்கும் கிடங்குகள், 60 டன் வரை பளுவுள்ள சாமான்களை இறக்கு வதற்கும் ஏற்றுவதற்கும் தகுந்த பிரம்மாண்ட 'கிரேன்' முதலியவற்றைப் படத்தில் காணலாம். எண்ணெய்க் கப்பல்கள் தங்குவதற்குப் பிரத்தியேக துறை வசதியுண்டு.

தைக்கொண்ட பகுதிக்கு 'காந்திதாம்' என்ற பெயரும் சூட்டப்பட்டது. காண்ட்லா துறைமுகம் மூலம் குஜராத் ராஜஸ்தானம், அஜ்மீர், டில்லி, கிழக்குப் பஞ்சாப், மேற்கு உத்தரப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களின் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரங்களுக்கு மிகவும் பயனுண்டு. இந்த ராஜ்யங்களின் இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரம் நேற்று வரையிலும் பம்பாய் துறைமுகம் மூலம்தான் நடைபெற்று வந்ததனால் வியாபாரிகள் சுமார் ஒரு கோடி ரூபாய் வரையிலும் ரெயில் கட்டணம் செலுத்த வேண்டி வந்தது.

காந்திதாம்



தேசபிதா காந்திஜியின் நினைவுச் சின்னமாய் எழுப்பப்பட்டுள்ள கட்டிடம். இதில் காந்திஜியின் அஸ்தியில் ஒரு பாகம் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

காண்ட்லா துறைமுக வசதி கிடைப்பதனால் வியாபாரிகளுக்கு இந்த ஒரு கோடி ரூபாய் மிச்சமாகிறது.

காண்ட்லா துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டத்தை முடிப்பதில் $13\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிடுவதாய் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் நான்கு பெரிய கப்பல்களும், ஆறு சிறிய கப்பல்களும் வந்து தங்குவதற்கும் சரக்குகளை இறக்குவதற்கும், ஏற்றுவதற்கும் மின்சார-விசை கொண்ட 'கிரேன்'களும் சரக்குகளை வைப்பதற்கு மூன்று பிரமாண்டமான கூடாரங்களும் மற்றுமனேக துறைமுக வசதிகளும் 1957-ம் ஆண்டிற்குள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

துறைமுகத்தை அமைப்பதில் மட்டுமல்ல சிந்து புனருத்தாரண சங்கம் சிரத்தையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய துறைமுகத்திற்கேற்ற வியாபாரத்தையொட்டி எத்தனை வியாபார ஸ்தாபனங்கள், எத்தனை உத்தியோகஸ்தர்கள், எத்தனை தொழிலாளர்கள்—இவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் எத்தனை சில்லறை வியாபாரிகள், இவ்விடத்தில் தோன்றக் கூடும்! இவற்றிற்கெல்லாம் வேண்டிய கட்டிட வசதிகளையும் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவற்றிற்காக ஒரு புதிய நகரத்தையே நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். அநேக மாயிரம் மக்கள் வசிக்கும் நகரமென்றால் அதில் குழாய்த் தண்ணீர், சாக்கடை வசதி,

நல்ல சாலைகள், பால் பண்ணை, தேவாலயங்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிகள், சினிமா முத

தேவாலயம்



சிற்பச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் காந்திதாமியிலுள்ள தேவாலயம்.

லியன தேவையல்லவா? இவையனைத்தையும் இங்கும் அமைத்துள்ளார்கள். ஆயிரக் கணக்கான விருக்ஷங்களையும் பயிரிட்டதன் மூலம் முன் காலத்தில், பாம்புகள் ஏராளமாய் இருந்ததனால் மக்கள் வாசத்திற்கு அருகதையற்றிருந்த இந்த இடம் வளர்ந்து வரும் ஒரு அழகிய நகரமாய் காட்சியளிக்கிறது.

இந்தத்துறைமுகமும், அதற்கு அருகிலுள்ள நகரமும் மேல் நாட்டு நிபுணர்களின் உதவியைக்கொண்டேதான் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளைச் சுற்றி நாலா பக்கங்களிலும் தொழிலாளர்களின் இருப்பிடங்கள் திட்டமின்றி எவ்வாறேனும் வளர்ந்து பிறகு மக்களுக்கும் சர்க்காருக்கும் சகஜமாக ஏற்படும் அவதியை தூரதிருஷ்டியுடன் தவிர்த்து விட்டார்கள்.

அவரவர்கள் அந்தஸ்து பிரகாரம் ஜாகை வசதிகளும் இதையொட்டிய வியாபார வசதிகளும், பள்ளி, தேவாலயம் போன்ற மற்ற வசதிகளும் ஆங்காங்கு அமைத்துள்ளார்கள். மக்களின் எண்ணிக்கை அதிகமாக ஆக இந்த வசதிகளையும் பெருக்கிக்கொண்டு போவார்கள். இப்படிச் செய்வதால் ஜன பெருக்கடி ஒரே இடத்தில் ஏற்படுவதை தடுக்கலாம்.

துறைமுகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் துறைமுகத்தருகே ஜாகை வசதிகளும் அமைத்தாகிவிட்டன.

ரெயில்வே வசதிகளும் காந்திதாமுக்கு வந்தாகிவிட்டது. மிகப் பெரிய ரயில்வே ஸ்டேஷனையும் இப்போது இங்கு காணலாம். வெளியூர்களுக்குச் செல்லும் விமானங்கள் தங்குவதற்குகந்த ஒரு விமான நிலையமும் இங்கு ஏற்பாடாகி வருகிறது.

விமானத்தில் பறந்துகொண்டிருந்தபோது ஒருவர் இப்போது காண்ட்லாவை அமைத்துள்ள இடத்தை நோக்கி ஒரு மிகப் பெரிய துறைமுகத்தை யமைப்பதற்கு இது மிகவும்

காந்திதாம் ரெயில்வே நிலையம்



அழகான தோற்றத்துடன் விளங்கும் ரெயில்வே நிலையம்.

ஏற்ற இடமாகும் என்று நினைத்தாராம்! இவ்வாறு நினைத்தவர் தான் ஸ்ரீ பிரதாப் தயாள் தாஸ். அவர் கற்பனையிலிருந்து விளைந்த சிருஷ்டியாகும் இன்று மிகத் துரிதமாக வளர்ந்து வரும் காண்ட்லா துறைமுகம்.

Adapted from article by "D. A. J." in *Burmah-Shell News*, Bombay.

ASOKA SCENTED BETELNUT POWDER

விஞ்ஞானம் படுத்தும் பாடா?
விதியின் விளையாட்டா?



★

விமான நிலையங்களுக்கருகே வாசஞ் செய்வோர்களுக்கு மிகப் பெரிய உபத்திரவங் களுண்டு. இரவும் பகலும் விமான நிலையங்களில் விமானப் போக்குவரத்தினால் ஏற்படும் சப்தத்தினால் நித்திரைக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படு கிறது. சில சந்தர்ப்பங்களில் விபத்துகள், விமானங்கள் நிலையத்திலிருந்து புறப்படும் போதோ அல்லது நிலையத்தை யடையும் போதோதான் நிகழ் கின்றன. இதனாலும் விமான நிலையங்களுக்கருகே வசிப்பவர் களுக்குத்தான் வேதனையும், துன்பமும் ஏற்படுகின்றன.

விமான உற்பத்தியும் அவற்றின் தரமும் தினமும் அபிவிருத்தியாகி வருகின்றன. ஒரு மணி நேரத்தில் நூறு மைல் சஞ்சாரம் செய்வது அதிசயமாக இருந்த காலம் மலையேறி விட்டது. இப்பொழுது தினந் தோறும் வாடிக்கையாய் அநேக நகரங்களுக்குச் செல்லும் விமானங்கள் கூட மணிக்கு 200 மைலோ அல்லது அதற்கு மேலோ பறந்து செல்கின்றன. விமானங்களில் புது ரகங்கள் மணிக்கு 600, 700, 1000 மைல் வேகம் வரை பறந்து செல்வதற்காக விமானங்கள் தயாரிக்கப் பட்டவை.

இவ்வளவு வேகமாக விமானங்கள் பறந்து செல்வதில் ஒரு விநோதமுண்டு. "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்ற பழமொழிப் பிரகாரம் எந்தப் பொருளும் நம் கண் முன் தோன்றுவதற்கு முன் அதிலிருந்து வெளியாகும் சப்தம்தான் நமக்கு முதலில் கிட்டுகிறது. ஆனால் இப்போது நவீன முறையில் தயாரித்துள்ள விமானங்கள் சப்தத்தைவிட வேகமாய்ச் செல்கின்றன. சப்தத்தைவிட வேகமாய்ச் செல்வதை இயற்கை எதிர்க்கிறது. ஆனால் மனிதனுக்கு விஞ்ஞானம் அளிக்கும் சக்தியால் இந்த எதிர்ப்பையும் மனிதன் வெல்கிறான். இப்படி மனிதனுக்கு வெற்றி கிடைக்கும்போது புது ரக விமானங்கள் சப்தத்தின் வேகத்தைவிட அதிக வேகத்தை யடைகிறது. இம்மாதிரி விமானங்கள் சப்தத்தை விட அதிக வேகத்தை யடையும் போது (அதாவது சப்தத் தடை என்ற இயற்கையால் வகுக்கப்பட்ட எல்லையைத் தாண்டும் போது) இடி முழக்கம் போன்ற சப்தமுண்டாகிறது. விமானங்கள் இம்மாதிரி சப்தத் தடை எல்லையைத் தாண்டும்போது ஆகாயத்தில் வெடி குண்டுகள் வெடிக்கும் போது உண்டாகும் குழப்ப நிலை ஏற்படுகிறது. சமீபத்தில் லண்டன் நகரத்தில் இவ்வாறு நிகழ்ந்த குழப்பத்தைப் பற்றிப் பத்திரிகைச் செய்திகள் வந்திருந்தன. ஒரு தினம் அதிகாலையில் லண்டன் நகரத்தின் ஒரு பகுதியில், இரண்டாம் மகாயுத்தத்தின் போது வீழ்ந்துகொண்டிருந்த

ஜெர்மன் குண்டுகள் விழுந்தது போல் சப்தம் கேட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் படுக்கையை விட்டுத்திடுக்கிட்டுஎழுந்தனர். அநேக பெரிய வீடுகளின் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து சேதமாயின. போலீசாரின் தீவிர விசாரணைக்குப் பின்னர் இந்த குழப்பங்களுக்கெல்லாம் காரணம் ஒரு புது ரக விமானத்தின் பரீக்ஷைகள் தானென்று தெரியவந்தது.

சப்தத்தடை எல்லையைத் தினந்தோறும் தாண்டிக் கொண்டிருக்கும் விமானங்களுக்கென்று இங்கிலாந்திலுள்ள பிரத்தியேக ஒரு நிலையத்தினருகே வசிக்கும் ஒரு விவசாயியின் பரிதாபகரமான நிலை, உதவிசளோடு, உபத்திரவமும் விளைவிக்கும் விஞ்ஞான விந்தைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

இங்கிலாந்தில், இவர் வசிக்கும் பகுதியிலே ஒரு மகா யுத்தம் நிகழ்ந்தால்கூட இன்று இவருடைய விவசாயத்திற்கு நேரிட்டுக் கொண்டிருக்கும் சேதங்களை விட அதிகச் சேதம் உண்டாகாதாம்.

சென்ற ஒரு வருஷத்தில் இவர் வீட்டின் ஜன்னல் கதவுக் கண்ணாடிகளெல்லாம் 17 தடவைகள் சிதறிப்போயின.

இவர் தோட்டத்தில் விளைந்த 28,000 முட்டகோஸ்களை காய்கறி மார்க்கெட் அதிகாரிகள் விற்பனை செய்யக்கூடாதென்று தடை விதித்தனர். காரணம் முட்டகோஸ்கள் யாவும் கண்ணாடித் தூள்களால் நிறைந்திருந்தன.

சமீபத்தில், இவர் தோட்டத்தில் விளைந்ததும், சுமார் 40,000 ரூபாய் விலை மதிப்புக் கொண்டதுமான தக்காளிப் பழங்களை நகர சுகாதார அதிகாரிகள், எவரும் உபயோகிக்காமலிருக்குமாறு குழி தோண்டிப் புதைக்கவோ, எரித்துவிடவோ வேண்டுமென உத்தரவிட்டனர். இதற்கும் காரணம் தக்காளிப் பழங்களனைத்திலும் கண்ணாடித் தூள்கள் நிறைந்திருந்ததேயாகும்.

இதையெல்லாந் தவிர இவருடைய காய்கறித் தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆட்கள் கிடைப்பதும் மிகச்சிரமமாயிருக்கிறதாம். பறந்துவரும் கண்ணாடித்துண்டுகளால் உயிருக்கு எப்போது ஆபத்து ஏற்படுமோவென யாவரும் பயப்படுகிறார்களாம்.

சப்தத் தடை எல்லையைத் தாண்டும் விமானங்கள் மூலம் இந்த விவசாயிக்கு இதுவரையிலும் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறதாம். சர்க்காரிலிருந்து நஷ்ட ஈடு 20,000 ரூபாய்களுக்கு குறைவாகத்தான் இதுவரையிலும் இவருக்குக் கிடைத்துள்ளதாம்.

இதை விஞ்ஞானம் படுத்தும் பாடு என்பதா அல்லது விதியின் விளையாட்டென்று கூறுவதா?

Based on a *Nafen* Report.

Mercury Chit Funds Ltd.

22-A, Narasingapuram Street

MOUNT ROAD, MADRAS

STARTING SHORTLY

NEW SERIES OF

AUCTION CHITS

20 Tickets of Rs. 50/- (Capital Rs. 1,000)

Date of Commencement 10—8—'55

PARTICULARS ON APPLICATION

K. R. SUBRAMANIA IYER

Managing Director.

தொடர் நாவல்

உயிர்க் கனல்

"ஸ்ரீரா"

அடியினால் ஏற்பட்டவலி அதிகமாக இருந்தும் பிரச்னையின் சிக்கலில், அதிசயத்தில் அயர்ந்து போனவனாய் அழ மறந்துவிட்டான். சென்ற இரவு நடந்த சம்பவங்களை ஞாபகத்துக்கு வரவழைத்துக் கொண்டான்.

பொம்மையைத்தான் திரும்பக் கொண்டுவந்து படியில் வைத்துவிட்டது நிச்சயம்—சந்தேகமேயில்லை. அப்புறம் வாயிற்பக்கம் சியாமளியையும் அழைத்துச் சென்று அவளை வீட்டுக்கு வழியனுப்பியதும் நிச்சயம். உடனே உள்ளே ஓடி வந்து தன்னறைக்குச் சென்று படுத்தது தான் தெரியும். வேறு ஒன்றும் தெரியாது.

வேறு வழி ஏதும் நியாயமாகப் புலப்படவில்லையாகையால், வீட்டுக்குச் செல்லுவதுபோல் சென்ற சியாமளி தான் திரும்பி வந்து திருட்டுத்தனமாகப் பொம்மையை எடுத்துச் சென்றிருக்க வேண்டும்! ஆமாம்... ஆமாம்...அவளுக்கு அந்த பொம்மைகளிடம்—குறிப்பாகப் பூனையிடம்—இருந்த ஆசை அவனுக்குத் தெரியும். முந்திய இரவில் என்ன கொஞ்சு கொஞ்சினாள் அவள் அவற்றை வைத்துக்கொண்டு!

ஆனால் அப்படிப்பட்ட துணிச்சல் அவளுக்கு ஏற்பட்டிருக்க முடியுமா? இந்தப் பிரச்னை வெங்கிட்டுவுக்கு எழுந்திருக்க நியாயமில்லை.

இந்தச் சிந்தனைச் சுழலினூடே முதுகில் விழுந்த மேற்கொண்ட மொத்தல்களின் பிரதிபலிப்பு மூளையின் உணர்ச்சிப் பகுதியில் மோதிற்று. அவன் கலங்கினான். நிதானமிழந்த தாயிடம் என்ன பேசுவது என்று அவனுக்குத் தோன்றவில்லை. அர்த்தமற்ற முறையில் "இல்லை, இல்லை" என்று கூறினான்.

படபடப்பு சற்று ஓய்ந்ததும் சரோஜா கொஞ்சம் நின்று யோசனை செய்தாள். வெங்கிட்டு தானாக மனமொப்பி அந்தப் பொம்மையை எடுத்து சியாமளியிடம் கொடுத்திருக்கமாட்டான் — ஒருக்கால் அவனுக்குத் தெரியாமல் அவள் அதை ஒளித்து, மறைத்து எடுத்துச் சென்றிருக்கலாம், இப்படித்தான் அவளது சந்தேகம் தனது கடைசியான உருவத்தை நிர்மாணித்துக்கொண்டது.

வெங்கிட்டுவை மறுபடியும் இரண்டு மொத்து மொத்திவிட்டு "ராத்திரி பகல் கிடையாது அந்த துஷ்டக் குட்டியுடன் என்ன விளையாட்டு. காதறுந்து போகும்!" என்று இரைந்தாள். வெங்கிட்டுவின் பங்குக்குத் தன் கோபத்தை முடித்துக்கொண்டாள் அத்துடன்.

காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் ஆரம்பித்த இந்தக் குழப்பம் வீடு முழுவதும் பரவிப் போயிற்று. சபேசய்யர், பாலசுந்தரம் இருவரும் கூட இந்த துக்கச் செய்தியில் பங்கு கொண்டார்கள் என்று கூறத் தேவையில்லை. இருந்த போதிலும் இந்தப் பிரச்னை சம்பந்தமான மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு வகுக்கப்பட்ட செயற்குழு

வில் அவர்களுக்கு இடம் கிடைக்க வில்லை. தங்கம்மாளும், ஸரோஜா வும் அக்குழுவின் அதிகார பூர்வ மான அங்கத்தினர்களாகவும், வெங்கிட்டு அதிகாரபூர்வமற்ற அங்கத்தினர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

ஒன்றுமறியாத எதிர் வீட்டு அப் பாவிக்குட்டி சியாமளியை எல்லோரும் சந்தேகித்தார்கள். அவளிடம் தங்கள் கோபத்தை வளர்க்க ஆரம்பித்தார்கள். ஆனால் எபபடிப் போர் தொடுப்பது என்பதே கேள்வி!

நேரடியாக சியாமளியின் வீட்டுக்குச் சென்று அந்தக் குடும்பத்தின் முன்னிலையில் அவளைக் குற்றம் சாட்டுவது பிரயோசனமாயிருக்காது. அது மாத்திரமல்ல—விபரீதமான, உபயோகமற்ற சண்டைகளில் வந்து முடியும்—இதுவே தங்கம்மாள், சரோஜா ஆகியோரின் முடிவு.

வெங்கிட்டு தனது சந்தேகத்தைத் தன் குடும்பத்தாரிடம் விளக்க ஒப்ப வில்லை. அது மேலும் குழப்பங்களை உண்டாக்கிவிடும்; தனது இரவு நடவடிக்கைகள் அதிபலமானால் மேற்கொண்டு உதைதான் கிடைக்கும். எனவே சியாமளியைத் தனியே சந்தித்து விளக்கம் கேட்டு முன்னேற்றும் வரையில் ஒன்றும் பேசுவதில்லையென்று முடிவு செய்துகொண்டு மௌனமாயிருந்துவிட்டான்.

அத்தியாயம் 13

வெங்கிட்டுவின் வீட்டில் காணமற் போன பூனை சியாமளியின் வீட்டில் வந்து அகப்பட்டுப்போனது அந்தக் குடும்பத்தில் ஏற்படுத்திய களேபரங்களைப் பற்றி அடுத்தபடியாக கவனிக்க வேண்டுமல்லவா?

சியாமளியின் தாயார் சுந்தரி அம்மாள் ஸரோஜாவைப் போல் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கொலுவுக்கு முன் சென்று நின்று வேடிக்கை பார்க்கவில்லை. அவள் தன் பாட்டில் தனது காலை வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தாள். சிறிது நேரம் கழித்துத்தான் அந்த அந்நிய சொத்து அவள் கண்ணில் பட்டது.

இது அவளுக்கு ஆச்சர்யத்தையே கொடுத்தது. அந்தப் பூனையை அவள் முன்னர் பார்த்ததேயில்லை. முன்னிரவில் தான் கொலுவில் வைக்காத, காணாத அந்த வேற்றுப்பொருள் எப்படி வந்து அங்கே அமர்ந்திருந்தது என்ற பெரிய கேள்வி புதிர்போல் கிளம்பிற்று.

“இது எங்கிருந்து வந்து குதிச்சுது?” என்று தன்னையே பல தடவை கேட்டுக்கொண்டவள் தூங்கி எழுந்ததும் வாயிற்பக்கம் சென்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த தன் அருமைப் பெண் சியாமளியைக் கூப்பிட்டாள். கூப்பிடும் போதே சென்ற இரவில் ஒரு தடவைக்கு இரு தடவையாக அந்தப் பெண் எதிர் வீட்டு நாய், பூனை பொம்மைகளின் அழகைப் பற்றி விபரித்து ஆசையுடன், பொறாமையுடன் குறிப்பிட்ட விஷயங்கள் ஞாபகம் வந்தன.

தாய் துணுக்குற்றாள். எவ்வளவு கொடுமையான குற்றம்! தன் பெண்ணா இந்தப் “பெரிய” காரியத்தைச் செய்து விட்டாள்? ஏதோ நினைத்தவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். அதற்கு என்ன அர்த்தம் என்பது அவளுக்குத்தான் தெரியும் போலும்.

கொலுவருகில் நெருங்கி அந்தப் பூனையைக் கையிலெடுத்துப் பார்த்தாள். கொழு கொழுவென்று ரொம்ப அழகாகத்தான் இருந்தது. உயிருள்ளதாயிருந்தால் ஒரு படி பால் கூடக் குடிக்கும்!

வாயிலிலிருந்து உள்ளே வந்த சியாமளி தன் தாய் நின்றிருந்த பாணியையும் அவள் கையில் வைத்திருந்த வஸ்துவையும் கண்டு திடுக்கிட்டாள்.

"என்னம்மா அது?" என்று குதித்துக்கொண்டே நெருங்கி வந்தாள், கையை நீட்டிய முறையில். ஆம்... அதே பூனைதான்...தான் நேற்று கொஞ்சிய பூனைதான்...வெங்கிட்டு வின் வீட்டுப் பூனைதான்...ஆனால் தர்மத்துக்கு—அல்லது பலாபலன்களுக்கு—பயந்து, எந்த முறையிலும் ஸ்வீகரித்துக் கொள்ள முடியாத அதே வஸ்து!

காலையில் அம்மா எழுந்து எதிர் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டுக் கொடுப்பதாக வாங்கி வந்திருக்கலாமென்று தோன்றிற்று. இந்தச் செயலுக்குக் அதிகாலை சரியான வேளையல்ல என்றும் தோன்றிற்று. வெங்கிட்டு வீட்டுப் பூனை அங்கே வந்திருக்கக் காரணமென்ன? வேறு எந்த வழியில் இது நேர்ந்திருக்கும்.

இல்லை...ஒருக்கால் தனக்குத் தெரியாமல் எதிர் வீட்டுப் பூனையைப் போலவே அச்சாகத் தற்செயலாக இருக்கும் இந்தப் பொம்மையை அம்மா வாங்கி வைத்து, கொலுவில் முதல் நாள் ஏற்றாமல் இருந்திருக்கலாம்! இதுதான் ஓரளவு நம்பக் கூடியதாக இருந்தது.

பொம்மையில் லயித்துப்போயிருந்த தாய் சியாமளியின் பக்கம் திரும்பினாள். பொம்மையை நீட்டிப் பிடித்த வண்ணம் "இதென்ன விபரீதம்" என்று கேட்டாள் சிரித்துக் கொண்டே நீ செய்திருக்கும் திருட்டுத் தனம் எனக்குத் தெரியும் என்று தொனிக்கும்படி இருந்தது அந்தச் சிரிப்பு.

விபரீதம் என்பது சியாமளிக்குச் சற்றுப் புரியாத சொல்லாகத்தான் இருந்தது. முழித்துப் பார்த்துவிட்டு "என்னம்மா?" என்று கேட்டாள். கேட்கவேண்டுமென்று நினைத்த ஆவலான வேறு கேள்விகள் வாயை விட்டு வெளிக் கிளம்பவில்லை. ஒன்றும் விளங்காமல் பொம்மையையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நிஜத்தைச் சொல்லிவிடு" என்று சுருக்கமாக அதட்டினாள் தாய். அதட்டும்போது சென்ற இரவில் கடைசியாக வீடு திரும்புங்கால் சியாமளி தன் பாவாடைக்குள்ளோ, கவுனுக்குள்ளோ எதையாவது மறைத்து வந்ததாகக் கண்ணில் காட்சி ஏதும் பட்டது ஞாபகமிருக்கிறதா என்று நினைத்துப் பார்த்தாள். ஒன்றும் விளங்கவில்லை. காணாத காட்சியை நினைவில் கற்பிப்பது சற்றுக் கடினமான வேலைதானே. எதிர்பார்த்திருந்தால்தானே இத்தகைய நினைவெல்லாம் தங்கும்!

"திருடக்கூட ஆரம்பித்துவிட்டாயா?" என்று கேட்டுக்கொண்டே கோபத்தை வரவழைத்துக்கொண்டாள். தாய்மையின் 'ஒழுக்க ஆசிரியப்' பகுதி கொஞ்சம் வேலை செய்ய ஆரம்பித்தது. முகம் சுணுங்கிற்று.

சியாமளிக்கு இப்போதுதான் கொஞ்சம் விஷயம் விளங்கிற்று. தனது தாயாருக்கு இந்தப் பொம்மை அங்கிருந்த காரணம் தெரியாது. "ரொம்ப ஆச்சரியமாயிருக்கே!" என்று நினைத்தாள். தாயின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். மூளையும் வேறு துறைகளில் துழாவிக்கொண்டிருந்தது. வேறொரு பக்கம் பாதை திறந்திருந்தது போல் பட்டது.

"எனக்கென்ன தெரியும்? அப்பா ராத்திரி வாங்கிண்டு வந்திருப்பா?" என்றாள் பளிச்சென்று சியாமளி.

சுந்தரி அம்மாள் யோசனை செய்து பார்த்தாள். "அந்தப் பிராம்மணனாவது, பொம்மையாவது, வாங்கறதாவது" என்று நினைத்தாள். தவிரவும் அந்த அதிசயம் நேர்ந்திருந்தாலும் அதை முதலாக அறிவித்துக் கொம்மாளமல்லவோ போட்டிருக்க வேண்டும் அவர் பேசாமல் மௌனமாக எப்படி இருந்திருக்க முடியும்? தவிரவும் அவர் காரியாலயத்திலி

ருந்து திரும்பி வந்து வீட்டுக்குள் நுழையும்போது வரவேற்றது தானல்லவோ? அவர் அப்போது கையிலே ஒன்றும் எடுத்து வர வில்லை. பையும் அன்று எடுத்துப் போகவில்லை. அதில் வைத்து வெளி யில் தெரியாமல் எடுத்துவர.

மார்க்கெட்டிலிருந்து வழக்கமான கீரைக் கத்தையுடனும் புடலங்காயுட னும் நுழைந்த கோபாலய்யரை அப் படியே வரவேற்று நிறுத்தி வைத்து கையிலிருந்த பொம்மையைக் காட்டி "இதை நீங்க வாங்கிண்டு வந் தேளா?" என்று கேட்டாள்.

கோபாலய்யர் ஒன்றும் புரியா மல் திகைத்தார். தன் மனைவியின் மாயா ஜாலங்களில் இதுவும் ஒன்றோ என்று சந்தேகப்பட்டார்.

"ஆமாம்...நான்தான் வாங்கிண்டு வந்தேன்..." என்று ஏகத்தாள மாகக் கூறிச் சிரித்தார்.

"என்ன கேலி வேண்டிக் கிடக்கு. எப்படி வந்துதுன்னு முழிச்சுண் டிருக்கேன். கேட்டதுக்கு நேரா பதில் சொன்னா குறைச்சலா?" என்று பிடித்துக்கொண்டாள் மனை யாள்.

கீரைக் கத்தைகளையும், புடலங்கா யையும் கீழே போட்டுவிட்டு அருகில் வந்து விஷயம் என்னவென்று சாவ தானமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார். மனைவியின் குரலில் தொனித்தகுழப்பம் உண்மையானது தான் என்று அவருக்கு விளங் கிற்று. ஆனால் அவர் கையிலும் அந் தப் புதிரை விடுவிக்கச் சாவி இல் லையே!

"நானாவது வாங்கி வரதாவது. கலாட்டா செய்யறயா? நீதான் போன வருஷம் எப்போவானு வாங்கிருப்பே, மறந்து போயிருக்கும். உனக்குத்தான் நீ உசிரோட இருக் கறதுகூட நெனவிருக்காதே!" என விழித்தார்.

விழித்தவருக்கு விளக்கம் செய்ய இயலாத ஒரு வாடையில் அவர் அகப்பட்டுக்கொண்டு சிரமப்பட விரும்பவில்லை. அவருக்கு அசி ரத்தை ஏற்பட்டதற்கு வேறொரு காரணமும் இருந்தது. பிரச்னை எவ் வளவு கடினமான, ஆச்சரியமான பிரச்னையாக இருந்தபோதிலும் அதன் ஒரே அர்த்தம் "நஷ்டமில்லை" என்றுதான் அவருக்குப்பட்டது. வேறு கோணங்களிலிருந்து அதற்கு அர்த்தம் கற்பிக்க அவரிடம் சேதி களோ, குறிப்புகளோ கிடையாது! சியாமளியைச் சந்தேகிக்க என்ன காரணம் இருக்கிறது? அவருக்கு ஒரு விஷயமும் தெரியாது. எனவே அவ்விடத்தை விட்டு நகர்ந்து குளிர்ந்த கிணற்று ஜலத்தைத் தேடிக் குளிக்கச் சென்றுவிட்டார்.

சுந்தரி அம்மாள் சியாமளியின் மேல் தான் கொண்ட சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துகொண்டாள். அவளை விறைக்கப் பார்த்தாள்; மற்றுமொரு கடுமையான புன்முறு வல் பூத்தாள். அவளது மனச்சாட்சி குடும்பத்தின் மனச்சாட்சி என்ற உருவத்தில் அதன் ஒரு அங்கத்தின ரது குற்றம் என நம்பப்பட்ட விஷ யத்தைப் பரிசீலனை செய்ய ஆரம் பித்தது. நடந்துபோன விஷயத்தின் பலாபலன்களுக்குத் தக்கவாறு மேற்கொண்ட நடவடிக்கையையும் வகுக்கத் தொடங்கிற்று.

சியாமளி திருடிக்கொண்டு வந்து விட்டாள். அதில் சந்தேகமில்லை. திருடுவது ஒரு பெரிய குற்றம்தான். இது ஒழுக்கம் காட்டும் ஒளி. ஆனால் இந்த ஒளி தன் கண்ணையே அல் லவா கூசச் செய்து கொண்டிருந் தது! சியாமளி திருடி வந்த காரணத் தையும் கற்பனை செய்து பார்த் தாள். அவள் குழந்தை. அந்த பொம்மையின் மேல் அவளுக்கு ஆசை ஏற்பட்டதில் வியப்பில்லை. ஒரு தாயின் பாஷையில் "தெரியா மல் எடுத்து வந்துவிட்டாள்" என்று அதைக் குறிப்பிடலாம். தெரியாமல் என்றால், எது தெரியாமல்? திருடு வது தவறு என்பது தெரியாமல்!

(தொடரும்)

வைத்தீசுரன் கோயில்

★

"கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடை முடியெம்பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"

சுவாமி வைத்தியநாதேசுரர். தேவி—தையல்நாயகி பெரிய கோயில் அழகிய பெரிய கோபுரங்களை உடையது. இங்கே உள்ள தெய்வங்கள் கலி காலத்திலும் கண்கண்ட தெய்வங்களாக-கருத்து நிறைவேற்றி வைக்கும் கருணைக் கடவுளாக இருப்பதால் எல்லா சன்னிதிகளுக்கும் மிக்க விசேஷம் உண்டு. 'தீராத வல்வினைநோய் தீர்த்தருள்வான்' என்று தேவாரங்கள் போற்றுகின்றன.



கிழக்கு கோபுர தரிசனமும் சித்தாமிர்த தீர்த்தமும்.

தையல்நாயகி அம்மை சித்தாமிருதத் தீர்த்தத்தில் தோய்ந்துவருகின்ற தென்றற் காற்றை அனுபவவித்துக் கொண்டு கருணைத் திருக் குறிப்போடு வீற்றிருக்கிறார். இங்கே பேய் பிசாசு பிடித்தவர்கள் வந்தால் தாமாக ஆடத் தொடங்கியிருக்கிறார்கள். முத்துக் குமாரர் சந்நிதிவிசேஷம். பிறவிநோய் தீர்த்து வைக்கும் பெருமானுக்கும், மனநோய் தீர்க்கும் அம்மைக்கும் அவதரித்த பிள்ளை. கலிநோய் தீர்க்கும் கந்தன். இங்கு இவருக்கு கிருத்திகை தோறும் மஹாபிஷேகம் நடைபெறும். அப்போது பக்தர்கள் பன்னீர், பால் முதலியவைகளை வெள்ளி பாத்திரங்களில் கொண்டுவந்து நிரப்புவார்கள். செல்வமுத்துக் குமாரர் அபிஷேகம் கொண்டருளிய பின் அவற்றை வாங்கி உட்கொள்வார்கள். இது ஒரு அற்புதமான கண் கொள்ளாக் காட்சி. பச்சை கற்பூரமும்,

குங்குமப்பூவும் சமனெடையாகச் சந்தனத்தில் கலந்து செல்வ முத்துக்குமாரர் திருவடியிற் சாத்துவது வழக்கம்.

சித்தாமிருதத் தீர்த்தத்தில் தவளையே இல்லாதது தனிச் சிறப்பு அங்கசந்தான தீர்த்தத்தின் மண்ணை சுக்கில பக்ஷத்தில் சுப நேரத்தில் எடுத்துப் புதுப்பாத்திரத்தில் வைத்துக்கொள்வார்கள். சடாயு குண்டத்திலுள்ள வீபூதியையும் அதனோடு கலப்பார்கள்.

சித்தாமிருதத்தீர்த்தத்தை சேர்த்துப் பிசைவார்கள். முத்துக்குமார சுவாமியார் சந்நிதியிலுள்ள குழியம்மியில் போட்டுப் பஞ்சாக்ஷரத்தைக் கூறிக்கொண்டு ஆயிரத்தெட்டுத் தடவை அரைப்பார்கள். கடுகளவாக உருட்டிக் காயவைத்து தையல் நாயகியின் திருவடிகளில் வைத்து அர்ச்சித்து அளிப்பது வழக்கம்.



மேற்கு கோபுரம்—தையல்நாயகி அம்மையார் சந்நிதான தரிசனம்.

இதுதான் திருச்சாந்துருண்டையென வழங்குவது. இங்கே சீதையத் தேடித் தென் இலங்கைக்குச் சென்ற ஸ்ரீராமன்சடாயு பக்ஷிக்குத் தகனக்கிரியை நடத்திய ஸ்தலம். சடாயு, சம்பாதி பறவைகளும்,ரிக் வேதமும், முருகனும் பூஜித்த ஸ்தலம். ஆதலால் தேவாரத்தில் இந்த ஸ்தலம் புள்ளிருக்கு வேளூர் எனக் குறிக்கப் பெறுகிறது. கோபுர வாசலில் பெரிய வேப்ப மரம் ஒன்றிருக்கிறது.

மூலம் :— காளத்தி நடேச முதலியார் இயற்றியுள்ள இறைவனின் உறைவிடங்கள்'' என்ற நூல்.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

ஈசுவர தரிசனம்

●

பக்தியுடன் பகவத் நாமத்தைப் பாடு! அப்போது மலை போலக் குவிந்திருக்கும் உன் பாபங்களெல்லாம், நெருப்புப் பொறி ஒன்றினால் மலை போலக் குவிந்த பஞ்சுப் பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல நசித்து விடும்.

★

கைகளினால் தாளம் போட்டுக் கொண்டே இனிமையான ஹரி நாம ஸங்கீர்த்தனம் செய்! அப்போது உனக்கு ஏகாக்கிர சித்தமுண்டாகும். மரத்தின் அடியிலிருந்து கை தட்டினால் அம்மரக் கிளைகளில் இருக்கும் பட்சிகளெல்லாம் நாலாபக்கங்களிலும்பறந்து போய்விடும். ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு கை தட்டினால் உன் மனத்திலுள்ள தீய சிந்தனைகளெல்லாம் அகன்றோடும்.

★

கிளி பறந்து போன பிறகு கூட்டைக் கவனிப்பார் எவருமில்லை. உயிராகிய கிளி பறந்து போன பின்பு, பிணமாகிய உடலைக் கவனிப்பார் யாருமிரார்.

★

பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். நீ பெருமை அடைய வேண்டுமானால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு.

★

உண்மை ஞானம் எவனிடமிருக்கிறதோ அவன்தான் உண்மையான மனிதன் ஆவான். மற்றவர்கள் எல்லோரும் பெயரளவில் மாத்திரம் மனிதர்களாவர்.

★

உனது நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே! மனச்சாட்சியின் படி நட! நிச்சயம் உனக்கு ஜயம் உண்டாகும். கள்ளம் கபடம் அற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய். ஈசுவரன் கேட்பான்.

★

திசையறி கருவியின் நுனி எப்போதும் வட திசையையே காட்டும் வரையில் கப்பலானது தனது மார்க்கத்தை விட்டு விலகிப் போய் ஆபத்துக்குள்ளாவதில்லை. வாழ்க்கையாகிய கப்பலின் திசையறி கருவியாகிய மனிதனுடைய மனமானது பரப்பிரம்மத்தையே எப்போதும் நோக்கி அசைவற்றிருக்குமாகில் அஃது ஒவ்வொரு ஆபத்தையும் தாண்டிப் போகும்.

★

சட்டி, பானை முதலிய வெவ்வேறு உருவமுள்ள பாண்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் ஒரே களி மண்ணால்தான்

செய்யப்பட்டவை. அது போலவே ஈசுவரன் ஒருவனே; ஆனால் அவன் வேறுவேறு நாம ரூபங்கள் மூலமாக ஆராதிக்கப்படுகிறான்.

★

ஒரே வஸ்துவான தண்ணீரை சிலர் ஜலம் என்றும், சிலர் வாரி என்றும், சிலர் அக்வா என்றும், சிலர் பானி என்றும், வேறு வேறு வார்த்தைகளால் கூறுகின்றனா. அது போல ஒரே சச்சிதானந்தப் பொருளைச் சிலர் கடவுளென்றும் சிலர் அல்லாவென்றும், சிலர் ஹரி என்றும், சிலர் பிரம்மம் என்றும் வேறு வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

★

வீட்டின் உச்சி முகட்டுக்குப் போக ஏணி, மூங்கில், மாடிப்படி கயிறு இவற்றுள் ஏதேனுமொன்றின் உதவியைக் கொண்டு ஏறலாம். அது போல ஈசுவரனை அடைவதற்கு வேறு வேறு வழிகளும் சாதனங்களும் ஏற்பட்டுள்ளன. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட வழிகளுள் ஒன்றைத்தான் காட்டுகிறது.

★

கற்கண்டு சேர்த்துச் செய்யப்பட்ட தின்பண்டத்தை நேராகவோ அல்லது குறுக்காகவோ அல்லது வேறு எந்த விதமாகவோ பிடித்துக் கொண்டு தின்றாலும் அஃது இனிப்பாகவே இருக்கும். அது போல ஒருவன் எந்தவிதமாகக் கடவுளைத் தியானம் செய்தாலும் எந்த விதமாக அவனது நாமத்தை ஜபம் செய்தாலும் அவன் ஆத்மஞான வாழ்க்கையில் முன்னேறுவான்.

★

மனிதன் தயையில் கிருஸ்தவரைப் போன்றும், அனுஷ்டானத்தைத் தவறாமல் கடைப்பிடிப்பதில் முகம்மதியரைப் போன்றும், சர்வ ஜீவராசியினிடத்தும் அன்பு பாராட்டும் விஷயத்தில் ஹிந்துவாகவும் இருக்கட்டும்.

★

உண்மையான சமயப் பற்றுள்ள ஒருவன் தன்னுடைய மதமேயன்றி மற்றைய மதங்களும் உண்மையை நாடியவடைவதற்கேற்ற மார்க்கங்களென்றே கருத வேண்டும். இதர மதங்களுக்கு நாம் எப்போதும் மரியாதை செலுத்துபவர்களாகவே இருக்க வேண்டும்.

—கங்காபாய், மதுரை.

வில்வாதி லேகியம்

★

இதன் முந்திய இதழில் பசி இல்லாமைக்குக் காரணமும் அதற்கு நிவர்த்தியும் கூறினோம். அத்துறையில் அஷ்ட சூர்ணம் செய்யும் முறையையும் உபயோகிக்கும் முறையையும் விவரமாகச் சொன்னோம். இந்த இதழில் வில்வாதி லேகியம் தயாரிப்பதையும் அதன் பலனையும் விவரிப்போம்:

சில சமயங்களில் மாதர்களுக்கு பொதுவாக எந்தக் காரணத்தினாலாவது சரீரத்தில் இரத்தக் குறைவினால் மாத விலக்கில் தாமதம் ஏற்படும். சில சமயங்களில் இரத்தக் குறைவு இல்லாமலேயும் இது ஏற்படுவது உண்டு. இம்மாதிரி கோளாறுகளுக்கு காலையிலும் மாலையிலும் கால் தோலா அளவு அஷ்ட சூர்ணத்தை மோருடனே அல்லது வென்னீருடனே சாப்பிட்டு வர அந்த நோய் தீரும்.

பொதுவாக ஜனங்களுக்கு லேகியம் சாப்பிடுவதில்தான் அதிக விருப்பம் இருக்கிறது. லேகியம் என்றால் பக்ஷணம் என்றே நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் அநேக லேகியங்கள் இனிமையாகவிருப்பதுதான். பசி இல்லாமைக்கு அந்தப் பிணி தீர எங்கள் அனுபவத்தில் ஒரு லேகியம் அதிகப் பயனளிக்கிறது. அதைச் செய்யும் முறை பின் வருமாறு:—

இதற்கு வேண்டிய மருந்து சரக்குகள் பின் வருமாறு:—

(1)	வில்வவேர்	32	பலம்	(8)	சுக்கு	4	பலம்
(2)	கோரைக்ழுழங்கு	4	"	(9)	மிளகு	4	"
(3)	தனியா	4	"	(10)	அரிசித் திப்பிலி	4	"
(4)	சீரகம்	4	"	(11)	லவங்கம்	4	"
(5)	ஏலரிசி	4	"	(12)	செவ்வியம்	4	"
(6)	லவங்கப்பட்டை	4	"	(13)	தாலீசபத்திரி	4	"
(7)	சிறுநாகப் பூ	4	"	(14)	கண்டத்திப்பிலி	4	"

(15) வெல்லம் 2 வீசை

(16) நெய் 1 வீசை

(17) தேன் ½ வீசை

மருந்துச் சரக்குகள் 2 முதல் 14 வரை நீங்கலாக உள்ளவைகளை நன்றாக இடித்து மெல்லிய சல்லடை மூலம் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

முதலில் வில்வ வேரையும் செவ்வியத்தையும் சிறு துண்டுகளாக வெட்டி 8 படி ஜலத்தில் போட்டு 12 மணி நேரம் ஊற வைத்து பிறகு இரண்டில் ஒரு பங்கு ஆகும் வரையில் இந்த ஜலத்தை கொதிக்க வைக்கவும். பிறகு அந்தக் கஷாயத்தை வடிக்கட்டி இதில் வெல்லத்தைக் கரைத்து கொதிக்க வேண்டும். வெல்லம் இந்தக் கஷாயத்தில் நன்றாகக் கரைந்தவுடன் அதை ஒரு மெல்லிய துணியினால் வடிக்கட்ட வேண்டும். அப்படி வடிக் கட்டுவதால் வெல்லத்திலுள்ள குப்பை, சத்தை முதலிய அழுக்குகள் எடுக்கப்படும். பிறகு அந்தக் கஷாயத்தை நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். அந்த கொதிக்கும் கஷாயத்தை ஒரு கரண்டியால் எடுத்து கையால் தொட்டுப் பார்த்தால் மெல்லிய கம்பிகள் போல் தோன்றும். இந்தப் பக்குவத்தில் இந்தப் பாகை அடுப்பிலிருந்து இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்- இந்தப் பாகில் ஏற்கனவே இடித்துச் சலித்து வைத்திருந்த பொடியில் கொஞ்சங் கொஞ்சமாக நெய்யையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் எல்லா சூர்ணங்களையும் நெய்யையும் கலந்து அத்துடன் இவை சூடில்லாமல் ஆறினவுடன் தேனையும் கலந்து விட வேண்டும், இந்த லேகியம் தான் வில்வாதி லேகியம்.

இதைக் குழந்தைகள் முதல் விருத்தர்கள் வரையில் உபயோகிக்கலாம். இதை உபயோகிட்பதால் பசி இல்லாமை, பலக் குறைவு. சுறுசுறுப்பில்லாமை, தூக்கமில்லாமை முதலிய ஜனங்களுக்கு சாமானியமாக வரும் பல நோய்கள் தீர்ந்து விடும். 3 வயது முதல் 5 வயது வரை ஒரு சிறிய புளியங் கொட்டை அளவும், 5 வயது முதல் 11 வயது வரை ஒரு பெரிய புளியங் கொட்டை யளவும், 12 வயதுக்கு மேல் ஒரு நெல்லிக்காய் அளவும், காலையிலும், மாலையிலும் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். ரத்தசோகை (பாண்டு) வீக்கம் முதலிய வியாதியஸ்தர்களுக்கு இந்த லேகியத்தை அனுபானமாகக் கொண்டு அன்ன பேதி, அயம் முதலியவைகளுடைய சிந்தூரங்களை உபயோகிப்பது உண்டு,

ஆர். கிருஷ்ணமூர்த்தி.

At Madurai Convenient Place to Stay :

CENTRAL LODGE

48, West Perumal Maistri St.,

(Near Thangam Theatre)

MADURAI.

ஜாபாலி உபநிஷத்

★

பைப்லர் முதலான மகரிஷிகள் ஜாபாலி மகரிஷியை பரம தத்துவத்தின் ரகசியத்தைத் தங்களுக்கு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

அதர்வது அதன் ஜீவன் என்ன? அதன் பசு என்ன? அதற்கு ஈசன் யார்? அது மோக்ஷத்திற்கு எப்படி உபாயம்! என்று.

ஜாபாலி மகரிஷி "நன்கு வினவினீர்கள். அவை யாவையும் நான் அறிந்தவாறு கூறுகிறேன்" என்றார்.

ரிஷிகள் "நீங்கள் அவற்றை எவ்வாறு அறிந்தீர்கள்" என்றனர்.

ஜாபாலி "நான் அறுமுகக் கடவுளிடமிருந்து அறிந்தேன்" என்றார்.

ரிஷிகள் மறுபடியும் அறுமுகக் கடவுள் எப்படி யறிந்தார் என்று கேட்டதற்கு ஜாபாலி அவர் சிவபெருமானிடமிருந்து அறிந்தார் என்று கூறினார். திரும்பவும் சிவபெருமானுக்கு எப்படித் தெரியும் என்று ரிஷிகள் கேட்டதற்கு சிவபெருமான் பரம்பரையை அனுசரித்து அறியலானார் என்றார் ஜாபாலி.

பிறகு ஜாபாலி, மகரிஷிகளுக்கு பரமதத்துவத்தின ரகஸ்யத்தை விளக்கலானார்.

சிவன் - அகங்காரம் முதலிய குணங்கள் நிறைந்த அவரே பசு. அவரே, சகலமும் தெரிந்த ஐம்புலங்கள் கூடிய சர்வேசுவரன். சம்சாரியான ஜீவன். அவரே ஈசன். அவரே பசுக்களுக்கெல்லாம் அரசனாவான். பசுக்கள் என்றால் யார் என்று கேட்டார்கள். ரிஷிகள் ஜீவன்கள் தான் பசுக்கள் என்று சுருதிகள் கூறுகின்றன. ஆகையால் தான் அவரே பசுபதி என்று கூறப்படுகிறான். ஆனால் "ஜீவன்கள் பசுக்கள் என கூறுவதை சற்று விளக்குவீர்." "கோ முதலிய பசுக்கள் புல் முதலியவற்றைப் புசித்து விவேகமற்று, மற்றொருவனால் வழிகாட்டப்பட்டு கர்மங்களில் எல்லா துக்கங்களையும் சகித்து, இருப்பது போல் அவ்வாறே எல்லா ஜீவன்களும் இருக்கின்றன. அவைகளை ஓட்டுபவன் தான் 'பசுபதி' அதாவது அவைகளுக்கெல்லாம் ஈசனாக கருதப்படுகிறான்" என்றார் ஜர்பாலி.

"இந்தஞானம் அவனுக்கு எவ்வாறு உண்டாகிறது?" "அவன் 'விபூதி'யை தரிப்பதினாலேயே தான்" "ஆனால் அதை எப்படி தரிப்பது? எங்கெங்கே தரிப்பது? இவற்றை சற்று தெளிவாகச் சொல்லுங்கள்." "ஸத்யோஜாதம் முதலிய ஐந்து மந்திரங்களால் விபூதியைஎடுத்து ஜலத்தில் கரைத்து அவரவர்களுக்கு ஏற்ற மந்திரங்களால் உச்சரித்து, தலை, நெற்றி, மார்பு, தோள் இவ்விடங்களில் மூன்று தடவைகள் மூன்று கோடுகளால் அணிந்து கொள்ளவும். இந்த பரமசிவனது விரதமானது எல்லா வேதங்களிலும்

கூறப்படுகிறது. வேதத்தை நிராகரிக்கப்படுபவர்களாலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இம்மூன்று கோடுகளும் முறையே, முதல் கோடு, பிரணவத்தின் முதலெழுத்தான அகாரத்தையும், ரிக்வேத ஸ்வரூபியாயும், கிரியாசக்தியாயும் உள்ள பிரம்மதேவனையும், இரண்டாவது கோடு பிரணவத்தின் நடு எழுத்தான் உட்காரத்தையும் யஜுர்வேத ஸ்வரூபியாயும் கரிக்கும் சக்தியாயும் உள்ள மகாவிஷ்னுவையும் மூன்றாவது கோடு, பிரணவத்தின் முடிவெழுத்தான் மகாரத்தையும், ஸாமவேத ஸ்வரூபியாயும் ஞான சக்தியாயும் உள்ள பரமசிவனையும் குறிக்கின்றன.

இம்மாதிரி மூன்று புண்டரங்களை பஸ்பத்தினால் தரித்துக் கொள்பவர்கள் வித்வானாக இருந்தாலும், பிரும்மசாரியாக இருந்தாலும் கிருஹஸ்தனாக இருந்தாலும் வானப்பிரஸ்தனாக இருந்தாலும். யதியாக இருந்தாலும், அளவற்ற மஹாபாதகத்தினின்றும் மீளப்படுகிறான். இதைத் தரிப்பவன் எல்லா தேவதைகளையும் உபாஸித்தவனாகவே ஆகிறான். எல்லா புண்ணிய நதிகளிலும் ஸ்நானம் செய்த பலனையும் அடைகிறான். புனர்ஜன்மமும் கிடையாது.''

—Rendered into Tamil by *Ikshvaku V. K. V. Acharya.*

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும், சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதறாஸ்-18

ராமஸ்வாமி தீக்ஷிதர்

★

சகாப்தம் 1657, கி. பி. 1735-ல் பிறந்த இத்திராவிட பிராஹ்மணர் ஔத்திர வடமர். காச்யப கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆபஸ்தம்ப ஸூத்ரம் இவருடைய தந்தை வேங்கடேசுவர தீக்ஷிதர், தாய் பாகீரதியம்மையார். இவருடைய ஏழாவது வயதில், குதிரைக்காரர்கள் கலகம் காரணமாக காஞ்சிபுரத்திலிருந்து வயது முதிர்ந்த பெற்றோருடன் கிளம்பி மத்தியார்ஜுன (திருவிடை மருதூர்) க்ஷேத்திரத்திற்கு சமீபத்திலுள்ள கோவிந்தபுரத்துக்கு வந்து கிராமாந்தம் வேதாத்யயனம் செய்து வந்தார். சில காலத்திற்குப் பின் அவருடைய தாய் தந்தையர் ஆறு மாதம் முன் பின்னாக பரலோக பிராப்தியடைந்து, ஸம்ஸ்கிருத பாஷையில் மிகுந்த பாண்டித்யத்தை யடைந்து, தெலுங்கையும் கற்றுக் கொண்டார். இயற்கையாகவே தமக்கு நல்ல சாரீரம் வாய்த்திருந்தது பற்றி, கேள்வி மூலம் இனிமையாகப் பாடக் கற்றுக் கொண்டார். ஸங்கீதத்தின் மீதுள்ள பிரமையால் தஞ்சாவூரையடைந்து வீரபத்ரய்யாவிடம் இரண்டு வருட காலமிருந்து, ரக்தி ராகங்களிலும், தேசீய ராகங்களிலும் அவரால் இயற்றப்பட்டுள்ள கீர்த்தனங்களை, ஸ்வர ஞானம் ஏற்படும் வரை பயின்று ஆலாபனை பல்லவி, ஸ்வரம் முதலியவை பாடும் சக்தி உண்டாகும் வரையில் கற்று மாயூரத்துக்கு வந்து வசித்து வருகையில் ஸங்கீத லக்ஷணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் தோன்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஒருபெரியவர் வந்து "திருவிடைமருதூருக்குச் செல்வாயாக. அங்கு உன் மனோரதம் நிறைவேறும். லக்ஷணவித்வானாக ஆவாய்' என்று அனுக்ரஹித்தவுடனே, மத்யார்ஜுன க்ஷேத்திரத்தையடைந்து, அங்கு நித்ய அக்னிஹோத்ரியும், வேங்கடமகியின் மாதுலபௌத்ரருமான வேங்கட வைத்யநாத தீக்ஷிதரின் பரமானுக்ரஹம் காரணமாக, ஒரே வருஷத்தில் வீணை ஸாதகம் செய்து, பிறகு சதுர் தண்டி பிரகாசிகையில் காணப்படும் ராகாங்க, உபாங்க, பாஷாங்க ராக கீதங்கள், ஸகல ராக தாள லக்ஷணங்கள் முதலியவற்றை ஸாங்கோபாங்கமாகப் பயின்று தம்முடைய குரு ஆக்ஞைப்படி தஞ்சாவூருக்குச் சென்று அங்கு ராஜ ஸபையில் புகழப்பட்டு, அநேக ஸன்மானங்களையும் கௌரவங்களையும் பெற்று, மாயூரத்துக்கு வந்து, ஸ்ரீ தியாகராஜப் பெருமானின் உத்ஸவத்தை ஸேவிக்கும் பொருட்டு திருவாரூரையடைந்து ஸ்ரீ கமலாம்பா ஸமேத தியாகராஜ ஸ்வாமியை ஸேவித்து. பாடிக் கொண்டு இருந்தனர்.

ஸ்வாமி தரிசனத்திற்காக அங்கு வந்த அமரஸிம்ஹ மகாராஜா இவரால் தம் மீது இயற்றப்பட்ட ராகமாலிகையைக் கேட்டானந்தித்து,

வெகுமதிகளளித்து அவரை ஆதரித்தார். இந்த ராமஸ்வாமி தீக்ஷிதரின் பக்தியின் மகிமையால், ஸ்ரீ வீதி விடங்க த்யாகராஜஸ்வாமி ஸ்வப்னத்தில் தரிசனமளித்து ஆக்ஞையிட்டபடியே, ஸ்வாமி வீதிகளில் வலம் வரும் பொழுது த்வஜ மண்டபத்திலிருந்து மறுபடியும் த்வஜ மண்டபம் வரும் வரை இன்ன இன்ன இடத்தில் இப்படி இப்படி வாசிக்க வேண்டுமென்று நாகஸ்வர வாத்தியக்காரர்கள் முதலியவர்களுக்குச் செய்த ஏற்பாட்டின் படி பரம்பரையாய் இன்றும் வாசித்து வருகிறார்கள்.

இவருக்கு நாற்பது வயது வரை ஸந்ததி உண்டாகாமையால் தமது பத்னியுடன் ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போய் ஸ்ரீ முத்துக் குமாரஸ்வாமி ஸந்நிதியில் பஜனை செய்தனர். சில தினங்களுக்குப் பிறகு இவரது பார்யை ஸ்வப்பம்மா கர்ப்ப வதியானதும் திருவாரூக்குத் திரும்பினார். குறித்த காலத்துக்குப் பின், நல்ல லக்னத்தில் ஒரு ஸத்புத்திரன் உதித்தான். அவனுக்கு முத்துஸ்வாமி என்று பெயரிட்டனர். சில வருஷங்களுக்குப் பின் பிறந்த தம்முடைய இரண்டாவது குமாரராகிய சின்ன ஸ்வாமி தீக்ஷிதருக்குத் தம் குருவின் பெயரான வேங்கட வைத்யநாத சர்மனை யிட்டனர். சின்னஸ்வாமியுடன் கூடப் பிறந்த பெண் குழந்தைக்கு பாலாம்பா என்றும் கடைசிக் குமாரனுக்கு பாலஸ்வாமி என்றும் பெயரிட்டனர். இவருடைய குமாரர்களுள் முத்துஸ்வாமி தீக்ஷிதர் கிரமாந்தம் வேதாத்யயனம் செய்து, காவ்ய, நாடக, அலங்காரங்களைப் பயின்று. வ்யாகரணத்தின் மூலமான கௌமுதியைக் கற்று, ஸங்கீதத்தையும் நன்றாய் அப்யஸித்தார். இவருடைய தம்பிகள் அவரவர்களின் வயதுக்குத் தக்க கல்வியைப் பயின்று வந்தனர். அப்பொழுது ஸ்வாமி தரிசனத்துக்காகத் திருவாரூருக்கு வந்த மணலி முத்துக் கிருஷ்ண முதலியார் என்ற பெரிய பிரபுவானவர், ராமஸ்வாமி தீக்ஷிதரின் கல்வி கேள்விகளை கவனித்து, பரிசுகள் அளித்ததுடன்; குடும்பத்துடன் அவரைக் கூடவே மணலிக்கு அழைத்துச் சென்று. கௌரவத்துடன் சில வருஷங்கள் ஆதரித்து வரலானார்.

பிறகு அவரது குமாரரும், ஸகல வித்யாபாரங்கதரும், சிறந்த ரஸிகரும், கொடை வள்ளலுமான வேங்கட க்ருஷ்ணர் என்ற சின்னய்ய முதலியார், ராமஸ்வாமி தீக்ஷிதரால் இயற்றப்பட்ட நூற்றெட்டு ராக, தாள மாலிகையைக் கேட்டு, கனகாபிஷேகம் செய்து கௌரவித்ததுடன், அர்த்த புஷ்டியுள்ள அந்த ராகமாலிகையைப் பாடிய சின்னஸ்வாமி, பாலஸ்வாமி இருவருக்கும் பல ஸன்மானங்களை யளித்து ஆதரித்தனர். அச் சமயம் வேங்கடமகியின் கொள்ளுப் பேரன் என்று கூறிக் கொண்டு வந்த கோவிந்த தீக்ஷிதரை முதலியார் மிகவும் ஆதரித்து, சதுர்த்தண்டி ப்ரகாசிகை முதலிய நூல்களைப் பார்க்க வேண்டுமென்று கூறவும், அவர் "நான் பாடும் மூர்ச்சனையை இன்ன ராகம் என்றி கூறினால் புஸ்தகத்தைக் கொடுப்பேன்" என்றி கூறிப் பாடிய மூர்ச்சனையைக் கேட்டு ராமஸ்வாமி தீக்ஷிதர், முதலியார் இயற்றியது போல் "நன்னு பரீக்ஷிம்ச நேல"

(என்னைப் பரீக்ஷை செய்வதேனோ) என்ற பதத்தை யியற்றி கடைசி ஸ்வரத்தில் கோவிந்த தீக்ஷிதர் பாடிய மூர்ச்சனையை வைத்து சின்னஸ்வாமி, பாலஸ்வாமி இருவரையும் பாடுமாறும் செய்யவும், கோவிந்த தீக்ஷிதர் வியந்து "நான் கொடுத்த மூர்ச்சனை இதுவே! நீங்கள் வேங்கடமகியின் சிஷ்யர்களே" என்று புகழ்ந்தார். தம்முடைய இரண்டாவது குமாரராகிய சின்னஸ்வாமி கண் பார்வையை யிழந்து கஷ்டப்படுவதைப் பார்த்து மிகவும் கலங்கிய ராமஸ்வாமி தீக்ஷிதர், குடும்பத்துடன் திருப்பதிக்குச் சென்று வேங்கடாசலபதியின் மீது "மனஸா வேரிதருல தலசக" என்று நாற்பத்தெட்டு ராகங்களில் ஒரு ராக மாலிகையையும் "இங்கா தய ராகுன்னனு" என்ற கீர்த்தனத்தை வேக வாஹினி ராகத்திலும் இயற்றி நாற்பத்தைந்து தினங்கள் பஜித்துக் கொண்டிருக்கையில், சின்னஸ்வாமி கண் பார்வையைத் திரும்பப் பெற்று, தம்முடைய வாழ்நாள் முழுவதும் சுகமாக வாழ்ந்தனர். ராமஸ்வாமி தீக்ஷிதர் பிரதி ஏகாதசியும் அஷ்டபதி எனப்படும் கீத கோவிந்தத்தின் பன்னிரண்டு ஸர்க்கங்களையும் தவறாமல் பாராயணம் செய்து வந்தனராம். ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் மீது நாற்பத்து நான்கு ராகங்களில் ஒரு ராக மாலிகையையும், ரீதி கௌள, ஹிந்தோளம், மனோஹரி, பூர்ண சந்திரிகா ராகங்களில் சௌக வர்ணங்களையும், சங்கராபரண தான வர்ணத்தையும், அநேக கீர்த்தனைகளையும், "வேங்கட க்ருஷ்ண" முத்திரையுடன் இயற்றியதுடன், ஹம்ஸத்வனி என்ற ராகத்தைக் கல்பனை செய்து, அதில் பிரபந்தமியற்றி புகழடைந்து, தம்முடைய மரண காலத்தை யறிந்து, ராமஸ்வாமி தீக்ஷிதர் குடும்பத்துடன் திருவாரூரை யடைந்து சாகப்தம் 1739 கி. பி. 1817 தாது வருஷம் மாசி மாதம் சிவராத்திரி புண்ய தினத்தன்று பரமபதத்தை யடைந்தார்.

காயக ச்ரேஷ்டர் என்று புகழ் பெற்ற அலஸூர் கிருஷ்ணய்யா, ராமஸ்வாமி தீக்ஷிதரின் சிஷ்யராவர்.

மூலம் :—ஸ்ரீ ஸுப்பராமதீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல். தமிழாக்கம்: தி. ஸ்ரீ பார்த்தசாரதி.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

CONSULT

K. M. S. Press

22-A, Narasingapuram St.,

Mount Road, Madras - 2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

தொடர் நாடகம்

மேவாரின் வீழ்ச்சி

[மூலம் : த்விஜேந்திரலால் ராயால் இயற்றப்பட்ட மிகப் புகழ்பெற்ற வங்க நாடகம்]

தமிழாக்கம் :

"பைங்கா நாடு"

●

(காவற்காரன் செல்கிருன்)

ஸகர : பார். அருணன் படுத்துத் தூங்குகிருன் இவனுக்கு எப்படித் தூக்கம் வருகிறது. அவன் புரண்டு படுத்தால் கூட விழித்துக்கொண்டு விட்டதாக எனக்குத் தோன்றுகிறது. எனக்கு இன்று தூக்கமே வரவில்லை. நம் முன்னோர்கள் இதே கோட்டையில் வசித்தார்கள். இதனுல் அவர்கள் திறமைசாலிகள் என்று தெரிய வருகிறது. காவல்காரா?

(காவல்காரன் வருகிருன்)

ஸகர : விழித்துக் கொண்டிருக்கிருயல்லவா? இதோ பார்! தூங்கக்கூடாது. நடு நடுவில் சத்தம் கொடுத்துக் கொண்டேயிரு நீ விழித்துக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக. போ.

(காவற்காரன் செல்கிருன்.)

ஸக : அருண்! அருண்!

அருண் : ஏன் தாதா!

ஸகர : நல்லது. நீ தூங்கு. இன்று ஜாக்கிரதையாகத் தூங்கு. எனக்கு பயமாயிருக்கிறது.

அருண் : ஏன் பயம்? தாங்கள், தூங்கவில்லையா?

(சோம்பல் முறிக்கிருன்)

ஸக: டேய்! உனக்கு என்னடா? தாங்கள் தூங்கவில்லையா என்று கேட்டு விட்டு பேசாமலிருக்கிருய்! டேய், இது என்ன? காவல்காரா, காவல்காரா! டேய்! அதற்குள் தூக்கமா? காவல்காரா! அருண்! அருண்!

அருண்: என்ன தாதா! இன்று தூங்கவே விடமாட்டீர்கள் போலிருக்கிறதே!

ஸகர : யாரோ பேசிக்கொண்டிருக்கிருனே! நீ கேட்கவில்லையா?

அருண் : ஒருவருமில்லை. புயல் வீசுகிறது.

ஸகர : எங்கேடா புயல்? புயல் கூடப் பேசுமா? அங்கே யாரோ பேசுகிறுனே! ஐயய்யோ!

அருண் : என்ன தாதா?

ஸக : பூதம்டா.

அருண் . எங்கே பூதம் தாதா!

ஸகர : அதோ பார் (விரலினுல் சுட்டிக்காட்டுகிருர்)

அருண் : எங்கே? எனக்கு ஒன்றும் தென்படவில்லையே? நீங்கள் விழித்துக் கொண்டே கனவு காண்கிறீர்கள்.

ஸகர: (எங்கேயோ பார்த்துக்கொண்டு) நான் இங்கு வர விரும்பவே இல்லை. அவர்கள் என்னைப் பலாத்காரமாக அனுப்பிவிட்டார்கள். இல்லை. சகோதரனே, நான் ராணுவா' ஆகவில்லை. ராணு' அமரசிம்மன் தான். என்னை உயிருடன் கொலை செய்யாதே. என்னை விட்டு விடு.

அருண் : தாதா!

ஸகர : டேய்! இவர்கள் யார்? சித்தூர் ராணு பீமசிம்மர், ஜயமல், பிரதாப்! இல்லை சகோதரா? நான் நாளையே இங்கிருந்து சென்று விடுகிறேன். இம்மாதிரி என்னை உற்றுப் பார்த்து பயமுறுத்தாதே. இது யார்? கொல்லாதே. கொல்லாதே.

(ஸகரசிம்மர் அலறிக்கொண்டே கீழே விழுகிருர். அருணன் அவரைப் பிடித்துக் கொள்கிருன். காவல்காரனும் வருகிருன்.)

அருண் : காவல்காரனே! தண்ணீர் கொண்டு வா. தாதா மூர்ச்சை யடைந்திருக்கிருர்.

காட்சி 5

இடம் : உதயபூரிலுள்ள அரண்மனையின் அந்தப்புரம்.

நேரம் : நடுப்பகல்.

(மானஸி கல்யாணி இருவரும் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.)

மானஸி : கல்யாணி! நான் இங்கு குஷ்டாச்ரமம் ஒன்று நிறுவியிருக்கிறேன். அதில் பல குஷ்டரோகிகள் வந்து தங்கியிருக்கிருர்கள். பாவம்! அந்த அப்பாவிகள் எவ்வளவு கஷ்டப் படுகிருர்கள் தெரியுமா?

கல்யாணி : தங்கள் வாழ்க்கை கொடுத்து வைத்தது.

மானஸி : கல்யாணி! நீ என்னைப் புகழு, என் வேலைகளுக்கு ஊக்கமளி. என்னை உற்சாகப் படுத்து. என் இதயத்தைப் பலப்படுத்து.

கல்யாணி: தங்களுடைய இந்த வேலையில் ஒருவரும் குறுக்கே நிற்றவில்லையே!

மானஸி: தகப்பனுர் ஒன்றும் சொல்லவில்லை. ஆம்! ஆனல் எல்லா ஜனங்களும் சொல்லியிருக்கிறுர்கள். அரச குமாரிக்கு இந்த விஷயங்கள் அழகில்லையாம். அதாவது அரச குமாரிக்கு சுகமே கூடாது.

கல்யாணி: இதில் மிகவும் சுகம் கிடைக்கிறதா?

மானஸி: கல்யாணி! அவசியம் பெரும் சுகம் கிடைக்கிறது. பிறரைக் களிப்பிப்பது தான் உண்மையான சுகம். தன்னைத் தானே சுகியாகச் செய்துகொள்ள முயற்சிப்பது அநேகமாக வீண் தான். பயங்கரப் பிராணிகளைப் போல் அம்முயற்சி தன் சந்ததிகளையேத்தானே சாப்பிட்டு விடுகிறது.

கல்யாணி: சகோதரனும் இதைத்தான் சொன்னுர். அவர் தங்கள் சிஷ்யரல்லவா? அவர் அடிக்கடி உங்கள் பெயரை எடுக்கிறுர்.

மானஸி: உண்மையில் என் பெயரையா?

கல்யாணி: ஆனல் அப்படித்தான் சொல்ல வேண்டும். தங்களை பூஜையே செய்கிறுர். அவர்தான் என்னிடம் கூறினுர்.

மானஸி: ஆனல் அவர் ஏன் வருவதில்லை. நீ அவரை இங்கு வரச் சொல். அவரைப் பார்க்க என் மனம் துடிக்கிறது.

(ஒரு வேலைக்காரி வருகிறுள்)

வேலைக்காரி: ராஜகுமாரி! ஒரு படக்காரி வந்திருக்கிறுள்.

மானஸி: என்ன அவள் படம் விற்கிறுளா?

வேலை: ஆம்.

மானஸி: பேஷ்! அவளை இங்கே அழைத்து வா.

(வேலைக்காரி செல்லுகிறுள்)

மானஸி: உன் சகோதரன் என்ன செய்கிறுன்.

கல்: அவர் வீட்டில் அதிகமிருப்பதில்லை. வீட்டிற்கு வரும் போது அவரிடம் கேட்டால் சொல்கிறுர். அந்த வியாதிக்காரனுக்கு ஸேவை செய்யச் சென்றிருந்தேன். அவனுக்குத் தைரியம் கூறச் சென்றிருந்தேன். இம்மாதிரிச் சொல்லிக்கொண்டிருக்கிறுர்.

(படக்காரி வருகிறுள்)

மானஸி: நீ படம் விற்கிறுயா?

படக்காரி: ஆம்.

மானஸி: கொஞ்சம் பார்க்கலாமா? உன்னிடம் எப்படிப்பட்ட படங்கள் இருக்கின்றன.

(படக்காரி படங்களைக் காண்பிப்பதற்கு மூட்டையை அவிழ்க்கிறாள்)

மானஸி: உன் வீடு எங்குள்ளது.

படக்காரி: ஆக்ராவில்

மானஸி: இவ்வளவு தூரம் படம் விற்பதற்காகவா வந்திருக்கிறாய்?

படக்காரி: ஆம், நாங்கள் இந்த வேலையாக எல்லா நகரங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கிறோம்.

மானஸி: (ஒரு படத்தைக் கையில் எடுத்து) இது யாருடைய படம்?

படக்காரி: அக்பர் பாத்ஷவினுடையது.

கல்யாணி: அக்பர் பாத்சாவினுடையதா? கொடு. பார்ப்போம் (கையில் எடுத்து) ஓஹோ, எவ்வளவு தீவிரமான பார்வை!

(தொடரும்)

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

ஹிமாலய வீரர்

★

எவரெஸ்டு சிகரத்திற்குச் சாதாரண மனிதனுகச் சென்ருர். பிரபல பிரமுகராகத் திரும்பினுர்.

"இதுதான் டென்சிங் நார்க்கேயின் கதை'' டென்சிங் நார்க்கேயின் சுயசரிதம் வெளியாகிவிட்டது. ஷெர்ப்பா பாஷைக்கு லிபியில்லாததாலும், இருந்தால் கூட, டென்சிங் எழுதப் படிக்கத் தெரியாதவரானதாலும் டென்சிங்கின் சுயசரிதம் ஒரு அமெரிக்க எழுத்தர்ளரால் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. இந்த எழுத்தாளருடன் டென்சிங் வீட்டிற்குச் சென்று பல தினங்கள் சம்பாஷணையிலீடுபட்டு சுய சரித்திரத்திற்குத் தேவையான தகவலைச் சேகரித்தார். இவர் டென்சிங்கின் முழுத் தோற்றத்தையும் அப்படியே படம் பிடித்துக் கொடுத்துவிட்டார் என்றே கூற வேண்டும். ஒரு அமெரிக்க எழுத்தாளரால் எழுதப்பட்டதானுலும் இது டென்சிங்கின் கதைதான். படிப்பதற்கும் அவ்வாறேதான் உள்ளது.

தன் பெற்ரேர்களுக்குப் பிறந்த 13 குழந்தைகளில் 11-வது குழந்தையாக 1914-ம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தின் அடிவாரத்தில் ஜனித்தார் டென்சிங்.

குழந்தைப் பருவத்திலிருந்தே எவரெஸ்டின் தோற்றம் டென்சிங் மனத்தைக் கவர்ந்தது. அதன் சிகரத்தை எப்போது பிடிப்பது என்று ஏக்கங் கொண்டிருந்தார். டென்சிங் 1935-ம் ஆண்டில்தான் முதன் முதலாக டென்சிங் எவரெஸ்டு சிகரத்தின் மீது ஏறிச்சென்ருர். அதற்குப் பிறகு 18 வருஷங்களில் 21 தடவைகள் எவரெஸ்டின் மீது ஏறியுள்ளார் இவர்.

கார்வால் ஜில்லாவிலுள்ள நந்தர்தேவி, ஹிந்துகுஷிலுள்ள டிர்ச்சிமீர், நங்கப் பிரபாத் முதலிய சிகரங்களுக்கும் சென்றிருக்கிறுர். 1952-ம் ஆண்டிலேயே இவர் எவரெஸ்டு சிகரத்திற்கு இரு தடவைகள் சென்றுள்ளார். சிகரத்தின் மீது இவர் ஜெயக் கொடியை நாட்டியது எவரெஸ்டிற்கு இவர் ஏழாவது தடவை சென்ற போதுதான்.

டென்சிங் முதன் முதலாக இந்தச் சிகரங்களுக்குச் சென்றது

வெள்ளையர்களுக்குச் சுமை தூக்கியாகத்தான். பிறகு சென்ற சில வெள்ளையர்களின் கோஷ்டியுடன் சுமைதூக்கிகளின் சர்தாராகச் சென்றார். 1953-ம் ஆண்டில் சென்ற பிரிட்டிஷ் கோஷ்டியின் அங்கத்தினராகவே சென்றார் டென்சிங்.*

டென்சிங் புத்தக அறிவு இல்லாவிடிலும் உலக அனுபவம் நிறையப் படைத்தவர். ஆதலால் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டவர். மனிதர்களைப் பற்றியும் உலக விஷயங்களைப் பற்றியும் சிந்திப்பதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் திறமை படைத்தவர்.

"எனக்கு ஆண்டவன் உள்ளார் என்பதில் நம்பிக்கையுண்டு; ஆனால் ஆசாரத்தில் அவ்வளவாகப் பற்றுக் கிடையாது. மூடநம்பிக்கையுமில்லை. என்னைப் போல் மலை ஏறும் பழக்கமுள்ளவர்களுக்குப் பேய், பிசாசுகளைப் பற்றி சற்றேனும் ஒரு பயமுமில்லை. நான் ஒரு உண்மை பௌத்த மதஸ்தன் தானென்றாலும் மற்ற மதஸ்தர்கள் பலருடனும் பழகியுள்ளதால்

"உண்மை அனைத்தும்
உருமதமும் இல்லை.
உண்மை ஒன்றும் உரா
மதமும் இல்லை"

என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவன்" என்கிறார் டென்

---

* வெள்ளையர்களின் கோஷ்டி ஹிமாலயச் சிகரங்களுக்குச் செல்லும்போது இவர்களுக்குத் தேவையான பிரத்தியேக உணவுப் பொருள்கள், கூடாரங்கள் ஆடைகள் முதலியவற்றைத் தூக்குவதற்கென்றே ஷெர்ப்பா கோஷ்டிகளைக் கூட அழைத்துச் செல்வதுதான் வழக்கம். பத்தாயிரம் அடி பதினையாயிரம் அடி உயரமுள்ள இடங்களில் சாதாரண மனிதர்களுக்கு மூச்சுவிடக் கூட முடியாது. பளுவான சாமான்கள் ஒன்றையும் தூக்க முடியாது.

ஆனால் ஷெர்ப்பாக்கள் என்ற இனத்தார் இயற்கையிலேயே அதிக உயரமான இடங்களிலேயே பிறந்து வளர்ந்து வந்தவர்களாதலின் அதிக உயரமுள்ள இடங்களிலும் இவர்களுக்கு பளுவுள்ள மூட்டைகளைக்கூட சிரமமேதுமில்லாமல் தூக்கிக்கொண்டு செல்ல முடியும். சிகரங்கள் ஏறுவதில் வெள்ளையர்களுக்கு இணையாகவோ, அல்லது அவர்களை முந்திக்கொண்டோ கூட ஷெர்ப்பாக்கள் செல்லலாம். ஆனாலும் சிகரங்களை எட்டிப் பிடிப்பதிலுள்ள புகழ் ஷெர்ப்பாக்களுக்குக் கிடையாது. அது வெள்ளையர் கோஷ்டி அங்கத்தினர்களையே சேர்ந்ததாகும். ஆனால் 1953-ம் ஆண்டில் எவரெஸ்டைப் பிடித்த வெள்ளையர் கோஷ்டியில் ஒரு அங்கத்தினர் என்ற ஹோதாவில்தான் டென்சிங் சென்றிருந்தார்.

சிங். பள்ளிக்குச் சென்று கல்வி பயிலாதடென்சிங்கிற்குப் பத்து பாஷைகளில் நன்ருகப் பேசத் தெரியும். தன் இனத்தார் ஹிமாலய சிகரங்களில் ஏறு வதைப் பற்றி அபாரப் பெருமை கொண்டவர் டென்சிங். "வெறும் பணத்திற்காக மட்டுமே எந்த மனிதரும் உயிரைக் கொடுத்து இம்மாதிரியான வேலைகளில் ஈடுபடுவதில்லை" என்று கூறுகிருர் டென்சிங்.

ஹிமாலயப் பர்வதத்தில் பனியால் மூடப்பட்ட பிரதேசங்களிலெல்லாம் ஒரு வகை மனிதக் குரங்குகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் குரங்குகள் மனிதர்களைக்கூட விழுங்கி விடுகின்றனவாம். இந்தக் குரங்குகளையாரும் நேரில் கண்டதில்லை, இவற்றின் காலடிச் சுவடுகள் மட்டுமேதான். இதுவரை மனிதர் கண்ணுக்கு காணப்பட்டிருக்கின்றன. இந்தக் காலடிச் சுவடுகள் மனிதன் காலடிச் சுவடுகளைவிட நாலைந்து மடங்கு பெரிதாயிருப்பதால் இந்த மிருகங்கள் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று யூகித்துக்கொள்ளலாம்.

டென்சிங்கின் தந்தை இந்தக் குரங்கை இரு தடவை கண்டிருப்பதாக டென்சிங் கூறுகிருர். டென்சிங்கும் இவற்றின் காலடிச் சுவடுகளை இரு தடவைகள் பார்த்திருக்கிருராம். இந்தக் குரங்குகளின் இரு மண்டை ஓடுகள் இவரிடமிருக்கின்றன. சிறிய மிருகங்களையும் காய் கனிகளையும் உண்ணும் இந்தக் குரங்கு ஒரு நிசாசரனை ஜந்து இது என்பது டென்சிங்கின் அபிப்பிராயம். சிகரத்தின் மீது எவ்வளவு உயரப்போனுலும் டென்சிங் சிறிதும் களைப்படையவில்லை

சாதர்ரண மனிதர்களுக்கு உயரமளிக்கும் துயரம் இவரைப் பாதித்ததே கிடையாது. எவரெஸ்டு சிகரத்தைப் பிடிக்க வந்திருந்த ஒரு பிரெஞ்சு கோஷ்டியுடன் டென்சிங்சென்றிருந்தார். அந்தப் பிரெஞ்சுக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைப் பற்றி இவர் இவ்வாறு அபிப்பிராயம் கூறுகிருர். "எவரெஸ்டு சிகரத்தைப் பிடிக்க வந்திருந்த பிரெஞ்சுக்காரர்களும் ஸ்விட்சர்லாந்துகாரர்களும் என்னை அவர்களுக்குச் சமமாக நடத்தினர்கள். அவர்களின் அன்பைப் பற்றியும் தீரத்தைப் பற்றியும் நேர்மையைப் பற்றியும் சந்தேகமேயில்லை. ஆனல் அவர்கள் உள்ளத்தில் தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்களென்ற அபிப்பிராயம் இருந்துதான் வருகிறது.

உயிருக்கு ஆபத்து நேரிடும் சூழ்நிலைகளிலேயே எப்போதும் வாழ்ந்து வருவதால் மனித வேற்றுமையே கண்ணுல் காணுத எங்களுக்கு இம்மாதிரி வெள்ளையரின் மனப்பான்மை மிகவும் வேதனையளிக்கிறது.

டென்சிங் வெற்றி பெற்றது ஆங்கில கோஷ்டியாருடன் சென்றபோதுதான். இந்தக் கோஷ்டியார் எவரெஸ்டு சிகரத்தைப் பிடித்தது பற்றி அநேக புகார்களும், வதந்திகளுண்டு. அதைப்பற்றி டென்சிங் கீழ் வருமாறு கூறுகிருர்.

"வெற்றியடைந்த ஆங்கில கோஷ்டியின் பரிவாரம் மிகப்

பெரியது. ராணுவ மோஸ்தரில் தான் இந்தக்கோஷ்டித் தலைவர் கோஷ்டியை நடத்தி வந்தார். இதனல் எங்கள் ஷெர்ப்பாக் களுக்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற் பட்டன''

எவரெஸ்டைப்பிடித்ததுயார்? டென்சிங்கும் ஆஸ்திரேலியக் காரரான ஹிலாரியுமாகத்தான் பிடித்தார்களென்று இது வரையில் வந்துள்ள செய்தி டென் சிங்கிற்கு பிடிக்கவில்லை. ஹிலாரி தான் பிடித்தார் என்ற ஒரு வதந்தி கிளம்பி வெகு நாளாயிற்று. எவரெஸ்டு சிகரத்தின் உச்சியில் முதன் முதலில் யார் கால் வைத்தார் என்பதற்கு டென்சிங், ஹிலர்ரியும் அவரும் உச்சி வரையிலும் ஒன்ருகத்தான் சென்ருர்களென்றும் வெற்றிக் கொடி நாட்டிய இடத்தில் முதன் முதலாக கால் வைத்தது ஹிலாரி தானென்றும் கூறுகிருர். இம்மாதிரி முயற்சிகளில், சாதனை ஒரு தனி நபருடைய தாயினும் வெற்றி முயற்சியில் ஒத்துழைத்த அங்கத்தினர் யாவரையும் சேர்ந்த தாகும். இந்தக் கட்டுப்பாடு தெரிந்திருந்தும் எவரெஸ்டு சிகரத்தைப் பிடித்ததைப் பற்றி ஹிலாரி வெளியிட்டுள்ள அறிக்கைகள் டென்சிங்கிற்கு மிகுந்த வேதனையளித்துள்ளது. முயற்சி இடைஞ்சல்களில்லாமல் தொடர்ந்துகொண்டிருக்கும் பொழுது அதற்குக் காரணம் ஹிலாரி என்றும் இடைஞ்சல்கள் ஏற்பட்ட பொழுது அதற்குக் காரணம் டென்சிங் என்றும் ஹிலாரி தன் அறிக்கையில் கூறியுள்ளார். "அதாவது ஹிலாரி தலைவன், நான் பின்பற்றுகின்றவன் என்று இதற்கு அர்த்தம். இது சற்றும் உண்மையல்ல. இந்த முயற்சியில் எங்களிருவருக்கும் பங்குண்டு.''

— *New York Times*

THE ARYAVAIDIA PHARMACY [C.B.E.] LTD

H. O. Trichy Road, Coimbatore.

(*Phone No.* **108**)

Branch :—

140, Bazaar Road, Rayapettah Madras-14.

(*Phone No.* **85752**)

Approach for effective and excellent Ayurvedic medicines and treatment

Special treatments like Dhara, Pizhichil etc., undertaken.

Consulting Physician :—

Arya Vaidyan

P. V. RAGHAVA VARIER

சிறிய உருவிலும் பூரண தரிசனம்

★

தெய்வ உருவின் அழகிய, நேர்த்தியான வர்ணனை இந்த அத்தியாயத்திலிருக்கிறது. இவையெல்லாம் உண்மையாயினும் இந்த சிருஷ்டியினிடத்தில் எனக்குத் தனி ஆசை இல்லை; சிறிய உருவத்திலேயே எனக்குத் திருப்திதான். சிறியதாய் சாதாரணமாய் என்முன் காணப்படுகிற உருவின் இனிமையை அனுபவிக்க நான் கற்றுக் கொண்டு விட்டேன். ஆண்டவன் துண்டு துண்டாய்ப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டவனுடைய எந்த உருவை நாம் பார்க்கிறோமோ அது அவனுடைய ஒரு பகுதி என்றும் எஞ்சிய பகுதி புறத்தே இருக்கிறதென்றும் எனக்குத் தோன்றவில்லை. எந்த ஆண்டவன் இந்தப் பெருத்த சிருஷ்டியில் வியாபித்திருக்கிறானோ அவனே பூரணமாய் ஒரு சிறிய விக்கிரகத்திலும், ஒரு சிறு மண் துளியிலும் வியாபித்திருக்கிறானே யல்லாது எவ்வகையிலும் குறைவாய் அல்ல. அமுதக் கடலில் உள்ள இனிமை அதன் ஒரு துளியிலும் இருக்கிறது. எனக்குக் கிடைத்துள்ள ஒரு சிறு அமுதத் துளியின் இனிப்பை நான் ருசித்துக் கொண்டே இருக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. நான் வேண்டுமென்றேதான் அமுதத்தை உதாரணமாகக் கொண்டு, தண்ணீரையோ, பாலையோ கூறவில்லை. ஒரு கிண்ணம் பாலுக்குள்ள ருசியேதான் ஒரு செம்புப் பாலுக்கும் இருக்கும். ஆனால் ருசி அவ்வாறே இருந்த போதிலும் புஷ்டி அதே அளவு இராது. ஒரு துளி பாலுக்குள்ளதைவிட ஒரு கிண்ணப் பாலுக்குள்ள புஷ்டி அதிகம். ஆனால் அமுதத்தின் விஷயமோ இவ்வாறல்ல. அமுதக் கடலின் இனிப்பு அமுதத் துளியில் இருப்பதோடு புஷ்டியும் அதே அளவுதானிருக்கும். அமுதம் ஒரு துளியே அருந்திய போதிலும் நமக்குச் சாகாவரம் கிடைத்து விடும்.

அவ்வாறே ஆண்டவனுடைய விராட் ரூபத்தில் எந்த தெய்வத்தன்மையும், புனிதமும் இருக்கிறதோ அதுவே ஒரு சிறிய உருவிலும் இருக்கிறது. என்னிடம் நீங்கள் ஒரு பிடி கோதுமையை மாதிரிக்காகக் கொடுக்க எனக்கு

அதை கோதுமை என்று புரிந்து கொள்ள முடியாதிருக்கையில் என்முன் ஒரு மூட்டை கோதுமையைக் கொட்டினல் என்ன பயன்? என் முன்னுள்ள சிறிய மாதிரிகளிலிருந்து நான் அவனைப் புரிந்து கொள்ளாமலிருக்கையில் பேருருவம் தாங்கியுள்ள ஆண்டவனை எப்படி அறிந்து கொள்வேன்? பெரியவை, சிறியவை என்பவை என்ன? சிறிய உருவைப் புரிந்து கொண்டு விட்டால் பெரியதைப் புரிந்து கொண்ட மாதிரிதான். ஆகையால் ஆண்டவன் எனக்குத் தன் பேருருவைக் காட்ட வேண்டுமென்ற ஆவல் எனக்கில்லை. அர்ஜுனனைப் போல் விச்வரூப தரிசனம் காட்ட வேண்டுமென்று கோர எனக்குத் தகுதியும் இல்லை. மேலும் எனக்குக் காணப்படுவது விச்வரூபத்தின் ஒரு பகுதி என்பதுமல்ல. ஒரு சித்திரத்தின் ஒரு பகுதியைக் கிழித்துக் கொணர்ந்தால் அதிலிருந்தே நாம் முழுச் சித்திரம் எப்படியிருக்குமென்று உணர முடியாது. ஆனல் பரம்பொருள் துண்டு துண்டாய் வெட்டப்பட்டதல்ல. ஒரு சிறிய உருவிலும், சிலையிலும் அந்த இறுதியற்ற ஆண்டவன் முழுமையும் அடங்கியிருக்கிறன். ஒரு சிறிய புகைப் படத்திற்கும் பெரிய புகைப் படத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன? பெரிய புகைப்படத்திலுள்ள எல்லா அம்சங்களும் சிறியதிலும் இருக்கின்றன. சிறிய புகைப் படம் பெரியதின் பகுதி அல்ல, துண்டல்ல. சிறிய எழுத்துக்களால் கோர்த்து அமைத்த ஒரு சொல்லுக்கு உள்ள பொருள் எதுவோ அதுவேதான் பெரிய எழுத்துக்களால் அமைந்த சொல்லுக்கும் இருக்கும். பெரிய எழுத்துச் சொல்லுக்குள்ள பொருள் பெரியதாயும் சிறிய எழுத்துச் சொல்லுக்குள்ள பொருள் சிறியதாயும் இருக்கும் என்பதில்லை.

விக்கிரக ஆராதனைக்கு அடிப்படையாயுள்ள கருத்து இதுவே. விக்கிரக ஆராதனையை இதுவரையில் எத்தனையோ பேர் தாக்கியிருக்கிறர்கள். வெளி நாட்டினர், நம் நாட்டையே சேர்ந்த சில சிந்தனைசீலர்கள் விக்கிரக ஆராதனையைத் தவறென்று கூறியிருக்கிறர்கள். ஆனல் நான் சிந்திக்கச் சிந்திக்க விக்கிரக ஆராதனையின் சிறப்பு எனக்கு மேன்மேலும் விளங்கிக் கொண்டே வருகிறது. விக்கிரக ஆராதனையின் கருத்தென்ன? ஒரு சிறிய பொருளில் அகில சிருஷ்டியையும் உணர உதவும் வித்தையே விக்கிரக ஆராதனை என்பது. ஒரு சிறிய கிராமத்தில் அகில பிரம்மாண்டத்தையும் காண உதவும் வித்தையைக் கற்பது தவருகுமா? இது வெறும் கற்பனையல்ல: நிதரிசனமான அனுபவத்தில் வந்த விஷயம். விராட் உருவில் உள்ளவையெல்லாம் ஒரு சிறிய விக்கிரகத்திலும் ஒரு சிறு மண் திவிலையிலும் அடங்கியிருக்கின்றன. அந்த மண் கட்டியின் கீழே மா, வாழை, கோதுமை, தங்கம், தாமிரம் வெள்ளி ஆகிய எல்லாம் இருக்கின்றன. சிருஷ்டி அனைத்தும் அந்தத் திவிலையினுள் அடங்கியிருக்கிறது. ஒரு நாடக கோஷ்டியில் ஒரே ஆள் அடிக்கடி வெவ்வேறு வேஷம் புனைந்து கொண்டு நாடக மேடைக்கு வருவதைப் போலவேதான் ஆண்டவனும் என்று உணருங்கள். ஒரு நாடகாசிரியன் நாடகம் ஒன்றை எழுதி, தானே அந்த நாடகத்தில் நடிப்பதைப் போல பரம்பொருளும் முடிவில்லாத நாடகத்தை எழுதி அளவிலடங்காப் பாத்திரங்களின் வேஷம் பூண்டு நாடக மேடையில் வந்து நடிக்கிறது. இந்த முடிவில்லா நாடகத்தின் ஒரு பாத்திரத்தைப் புரிந்து கொள்வதே எல்லாப் பாத்திரங்களையும் புரிந்து கொள்வதற்கு ஈடாகும்.

காவியத்தின் உவமை, உதாரணம் ஆகியவைகளுக்கு ஆதாரமெதுவோ அதுவேதான் விக்கிரக ஆராதனைக்கும். உருண்டு திரண்டுள்ள பொருளைதையும் பார்க்கும் பொழுது நமக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. ஏனெனில், அதில் ஒரு ஒழுங்கு முறை இருக்கிறது. ஒழுங்கு முறை என்பது ஆண்டவ

னுடைய தன்மையே. ஆண்டவனுடைய சிருஷ்டி சர்வாங்க சுந்தரமானது. அதில் ஒழுங்கு முறை இருக்கிறது. அந்த உருண்டு திரண்டுள்ள பொருள் ஒழுங்கான ஆண்டவனுடைய உருவே. ஆனால் காட்டில் வளர்ந்துள்ள கோணல் மாணலான மரமும் ஆண்டவன் உருவமே. அதில் ஆண்டவனுடைய கட்டுக்கடங்காத தன்மை காணப்படுகிறது. அந்த மரத்திற்குக் கட்டு திட்டம் எதுவும் கிடையாது. ஆண்டவனை யார் கட்டுப்படுத்துவார்? அந்தக் கட்டிலடங்காத ஆண்டவன் அந்தக் கோணல் மாணலான மரத்திலிருக்கிறான். நேராக நெடிது ஓங்கி நிற்கும் கம்பத்தைக் காணும் பொழுது அது ஆண்டவனை ஒத்திருப்பதாய்த் தோன்றுகிறது. சித்திர வேலைப்பாடுள்ள, நகாசு வேலைப்பாடமைந்த தூணைப் பார்ப்போமானால் அதில் வானத்தில் நட்சத்திரங்கள் என்ற நகாசு வேலையைச் செய்யும் ஆண்டவன் காணப்படுகிறான். கத்தரித்து வெட்டி விட்ட மரம் செடிகளுள்ள அழகிய, சிங்காரத் தோட்டத்தில் ஆண்டவனுடைய அடக்கமான உருவம் தோன்றுகிறதென்றால், பெரிய காட்டில் ஆண்டவனுடைய பெருமையும் கட்டிலடங்காத் தன்மையும் காட்சியளிக்கின்றன. காட்டிலும் இன்பம் ஏற்படுகிறது. அழகிய பூங்காவிலும் மகிழ்ச்சி உண்டாகிறது. அப்படியானால் நாம் பித்தர்களா? இல்லை, இரண்டிலுமே இன்பம் ஏற்படுவதற்குக் காரணம், ஆண்டவனுடைய தன்மை இரண்டிலும் இருப்பதே. மழு மழுவென்றுள்ள சாலக் கிராமத்திலுள்ள தேஜஸே நர்மதையில் எடுக்கப்படும் கரடுமுரடான சிவலிங்கத்திலும் இருக்கிறது. ஆகையால் எனக்கு அந்தப் பேருருவம் தனியாய்த் தெரியாதிருப்பினும் பாதகமில்லை;

ஆண்டவன் எங்கும் வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு குணங்களின் மூலமாய்த் தோன்றியிருப்பதனாலேயே நமக்கு அந்தந்தப் பொருளினால் ஆனந்தம் ஏற்படுகிறது; அவை நம்மைச் சேர்ந்தவையென்றே உணர்ச்சி உதிக்கிறது. நமக்குக் காரணமில்லாமல் ஆனந்தம், உண்டாகவில்லை. ஆனந்தம் தோன்றக் காரணமென்ன? அதற்கும் நமக்கும் ஏதோ தொடர்பிருப்பதனாலேயே ஆனந்தமேற்படுகிறது. குழந்தையைப் பார்த்ததும் தாயினுள்ளம் துள்ளுகிறது. ஏனெனில், அவளுக்கு உறவு தெரியும். இதே வகையில் ஒவ்வொரு பொருளுடனும் பரம்பொருளை இணைத்துக் கொள். என்னிடமுள்ள ஆண்டவனே அதிலும் இருக்கிறான் என்று இவ்வகையில் தொடர்பை வளர்ப்பதே ஆனந்தத்தை வளர்ப்பதாகும். ஆனந்தத்திற்கு வேறு உபாயம் எதுவுமில்லை. நீங்கள் எல்லாவிடங்களிலும் அன்புத் தொடர்பை அமைத்துக் கொள்ளுங்கள்; பிறகு என்ன அற்புதம் நிகழ்கிறதென்று பாருங்கள்! எல்லையில்லாத சிருஷ்டி அனைத்திலும் வியாபித்துள்ள பரம்பொருள் ஒவ்வொரு அணுவிலும் திவிலையிலும் காணப்படுவான். இந்தக் காட்சி, இந்தக் காட்சியைப் பெறும் சக்தி கிட்டிய பிறகு நமக்கு வேறென்ன வேண்டும்? ஆனால் இதற்குப் பொறிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். நமது போக வாசனைகள் விலகி அன்பின் புனித நோக்கு ஏற்பட்டுவிடுமானால் நமக்கு ஒவ்வொரு பொருளிலும் ஆண்டவனே காட்சியளிப்பான். உபநிடதங்களில் இவ்விஷயம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது: ஆன்மாவின் நிறம் எப்படி யிருக்கும்? ஆன்மாவின் நிறத்தை எந்த நிறமென்று சொல்லுவது? ரிஷி அன்புடன்,

—(யதா அயம் இந்த்ரகோபஃ) என்கிறார்.

இந்த செக்கச் செவேரென்று பட்டைப் போன்று மிருதுவான பூச்சி இருக்கிறதே அதைப் போன்றதேதான் ஆன்மாவின் உருவமும். இந்தப் பட்டுப் பூச்சியைக் கண்டதும் எவ்வளவு இன்பம் ஏற்படுகிறது! இந்த இன்பத்

198761 சென்னை

திற்குக் காரணமென்ன? எனக்கு என்னிடம் எந்தப் பாவனை யிருக்கிறதோ அதுவே இந்தப் பட்டுப் பூச்சியினிடமும் உள்ளது. என்னுடன் அதற்குச் சம்பந்தமில்லாவிடில் இன்பம் ஏற்படுமா? என்னுள் உள்ள அழகிய ஆன்மாவோ பட்டுப் பூச்சியினிடமும் உள்ளது. இதனாலேயே அதை உவமையாகக் கூறப்பட்டது. உவமை ஏன் கூறுகிறோம்? அதனால் இன்பம் ஏற்படுவது இரண்டு பொருள்களினிடையில் ஒற்றுமை யிருப்பதனாலேயே அதை உவமை அளிக்கிறோம்; அதனாலேயே இன்பமும் ஏற்படுகிறது. உவமேயமும் உவமானமும் முற்றிலும் வேறுபட்டிருக்குமானால் இன்பம் ஏற்படாது. ஒருவன் உப்பு மிளகாயைப் போலிருக்கிறதென்று சொல்லுவானானால் நாம் அவனைப் பித்தனென்போம். ஆனால் ஒருவன் நட்சத்திரங்கள் பூக்களைப் போலிருக்கின்றன என்றால் அவைகளினிடையில் ஒற்றுமையிருப்பதால் இன்பம் ஏற்படுகிறது. உப்பு மிளகாயைப் போலிருக்கிறது என்னும் பொழுது ஒற்றுமை உணர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் உப்பிலுள்ள பரம்பொருளே மிளகாயிலும் இருக்கிறது என்று உணரக் கூடிய அளவுக்கு ஒருவருடைய நோக்கு பரந்து போயிருக்கையில் அவர் உப்பு மிளகாயைப் போலிருகிறதென்று அவர் சொல்வாரானால் அவர் கூற்றிலும் நமக்கு இன்பமே ஏற்படும். கருத்தென்ன வென்றால், ஆண்டவனுடைய உருவம் ஒவ்வொரு பொருளிலும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. அதற்கு விராட் உருவத்தைக் காணத் தேவையில்லை.

மூலம் :— ஆச்சார்ய விநோபாஜியின் கீதைப் பேருரைகள்,
சர்வோதயப் பிரசுரம், தஞ்சாவூர்.

THE FAMOUS

AROGYA RAKSHAMIRTHAM MEDICINE

For impurities of Blood, general debility, piles of all kinds, Fistula, constipation, Gastric and Breathing troubles, Menstrual complaints, Karappans and other complaints of children etc.

N. B. **(Agency will be given on decent commission)**

Head Office Address

A. R. DEPOT

Prop : (M. PAPPACHAN)

Kundara P. O. T. C. STATE.

பழமையில் மோகம்

"குச்சாமாமா"

(எட்டாம் பாகம்)

●

பசித்தவிடத்தில் கிடைத்ததைத் தின்பான். குளித்தால் குளிப்பான். பல நாள் வரையில் குளிக்கவுஞ் செய்யாமலே சுற்றிக்கொண்டிருப்பான். சில சமயங்களில் வெறுக்கத் தகுந்தவரிடையில் புழங்கிக் கொண்டிருப்பான். சில சமயம் பெரிய விடன் போல் காண்பான். சில சமயம் பெரிய சூதாட்டக்காரன் போல் தென்படுவான். இன்னதென்று சொல்ல முடியாத போக்குடன் சில வருஷங்களைக் கழித்தான்.

ராஜலக்ஷ்மி என்னவானளோ அவனுக்குத் தெரியாது; தெரிந்துகொள்ளவும் அக்கறையுள்ளவனாகக் காணவில்லை.

ஒரு நாள் திடீரென்று பார்த்தசாரதி காணக் கிடைக்கவில்லை. எங்கு சென்றானென்று சொல்லக் கூடியவர் ஒருவருமில்லை. அக்கம் பக்கத்தில் விசாரித்ததிலும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

பார்த்தசாரதியிடம் கம்பௌண்டராக வேலை பார்த்து வந்தவன் கிட்டு என்பவன் ஒருவன். அவனுக்குத்தான் பார்த்தசாரதியின் திடீர் மறைவில் ஸகிக்க முடியாத துக்கம்.

மற்றுஞ் சில வருஷங்கள் கழிந்தன. ஊரில் யாரோ ஒருவர் தீர்த்த யாத்திரை சென்று வந்தவர் சொன்னர். ஒரு மாதத்திற்கு முன்தான் பார்த்தஸாரதியை பத்ராசலத்தில் கண்டதாகச் சொன்னர். ஒரே கம்பியுள்ள ஒரு சுருதி வாத்தியத்தை விரலால் சுண்டியபடி தன்னை மறந்து ஏதோ பாடிக் கொண்டிருந்தானும் ஸ்ரீராமன் ஸந்நிதியில். யாத்ரீகர் அவனை யடுத்து "பார்த்தசாரதி!" என்று கூவி ஏதோ யோகக்ஷேமங்களை விசாரித்தாராம்.

பார்த்தஸாரதி இவரை முன்பின் அறிந்தவனாக நடிக்கவும் இல்லை. பாஷையே தெரியாதவன்போல் நடிக்கத் தொடங்கி விட்டானும். வேறு ஜனங்களிடம் விசாரித்ததில் சில மாத காலமாக அவன் அக் கோயிலில் தினமும் அப்படித்தான் பாடிக்கொண்டிருக்கிறான் என்று மட்டுந்தான் அறிந்தார். ஏதோ கோவிலில் கொடுக்கும் பிரசாதத்தை ஒருவேளை வாங்கியுண்டு அடுத்துள்ள புஷ்கரணியில் இரண்டு கை ஜலம் குடித்துவிட்டு மறுபடியும் பாடத் தொடங்கி விடுவான். மற்றபடி அவன் வசிக்கும் ஜாகை முதலிய

விவரங்கள் ஒருவருக்குமே தெரியாது என்றும் அறிந்தார். ஜனங்கள் அவனை ராமதாஸ் என்று அழைத்து வந்தார்களாம். இதற்குள் ஏதோ பிரசாதம் வழங்கினார்கள். பார்த்தசாரதி அதை வாங்கிக்கொண்டான். யாத்ரீகருஞ் சென்று வாங்கிக்கொண்டார். பார்த்தசாரதி என்ன செய்யப் போகிருனே என்று பார்த்துக்கொண்டிருந்தபோதே பார்த்தசாரதி யாத்ரீகரிருந்தவிடத்திற்கு வந்தான். தன் கையிலிருந்த பிரசாதத்தையும் யாத்ரீகரின் கையில் வைத்துவிட்டு விர்ரென்று அம்புபோல் புஷ்கரணிப் பக்கம் போய்விட்டான். கைநிரம்பி வழிந்து கொண்டிருந்த பிரசாதத்துடன் காத்துக்கொண்டிருந்தார் யாத்ரீகர்.

அவ்விடத்தில் வைத்துவிட்டுப் போன சுருதி வாத்யத்தை எடுத்துக்கொள்ள பார்த்தசாரதி வருவான் என்று அவர் எதிர்பார்த்தார். நெடுநேரங் காத்திருந்த பின் அவருக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. புஷ்கரணிப் பக்கம் ஓடிப்போய் பார்த்தார். பார்த்சாரதி காணவில்லை. கண்டவரிடமெல்லாம் ராமதாஸைப் பார்த்தீர்களா என்று ஊரெல்லாம் விசாரித்தாராம். அங்கு பார்த்தேன் இங்கு பார்த்தேன் என்று யாரோ ஒரிருவர் முதலில் சொன்னார்களாம்,பிறகு அதைச் சொல்வாருமில்லை.

சுருதிவாத்யத்தையுங்கையில் ஏந்தியவராய் மூன்று தினங்கள் அவ்வூரில் சுற்றியலேந்தார் யாத்ரீகர். வீண் சிரமந்தான் மிச்சம். சுருதி வாத்யத்துடன் ஊர் திரும்பியுள்ளார். யாராவது பார்த்தசாரதியை எங்கேயாவது கண்டால் நமது யாத்ரீகருக்குத் தெரிவியுங்கள். அந்த சுருதி வாத்யத்தை அவனிடம் திரும்ப ஒப்படைக்கவேணுமென்று யாத்ரீகர் ஆவலாயிருக்கிருர். தகவலைச் சொன்னல் நன்றி மிக்கவராயிருப்பார்.

ராஜலக்ஷ்மியை யாராவது கண்டாலும் பழமையின் மோகத்தாலும் புதுமை புளித்ததாலும் பார்த்தசாரதியின் வாழ்க்கை என்ன வாயிற்றென்பதை அவளிடம் தெரிவிக்கவும். மற்றும் பழமையை வேம்பென வெறுத்துப் புதுமையில் தலைகால் தெரியாமல் மோஹித்த ராஜலக்ஷ்மியின் வாழ்க்கை எத்தரத்தில் கோவிந்தம் போடுகிறதென்பதையும் யாத்ரீகருக்குத் தெரியப்படுத்தவும்.

பழமையடைந்ததே கோவிந்தா!
பின்பு
புதுமை புகுந்ததே
கோவிந்தா!
புதுமை பயன்றதோ
கோவிந்தா! இனி
பழமையைக் காண்போமா
கோவிந்தா!

(முற்றும்)

பெண் மனம்

வருகிறேன் வளமெலாம்
வாழ்வில் நிறைத்திடத்
தருகிறேன் என்பதென
தாகம் தணிக்குமா?

இருவரோருயிரென
இணைவதில் லின்பமா?
பிரிவிலே யதிகநாள்
பிணைவதில் லின்பமா?

அளவிலா ஆசையின்
அமுதமே! நாயகா!
இளமையே நாளெலாம்
என்பதுன் எண்ணமா?

விரக வேதனைகளுன்
விண்ணின்ப மாயினும்
நரகமே யது எனை
நாயாய்த் துறத்தது!

ஆண்டெலாம் வேதனை
ஆனபின்பென் மனம்
தூண்டில் முள் மீனெனத்
துடிப்பதேனறி கிலே?

ஒரு நாளிலொரு கணம்
ஒரு முறை கணவனைப்
பரிவுடன் பார்த்திடப்
பாவியேன் விழைகிறேன்

கண்முனே காண்பதே
கணவனுன் உறவெனில்
பெண் பேதை நானதைப்
பெரிதெனக் கருதுறேன்!

நாதமா மின்பமே!
நாயகிக் கணவனே!
ஈதெலா மின்னமும்
இயம்புதற் கொண்ணுமோ?

பாதி நீ பாதி நான்
பாடலாம் வாழ்விலே
தாளமே யிசையெனத்
தழுவ வா கணவனே!

—சாலிவாஹனன்.



அதிசய நாடு

★

சமவெளியெனப் புகழ் பெற்ற இந்தியாவில்தான் உலகத்திலேயே மிக உயரமுள்ள சிகரங்களிருக்கின்றன.

நகரத்துக்கு நகரம், வீதிக்கு வீதி, வீட்டிற்கு வீடு புதியதும் பழையதும் கலந்து தோற்றமளிக்கும் இங்கே!

இந்திய மக்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகள் மிக விந்தையானவை.

காஷ்மீரிலுள்ள மலைஜாதியினர் மேற்குத்தொடர்ச்சி மலை வாசிகளைப்போலல்ல; வடக்கு அஸ்ஸாம் வாசிகளைப் போலவுமல்ல.

வட இந்தியர் தென்னிந்தியாவிற்கு வந்தால் அந்நிய தேசத்திற்கு வந்ததுபோல் அவருக்குத் தோன்றுகிறது. அதுபோல் தென்னிந்தியரும் வட இந்தியாவிற்குச் செல்லும்போது அந்நிய தேசத்திற்குச் செல்வதுபோல் தோன்றுகிறது.

காஷ்மீரத்து அந்தணர் மாமிசம் புசிப்பார். வங்கத்து அந்தணர் மீன் போஜனம் செய்வார். இந்தத் தகவலைக் காதாலே கேட்கக்கூட சகியார் உத்தர தேசத்து அந்தணர்.

அஸ்ஸாம் மாகாண ஹிந்து மதம் ஒன்று. தென்னிந்தியாவின் ஹிந்து மதம் ஒன்று. பஞ்சாபிலும், குஜராத்திலும் ஹிந்து மதம் ஒன்று.

மலபார் முஸ்லீமான மாப்ளாவின் வாழ்க்கை வரலாறுகளைக் கேட்டால் பஞ்சாப் முஸ்லீமும், வங்கத்து முஸ்லீமும் தற்கொலை செய்துகொள்வார்கள்.

பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வந்தபோதுதான் கிறிஸ்துவ மதம் இங்கு தோன்றிற்று என்று கருதும் பஞ்சாபிக்கு 2000 வருஷ காலமாக கேரளத்தில் கிறிஸ்துவர்கள் இருந்து வருகிறார்களென்பது ஆச்சரிமளிக்கும்.

15 முக்கிய பாஷைகளும் 210 கிளை பாஷைகளும் பரவியுள்ள இந்தியாவில் ஹிந்தியை அரசியல் பாஷையாக்க் திட்டமிட்டாலுங் கூட ஆங்கிலத்தில் பேசினால்தான் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியும்!

CARAVAN

நீதி மலர்கள்

சுமார் எழுநூறு ஆண்டுகட்குமுன் பாரசீகதேசத்தில்,ஷிராஸ் என்னும் நகரில், ஸஃபிஸாதி என்னும் பெரியார் ஒருவர் புகழ் பெற்று விளங்கினார். அவர், தம் வாழ்க்கை அனுபவங்களையெல்லாம் கதையுருவமாகவும், கவிதைகளாகவும், பழமொழிகளாகவும் எழுதியுள்ளார். குலிஸ்தான் என்ற பாரசீக மொழியானது, தமிழில் ''ரோஜாத்தோட்டம்'' என்று பொருள்படும். ஆனால் இங்கு குலிஸ்தான் என்பது, வாடாத அறிவுப் பூக்கள் நிறைந்துள்ள ஒரு அரிய நூலைக் குறிக்கும். இதனின்றும் எடுக்கப்பட்டுள்ள சில நீதி மலர்களாகும் கீழ் வருபவை:—

பகலில் தீவட்டி போடுவோன், இரவில் எண்ணெயில்லாது விழிப்பான்.

★

வனாந்தரத்தில் பசியோடு வசிக்கும் ஒருவனுக்குப் பொன்னும், மண்ணும் ஒன்றேதான்.

ஒரு விலங்கிற்கு நீ பேசக்கற்பிக்க முடியாது;ஆனால் அதனிடத்தினின்றும் நீ மௌனத்தைக் கற்றுக் கொள்ளலாம்.

★

ஒரு சிறு பாயில் பத்துத் துறவிகள் அமைதியாகப் படுத்துறங்குவார்கள். ஆனால் ஒரு பெரிய நாட்டில் இரண்டு மன்னர்கள் முரணின்றி அமைதியுடனிருத்தல் அரிது.

★

ஒரு மதயானையைப் பிடித்துப் போர் புரியும் வீரனைக் காட்டிலும், தன்னைப் பிறர் சடுத்தாலும் தான் முகம் கடுக்காது, நிதானமாகப் பேசுவோனையே உண்மை வீரனாகப் பெரியோர் மதிப்பர்.

★

அறிவையடைந்தும் அதன்படி நில்லாதவன், நிலத்தை நன்றாக உழுதும் விதைக்காதவனுக்குச் சமமானவன்.

★

மெதுவாக விடாது நடப்பது, விரைவாக ஓடி மத்தியில் விழுந்து விடுவதிலும் மேல்; கொஞ்ச தூரம் தாவியோடிக் களைத்துப் போகும் அரபிக் குதிரையினும், சேர்ந்தாற்போல் நிதானமாக நடக்கும் ஒட்டகம், வனாந்தரத்தை எளிதில் தாண்டுகிறது.

ஒரு பொருள் கஸ்தூரி என்பதை அதன் மணமே காட்டும். ஒரு மனிதன் கலையில் நிபுணனென்பதை அவன் திறமையே காட்டும்.

★

நமது வாழ்க்கை இன்பமும், துன்பமும், நிறைவும், குறைவும் உள்ளதால் வணுந்தரக் காற்றுப் போல் செல்லுகின்றது.

★

வெளுத்த தலையைக் கறுப்பாக்கினாலும் ஆக்கலாம்; ஆனால்; குனிந்த முதுகை நிமிர்க்க முடியாது.

டர்பன். ச. மு. பிள்ளை.

M. E. T. A.

A Name to remember for

Electrical Installations of every description and Radio Servicing

Charges Moderate

Get the Best

Buy from :—

Madras Electric Trades & Agencies

Engineers, Contractors & Dealers

80/3, Lloyds Road, Gopalapuram, Madras-6.

Prop. K. M. ABRAHAM

அரசனும் சிறுவனும்

அந்தக் காலத்தில் ரஷியா தேசத்தை அரசாண்ட ஜார் அரசர் ஒரு நாள் தமது குதிரை மீது ஏறித் தனியாக ஊரைச் சுற்றி வந்தார். ஒரு தெரு ஓரத்தில் ஒரு சிறுவன் நின்று வழியே செல்வோரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

குதிரை மீது சென்ற அரசர் சிறுவனை நோக்கி "அப்பா சிறுவா நீ எதனைக் கவனித்துக் கொண்டிருக்கிருய்"? என்று கேட்டார்.

சிறுவன் "பிரபுவே, அரசர் இந்த வழியே செல்வார் என்று கேள்விப்பட்டேன். அவர் எவ்வாறு இருப்பார் என்று பார்ப்பதற்காக ஆவலாக நிற்கிறேன்" என்ருன்.

ஜார் அரசர் உடனே 'நான் அரசரைக் காட்டுகிறேன் என் பின்னல் இந்தக் குதிரை மீது ஏறிக்கொள்' என்ருர்.

சிறுவன் மகிழ்ச்சியுடன் ஏறிக்கொண்டான். ஜார் அரசர் சிறுவனை நோக்கி, "அரசரைக் கண்டால் ஒவ்வொருவரும் தங்கள் தலையில் உள்ள தொப்பியை எடுத்து வணங்குவார்கள். அதிலிருந்து யார் அரசர் என்பதை நீ கண்டு கொள்" என்ருர்.

பின்னர் இருவரும் ஊருக்குள்ளே சென்ருர்கள். வீதியில் சென்றவர்கள் ஒவ்வொருவரும் குதிரையில் செல்கிறவரை வணங்கித் தங்கள் தொப்பியை எடுத்து மரியாதை செய்தார்கள். அப்பொழுது ஜார்" அரசர் யார் என்பது தெரிந்ததா? என்றுகேட்டார்.

சிறுவன் உடனே 'நம் இருவரில் யாரேனும் ஒருவர்தான் அரசராக இருக்கவேண்டும் என்பது தெரிந்தது. ஆனல் நம் இருவர் தலையிலும் தொப்பியிருப்பதால், யார் அரசர் என்பது தெரியவில்லை" என்ருன்.

இந்த பதிலைக் கேட்ட அரசருக்குச் சிறுவன் மீது அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. பிற்காலத்தில் அரசர் அவனைத் தமது சேனுதிபதியாக நியமித்துக் கொண்டாரென்று ரஷியா தேச சரித்திரத்தில் ஒரு கதை வழங்கி வருகிறது.

(நெல்லை—அசோகன்)



பரமஹம்ஸர்

அவர் இருபத்தைந்து வயது இளைஞர். காவி உடை அணிந்துள்ளார். கழுத்திலே ருத்ராட்சம் அசைந்தாடுகிறது. நெற்றியிலே சந்தனத் திலகம் பளபளக்கிறது. தோள்களிலே சடாமுடி படிந்து விளையாடுகிறது. கால்களில் பாதக் குறடு.

ஒரு கையில் கமண்டலம். மற்ற கையில் நீண்ட தடி.

இருபுறங்களிலும் நெடிது வளர்ந்த மரங்கள்.

இடையிலே ஒரு நீண்ட பாதை! அதுவாழ்க்கைப்பாதை!

அந்தப் பாதையிலே இளம் சந்நியாசி தீரமுடன் முன்னேறுகிறார்.

பாதையிலே செல்லுகையில் முதலில் அழகான ஏரியொன்று தெரிகிறது!

மாயை ஏரி!

அதன் கரையிலே மரக்கிளையொன்றில் நல்லாடையணிந்து பதினாறு வயது நங்கையொருத்தி கரத்தில் தெய்வீக மலர் மாலையேந்தி அமர்ந்திருந்தாள்.

அவள் கல்வித் தெய்வம். அவளது கையில் இருந்தது பொதுஜன செல்வாக்கு என்ற மாலை.

பரபரப்புடன் எழுந்து அவர் முன்னே வந்தாள்.

'நாத'

'தேவி'

அவரது கழுத்தில் மாலை அணிவிக்க முயன்றாள்.

அமைதியுடன் அவர் நகர்ந்து கொண்டார்.

'நமக்குப் புகழ்' வேண்டாம். "பிரம்ம ஞானம் வேண்டும் தருவீர்களா?"

'பிரம்ம சுகம்பெற நான் முதற்படி'

'நாம்ராஜபாட்டையில்செல்ல விரும்பவில்லை. ஆழ்ந்து ஆராய விரும்புகிறோம். உதவ முடியுமா? 'மன்னிக்க வேண்டும்'

★

இளைஞர் முன்னேறினார். இரண்டாவது ஏரி காணப்பட்டது. கபடம் என்ற ஏரி.

முன்போல நங்கை 'இன்பம்' அவள் அழகு. முத்தால் ஆன மாலை.

அந்நங்கை செல்வத் திருமகள். மாலை 'செல்வம்' என்பது.

அவர் அவளைத் தாண்டிச் சென்றார்.

அவரது கண்கள் நெடுந்தொலைவை நோக்கின. அமைதி

யாக முன்னேறினர். அங்குமிங்கும் அவர் நோக்கவில்லை.

முன் சென்றார். முன்னேறிச் சென்றார்.

மற்றொரு ஏரி! போகம் என்ற ஏரி.

அங்குமிங்கும் பல வகையான க்வர்ச்சி தரும் மலர்கள். கண் கவர் சோலை.

அழகான பூங்கொடிகள்.

ஒரு கொடியினருகேயிருந்து பட்டாடையணிந்து மை தீட்டிய கண்களிலிருந்து. மன்மத பாணங்களைத் தொடுத்துக் கொண்டு ஒரு நங்கை வெளி வந்தாள். அவள் முன்னே வந்து நின்றாள்.

அவள் ரதிதேவி.

தனது உள்ளத்தில் ஏதோ மாறுதல் முளைத்ததாக அவருக்குத் தோன்றியது. அவரது கால்கள் நிற்கவில்லை.

வாழ்க்கைப் பாதையில் வீர தீரத்துடன் கலங்காது அவர் முன்னேறினர்.

★

நீலநிற ஆகாயம் கண்முன் தெரிந்தது!

சூரிய ராஜனின் தங்கக் கிரணங்களால் இமயராஜனின் மணிமுடி தகதகவென பிர காசித்தது!

அவரது கண்களை அப்பொழுது நோக்கினால் நிறைவு பெற்ற சமாதானம் வழிந்தோடியது தெரியும்.

அவரது நடை விரைந்தது. உயர்ந்த வாழ்க்கையை ஏற்று அவர் முன்னேறினர்.

உயர்ந்த மலையுச்சியை எய்தினர்.

"ஓம் தத்ஸத்" 'ஸோஹம்' 'நானே பிரம்மம்'

அவரது மந்திரகோஷம் விண்ணிலே எதிரொலித்து பஞ்ச பூதங்களுடன் ஒன்றியது!

உலகின் சர்வசுகங்களையும் ஒதுக்கி வீழ்த்திவிட்டு, சிறந்த தத்துவங்களுக்கெல்லாம் உறைவிடமாக ஆகி. ரிஷியாக மாறிய அவரை மக்கள் 'பரமஹம்ஸர்' என்றழைத்து வணங்கினர்.

வேதப் பண்பாடு இந்த அபூர்வ மனிதருக்கு (மகாதியாகிக்கு), 'பரமஹம்ஸர்' என்ற தீக்ஷை அளித்தது.

'பரமஹம்ஸர்' என்ற எழில் நிறைந்த கோவிலை அடையும் வழி முள் நிறைந்தது. தேக அபிமானம் அனைத்தையும் விட்டவருக்கு அதன்மீது நடக்கும்போது வலி தோன்றவில்லை.

—தியாகபூமி.

[எழுத்தாளர்கள் துயரத்தில் ஆழ்ந்தவர்களென்பதை யாவரும் அறிந்ததே. அத்துயரத்தின் உண்மையை இக்கட்டுரை விளக்குகிறது]

பேனா மன்னர்களின் பரிதாப நிலை

●

பாரத நாட்டில் பத்திரிகைத் தொழில் பொதுஜன சேவைக்கு உதவும் ஒரு கருவியாகத் தோன்றி பிறகு ஒரு தொழிலாக மாறி இப்போது வியாபார உருவத்தையடைந்துள்ளது. இந்த மாற்றங்கள் மூலம் பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள்தான் ஏராளமாக பணம் திரட்டியுள்ளார்கள். பத்திரிகைக்கு, பத்திரிகைத் தோற்றத்தையளிக்கும் பத்திரிகை தொழிலாளிகள் இன்னும் வறுமையால் வாடிக்கொண்டுதானிருக்கிறார்கள். சில பத்திரிகைகளில் வெகு நாளாக பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்கு அனுசரணையாகவும் பவ்யமாகவும் வேலை செய்து ஓரளவிற்கு வாழ்க்கை வசதிகள் பெற்றவர்களைப் பற்றி இங்கு பேசவில்லை. ஆனால் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற்று அவற்றை எழுதி, வீடு வீடாக, கீரைக்காரி ஏறி இறங்குவதுபோல் பத்திரிகாலயங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று விலையாக்க முயற்சிப்பவர்களைப் பற்றித்தான் நான் கூறுவது.

பத்திரிகைகளுக்கு விஷய தானம் செய்ய ஆற்றல் கொண்டவர்கள் பலர் நம நர்ட்டிலிருக்கின்றனர். இம்மாதிரியான அநேக இளைஞர்களுக்கு விஷய தானம் செய்யச் சந்தர்ப்பமே கிடைப்பதில்லை இவர்கள் நிலைமையைப் பற்றி பத்திராதிபர்களுக்கும், பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்கும் நன்கு தெரிந்திருந்தும் இதுவரை ஒரு விமோசனமும் ஏற்படவில்லை. இந்தியாவில் விஷய தானம் செய்வதன் மூலம் பணம் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே. பத்திராதிபர்களென்றோ நூலாசிரியர்களென்றோ புகழ் பெற்ற சிலர் மட்டுமே இந்தத் துறையில் ஓரளவிற்குப் பணம் சம்பாதிக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு நபர் எழுதியிருந்த கட்டுரையிலிருந்து இந்தத் துறையைச் சேர்ந்த நபர்களின் நிலை நன்கு புலனாகிறது. இந்தக் கட்டுரை எழுதியவர் ஐந்தாறு ஆண்டுகளாக தெலுங்கு பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்து வந்துள்ளாராம்; இவர் எழுதின சுமார் எண்பது கட்டுரைகள் வரையிலும் தெலுங்கு பத்திரிகைகளில் பிரசுரமாயுள்ளதாம். ஆனால் இவருக்குக்கிடைத்த பணம்மொத்தமாக ரூபாய் நாற்பது. அதுவும் ஆறு வருஷ காலத்தில். கட்டுரைகள் எழுதுவதற்குக் காகிதம் வாங்குவதற்கும், அவற்றை டைப் செய்வதற்கும், கட்டுரைகளைத் தபாலில் அனுப்புவதற்கும் ஏற்பட்ட செலவே இவருக்குச் சன்மானமாகக் கிடைத்த

பணத்தைவிட அதிகமாக இருக்குமல்லவா? மேல் நாடுகளில் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்பவர்களுக்குத் தனி அந்தஸ்து உண்டு. அவர்கள் எழுதும் ஒவ்வொரு கட்டுரைக்கும் தாராளமாகப் பணம் கிடைக்கும். ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பலவிதமான நிகழ்ச்சிகளைப் பற்றியும் கட்டுரைகள் எழுதுவதற்குப் பத்திராதிபர்கள் இவர்களை அனுப்புகிருர்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இவர்களுக்குக் கட்டுரைகளுக்குள்ள சன்மானத்தைத் தவிர அவர்கள் போக்குவரத்திற்கும், இதர செலவினங்களுக்கும் பத்திராதிபர்கள் பணம் கொடுப்பார்கள்.

இங்கு நிலைமையோ வேறு. ஒருவர் கட்டுரையை பத்திரிகையில் வெளியிடுவதை பத்திரிகையாளருக்கு காட்டும் பெரிய சலுகையாக கருதுகிருர்கள் பத்திராதிபர்கள். இதற்கு ஒரு காரணமுமிருக்கலாம் கட்டுரைகளைப்பத்திராதிபர்களுக்கு அனுப்புகிறவர்களில் பலர் தங்களுக்குப் பணம் தேவையில்லையென்று எழுதிவிடுகிருர்கள். தங்கள் பெயரும் கட்டுரையும் அச்சில் வருவதைக் கண்டே இவர்கள் அபார மகிழ்ச்சியடைகிருர்கள். ஆனல் வயிறு வளர்ப்பதற்காக கட்டுரைகளை எழுதுபவர்களுடைய நிலைமை இதுவல்ல. தான் எழுதும் கட்டுரை மூலம் சன்மானம் பெறுவதற்கு எந்த கட்டுரையாளருக்கும் உரிமையுண்டு. பிரபல ஆங்கில நூலாசிரியரான ஜான்சன் "சன்மானம் பெருமல் எழுத்து வேலையிலீடுபடுபவர் ஒரு முட்டாள் ஆவார்" என்று கூறியுள்ளார்.

நான் ஐந்தாறு பத்திரிகாலயங்களில் அலுவல் பார்த்துள்ளேன். இவை யொன்றிலும் ஒழுங்கான முறைகளே கிடையாது. அநேக பத்திரிகாலயங்கள் கட்டுரைகள் அனுப்புவோருக்கு, கட்டுரைகள் கிடைத்ததாகத் தகவல்கூட அனுப்புவதில்லை. அன்ருட சம்பவங்களைப் பற்றிய கட்டுரைகளை மாதக் கணக்காக வைத்துக்கொண்டிருந்து பிறகு திருப்பி யனுப்பி விடுவார்கள் சில பத்திராதிபர்கள்.

இவ்வாறு செய்வதனல், வேறு பத்திரிகைகளுக்காவது அக்கட்டுரைகளை அனுப்பி சன்மானம் பெறும் சந்தர்ப்பம் கிட்டாமற் போய்விடுகிறது.

ஒரு எழுத்தாளரின் கட்டுரை பிரசுரமான பத்திரிகை அவ்வெழுத்தாளருக்கு அனுப்பப்படுவது கூட இல்லை.

ஏராளமான வருவாயுள்ள பத்திரிகைகளும் இந்தியாவில் உள்ளன. இவர்கள் விரும்பினல் திறமையுள்ள எழுத்தாளர்களை முன்னுக்கு கொண்டு வரலாம். ஆனல் பத்திராதிபர்கள் பெரும்பாலோரும் பக்ஷபாத மனப்பான்மை படைத்தவர்கள். அதனல் இவர்கள் பிரமுகர்களின் கட்டுரைகளை மட்டும் பிரசுரிப்பதற்கு விரும்புகிருர்கள். சோஷலிசத்தைப் பற்றி மஸானியும், பொருளாதாரத்தைப் பற்றி ஜான் மத்தாயும், அரசியல் விஷயங்களைப் பற்றி ராஜாஜியும் எழுதும் கட்டுரைகளையே இவர்கள் வரவேற்பார்கள்.

மாகாண கவர்னர்களும் பிரபல அரசியல் தலைவர்களும், கட்டுரைகள் எழுதி அவற்றிற்குச் சன்மானம் அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தவும் செய்தால் என்னைப் போன்ற சாதாரண மனிதர்களின் கட்டுரைகள் எவ்வாறு பிரசுரமாகும்.

விஷயதானம் செய்வோருக்கு மற்றொரு சத்துருவும் இந்தியாவில் முளைத்துவிட்டது. கட்டுரைகளை மிகவும் குறைந்த தொகைக்கு பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொடுக்கும் ஸ்தாபனங்கள் அயல் நாடுகளில் உள்ளன. இந்தக் கட்டுரைகள் நூற்றுக் கணக்கான பத்திரிகைகளில் பிரசுரமாவதால் ஒவ்வொரு பத்திரிகைக்கும் இவை மிகவும் சொற்பத் தொகைக்கு கிடைக்கிறது. இவ்வாறு மலிவான தொகைக்குக் கிட்டும் கட்டுரைகளைத் தவிர பத்திரிகைகளுக்கு இலவசமாகக் கட்டுரைகளை அனுப்பித் தரும் ஸ்தாபனங்களும் இந்தியாவில் உள்ளன. சமீபத்தில் சர்ச்சில் ஓய்வெடுத்துக் கொண்ட போது அவரைப் பற்றி ஒரு கட்டுரையை நான் தயாரித்து ஒரு பத்திரிகாசிரியரிடம் எடுத்துச் சென்ற சமயம் அவர் தன் மேஜையிலிருந்து சர்ச்சிலைப் பற்றிய நான்கு கட்டுரைகளை எடுத்து எனக்குக் காண்பித்தார். வெகு அழகாக எழுதப்பட்டிருந்த இந்த நான்கு கட்டுரைகளும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் செய்தி இலாகா அதிகாரிகளிடமிருந்து இலவசமாகக் கிடைத்தவை. இம்மாதிரியான போட்டிக்கு நடுவே என் கட்டுரையின் கதியென்ன? ஒரு பிரபல இந்திய பத்திராதிபர், சமீபத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் இவ்வாறு கூறியுள்ளார்:—

"பத்தி ஒன்றுக்கு நூற்றுக் கணக்காக ரூபாய்கள் விளம்பரக் கட்டணம் பெறும் பத்திரிகைச் சொந்தக்காரர்கள் அதில் ஒரு பங்கையாவது கட்டுரையாளருக்கு ஏன் அளிக்கக்கூடாது?

இப்பொழுது நம்நாட்டில் பல பத்திரிகைகளும் மேல் நாட்டுப் பத்திரிகைகளிலிருந்து 'வெட்டி ஒட்டிய' கட்டுரைகளை மட்டும் கொண்டதாக இருக்கின்றன. இந்த வெட்டி ஒட்டும் பழக்கம் அறவே ஒழியும்போதுதான் விஷயதானம் செய்வோர் புத்துயிர் பெறுவார்கள்.

—From Article by C. H. V. Pathy in IFWJ *Souvenir*.

மகான்கள் நிலைநாட்டியவை

★

அன்பு ... இயேசு நாதர்

அஹிம்சை ... புத்தர்

சத்தியம் ... அரிச்சந்திரன்

ஏகபத்தினி விரதம் ... இராமர்

பற்றற்ற கருமம் ... கிருஷ்ணர்

சகோதரத்துவம் ... நபிநாயகம்

இல்லற ஒழுக்கம் ... திருவள்ளுவர்

ஆத்மஞானம் ... சங்கரர்

பக்தி ... சைதன்யர்

சத்யாக்கிரகம். ... பிரகலாதன்

சமரச சன்மார்க்கம் ... இராமலிங்க சுவாமிகள்

கொடை—தர்மம் ... கர்ணன்

மானம் ... பீமசேனன்

இவையனைத்தும் ஒருங்கமைந்த அவதாரப் புருஷராயிருந்தவர் மகாத்மா காந்தி.



லலிதக் கலைகள்

★

சங்கீதம், நாடகம், நாட்டியம், அபிநயம், சித்திரம், சிற்பம் ஆகிய லலிதக் கலைகள் (Fine arts) ஆறும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று இணைப்பும், நெருங்கிய ஒற்றுமையும் உடையவை. நடிப்பது, நாட்டியமாடுவது, அபிநயம் பிடிப்பது சங்கீதம் பாடுவது எல்லாம் சேர்ந்தால்தான் நாடகம் பூர்த்தியாகும். ஒரு நாடகம் வெகு சிலாக்கியமானது என்று கூறப்படுமானால் அந்நாடகத்தை இயற்றியவர் எவ்விதம் நடித்துக் காட்டவேண்டுமென்று உத்தேசித்து எழுதினாரோ அவ்விதமே நடித்துக் காட்டிச் சபையோர் ‘சபாஷ்’ சொல்லி ஏகோபித்து மெச்சப் பட்டதாக இருக்கும். இல்லாவிடில் நாடகம் ‘சப்’ என்று போவதுடன் பார்ப்போருக்கு உற்சாகத்தையும் தீவிர உணர்ச்சிப் பெருக்கையும் உண்டாக்காது. நாடக நடிகர்களுக்கு இயற்கை உணர்ச்சி குன்றும்.

தற்காலத்து குணதோஷ விமர்சகர்கள் (Modern Critics) நம் தேசத்துப் பழமையான நாடகக் காவியங்களைப் பாராட்டிக் கொண்டாடுவதில்லை. அதன் காரணம் நாடக மேடையில் சரிவர அவற்றை ஆடிக் காட்டி ஜனங்களை மகிழ்விக்க நல்ல திறமையுள்ள நடிகர்கள் இல்லாமல் இருப்பதும்' திறமையுடன் ஆடிக் காட்டியபொழுது சரிவரக் கவனஞ் செலுத்தாமல் நாடகத்தையும், எழுதியவரையும் பற்றி கண்டித்துக் குறை கூறுவதேயாம். சில நாடக நூல்களில் செய்வகை, பாண்டித்தியம் முதலியவற்றைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். அக்குறிப்புகளை வேத வாக்கியமெனக் கொண்டு சாமானிய வாதத்திற்கு உட்படுத்தி விடுகின்றனர். இது தவறான செய்கையாகும். பிரயோக விஞ்ஞானத்தைத் தழுவி மற்ற கலைகளையும்கூட வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் மட்டுந்தான் நமது பழைய நாடகங்களின் சிறப்பு, நேர்மை, பெருமை, அழகு, சுவை முதலியன நன்கு விளங்கும். இதன் அந்தரங்க உண்மையை படித்தறிந்த வித்திபார்த்திகளில் சிலர் மட்டுமே அறிந்திருப்பார்கள். நமது நாடக மேடைகளில் சினிமாக்களில் கையாளப்பட்டுவரும் அபிநயம் ஆட்டங்களைப் பற்றி நமது நாட்டினரும் சரி, அயல் நாட்டு வித்தியார்த்திகளும் சரி, நன்றாக விவரங்களை ஆழ்ந்து ஆராய்ந்த பிறகே இந்தியரது நாடகம் நாட்டியம், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய லலிதக் கலைகளைக் கண்டிக்கப் புகுதல் வேண்டும்.

இனி சிறிது சிற்ப சித்திரக் கலையைப் பற்றி விசாரணை செய்வோம். விஷ்ணு தர்மோத்தரம் என்ற சித்திரக் கலையைப் பற்றி நூலில் மனிதனது உடற் கூற்றிலக்கணத்தை விவரிக்கையில் மனிதனது அசைவற்ற நிலையில் உள்ள லக்ஷணங்களையும், நாட்டிய அபிநய பத்ததிகளை விவரிக்கையில், காலப் பிரமாணத்தைத் தழுவி சபையோரை பிரமிக்கச் செய்வதற்கேற்ற

பாவனைகளுடன் கூடிய ஆட்டங்களைப் பற்றியும், இன்னும் உடற் கூற்று லக்ஷணங்களில் காட்டியுள்ள அசைவற்ற அவையவங்களும், உறுப்புகளும், எவ்வளவு நயம்படச் செய்து ஆட்டி வைக்க வல்லவை என்பதையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சித்திரக்காரன் வரைந்துவர்ணிப்பான். மனோபாவம் நடை, சைகை, மனக்கிளர்ச்சி, தோற்ற வேற்றுமைகள், சித்திரக்காரரால் லலிதமாகவும் கற்பனா சக்திக்கேற்றபடியும் பார்ப்போர் மனதில் தீவிரமான ரஸ பாவங்கள் உடனே தோன்றும்படி எழுதப்பட்ட சித்திரமே நன்கு பொலிவுறும்.

சிற்பி கற்சிலைகள் வெட்ட ஆரம்பிக்கு முன் அப் பிம்பத்தை வரைந்து கண்ணுக்கெதிரே வைத்துக்கொண்டு அனுபவித்து, தனது மனத்திற்குள் பதிய வைத்துக் கொண்டுதான் சிற்பிக்க முயலுவான். நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவ நிலையையோ, கிருஷ்ண பரமாத்மாவின் காளிங்க நர்த்தன நிலையையோ சிலை மூலம் நிருபிக்க முயலும் சிற்பிக்கு அபிநயம், தாண்டவம், நர்த்தனம், சித்திரம் இவற்றில் விசேஷ பிரக்ஞையும், அனுபவமும் இருந்தே தீரவேண்டும். மனோபாவம் இல்லாமல் சிற்பம் செய்ய இயலாது. ஆகையால் சிற்பக் கலையை அறிந்தவன் சித்திரக்கலையை ஓரளவுக்கு அறிந்தவனேயாகும் என்பது ஒரு சாதாரண உண்மையாகும்

எம். கே. ஸ்ரீனிவாசன் B. A

எப்போதும் உற்சாகம் அளிப்பது

அசோகா சுகந்த பாக்குத்தூள்

[வாசக சாலைக்கு மக்களுக்குச் செல்ல இயலாவிடில் மக்களிடம் செல்கிறது வாசகசாலை.]

வாகன வாசகசாலை

★

இக்காலத்தில் வாசகசாலைகள் இல்லாத நகரமே கிடையாது. நகரங்களிலுள்ள வாழ்க்கை வசதிகள் பூரணமாவதற்கு ஒரு வாசகசாலையும் அத்தியாவசிய மென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

ஓரளவுக்கு ஜனத்தொகையும், வரி வசூலுமுள்ள சிறிய இடங்களிலெல்லாம் வாசகசாலைகளை அமைத்துவிடலாம். ஆனால் எந்த ராஜ்யத்திலும் பெரும்பாலான மக்கள் வசிப்பது குக்கிராமங்களில் தானே! ஒரு தனி வாசகசாலையை யமைப்பதற்குள்ள பொருளாதார வசதியை இம்மாதிரியான கிராமத்தில் திரட்டுவது இயலாத காரியம். இவ்வாறு ஒரு வாசகசாலையை யமைத்தாலும் அதிலுள்ள நூல்களைச் சரியாக பயன்படுத்த மக்கள் குக்கிராமங்களிலில்லை. அதனால் அநேக குக்கிராம வாசிகளுக்கும் படிப்பதற்குப் புத்தகங்கள் கிடைப்பதற்கு வேறு விதமான ஏற்பாடு செய்ய வேண்டும்.

அமெரிக்காவில் இந்தப் பிரச்னையை மெச்சத் தகுந்த முறையில் தீர்த்திருக்கிறார்கள். குக்கிராம வாசிகளுக்குப் படிப்பதற்கு புத்தகங்களை, கிராமம் கிராமமாக எடுத்துச் செல்வதற்கு நடமாடும் வாசகசாலைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். நடமாடும் புத்தகாலயங்கள் என்பது, இந்தியாவில் சில நகரங்களில் தற்போதுள்ள நடமாடும் தபால் ஆபீஸ்களைப் போலுள்ள மோட்டார் வண்டிகளாகும். ஒவ்வொரு தினமும் சில குறிப்பிட்ட கிராமங்களுக்கு இந்த நடமாடும் வாசகசாலை செல்லும். மோட்டார் வண்டியின் டிரைவரேதான் நடமாடும் இவ்வாசக சாலையின் 'லைப்ரரியன்'.

குறிப்பிட்ட சில குக்கிராமங்களுக்கென்று ஓரிடத்தில் ஏற்படுத்தியுள்ள வாசகசாலையிலிருந்து மோட்டார் டிரைவர் புத்தகங்களை எடுத்துக்கொண்டு 500 மைல் வரையிலுஞ் சென்று இடையேயுள்ள கிராம வாசிகளுக்கெல்லாம் தேவையான புத்தகங்களைச் சேர்ப்பார்.

வாசகசாலை 'லைப்ரரியனு'க்கு மலைகளெல்லாம் ஏறுவதும் ஆறுகளைக் கடப்பதும், புயல், வெள்ளம் முதலியவற்றை யெல்லாம் எதிர்த்துச் சமாளிப்பதும் சகஜமானது. இந்தப் பிரயாணங்களில் தினந்தோறும் தனக்குத் தேவையான உணவு, மோட்டாருக்கு எதிர்பாராமல் நேரிடும் பழுதுகளை சீர்படுத்த கருவிகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். சில சமயங்களில் இவர் செல்லும் குக்கிராமங்களில் இரவில் தங்க நேரிடும்.

சிறுவர் சிறுமியர்களுக்குப் பயன்படும் பிரத்தியேக புத்தகங்களை ஏராளமாக இந்த நடமாடும் வாசகசாலை எடுத்துச் செல்லும். அநேக கிராமங்களிலும் நடமாடும் வாசகசாலையின் விஜயத்தை மிக ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருப்பார்கள். சிறுவர் சிறுமியர்கள் இவர்களைத் திருப்தி செய்யவும் பள்ளி ஆசிரியர்களுக்கு தினம் புத்தகங்களை எடுத்துச் செல்வதும் சலிப்பளிக்கும் 'லைப்ரரியன்' வேலையிலுள்ள மிக மகிழ்ச்சி தரும் அம்சம்.

—BUJ

★ தானே தண்டித்துக்கொண்ட நாய் ★

வியன்னு நகரத்தில் ஒரு நாய் தற்கொலை செய்து கொண்டதாம்.

தன் ஆறு வயதுள்ள எஜமானியின் உயிருக்குத் தன்னுல் ஆபத்து வரவிருந்ததென்று பயந்துதான் இது தற்கொலை செய்துகொண்டதற்குக் காரணம். பெற்ருேர்கள் வெளியே சென்றிருந்த போது இந்தப் பெண் நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். நாய், பெண் சயனித்துக்கொண்டிருந்த அறையில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது. தற்செயலாய் சமையலுக்கு உபயோகப்படும் ஆவி (gas) வரும் குழாய் திறந்துகொண்டது.

கியாஸிலிருந்து வெளிவரும் கந்தத்தை உணர்ந்த அண்டை வீட்டார்கள் அறைக்கு ஓடோடியும் வந்து கியாஸ் குழாயை மூடி பெண்ணைத் தப்புவித்தனர். திடீரென அயல் வீட்டுக்காரர்கள் திறந்து வைத்திருந்த ஜன்னல் வழியாக நாய் வெளியே குதித்தது. தன் கடமையில் தவறிய குற்றத்திற்குத் தண்டனையை ஏற்றுக் கொண்டதென்று தோன்றுமாறு உயிரைவிட்டது.

GANZON BROS.

DRESS SPECIALISTS

3, Thope Street

TRIPLICANE, MADRAS-5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready-to-Wear-Garments Manufacturers and Exporters

★

In the hands of the Master-Tailors and Cutters of GANZON, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

[உறுதியான ஒரு குறளுக்கு உண்மை நிறைந்த ஒரு விளக்கம்.]

"வேலொடு நின்றான் இடுவென்றதுபோலும் கோலொடு நின்றான் இரவு"

என்பது திருக்குறளில் ஒரு குறள்: கல்வியைப்பற்றிக் கூறிப் பின் கல்லாமையைப் பற்றியுங்கூறியதுபோல வள்ளுவர் செங்கோன்மையைப் பற்றிக் கூறிப்பின் கொடுங்கோன்மையைப் பற்றியுங் கூறும்பொழுது இக்குறளை இரண்டாவதாகக் கூறியுள்ளார்.

இதில் கோன்மை என்பது கோலின் தன்மை என்றாகி, அரசனது முறை செய்யும் தொழிலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

கோடாத கோலைச் "செங்கோல்" என்றும் கொடுங்கோலைக் 'கொடுங்கோல் என்றுங் குறிப்பிட்டு மன்னனது நன் முறையையும் விளக்குவது ஒரு தமிழ் மரபு ஆகும்.

மன்னன் கைப்பிடிக்கும் செங்கோலானது வணிகன் கைப்பிடிக்கும் துலாக்கோல் போல ஒரு பக்கமும் சாயாது நடுவு நிலையில் நிற்க வேண்டும் என்பது தமிழர் நெறி.

தனக்குச் சேரவேண்டிய வரி அல்லாத பிறபொருள்களை மன்னன் மக்களிடத்தில் விரும்பிப் பெறுவது கொடுங்கோன்மையாகும் என்பது இக்குறளின் பொருள்.

மன்னன் மக்களிடத்தில் பிற வழிகளில் கேட்டுப் பெறுகிற பொருள்களை "இரவு" என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிட்டுக் காட்டுவது அரசர்களது நெஞ்சத்தில் அம்பு கொண்டு எய்வதாக இருக்கிறது.

மன்னன் மக்களிடம் கொடுங்கோன்மையாற் பெற்ற செல்வம் எவ்வளவு உயர்வாக இருப்பினும் அது இரந்து பெற்ற இழிந்த செல்வமேயாம் என்பது வள்ளுவரது முடிவு.

இரந்து பெறுகிற இழிகுணம் படைத்த ஒருவனைக் "கொடுங்கோலன்" எனக் கூறினாலும் அவனை மன்னனாக ஒப்புக் கொண்டதாக ஆகுமாம். ஆகவே, அவனைக் கொடுங்கோலன் என்று கூறாமல் வெறுங்கோலன் எனக் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

உறுப்புகள் குறைந்துள்ள குருடும் நொண்டியும் ஊன்றுகோல் கொண்டு நின்று புரியும் இரத்தல் தொழிலை வெறுங் கோல்கொண்டு நிற்கும் மன்னன் விரும்பிச் செய்வது வெறுப்பிற்கு உரியது என இக்குறள் கூறாமற் கூறுகிறது.

கோலொடு நின்ற மன்னவன் மக்களிடம் பெறும் பொருளை "இரவு" என்று வள்ளுவர் சொல்லாமற் குறிப்பிட்டு, கருத்தால் அதனைக் "களவு" என்று காட்டுவது கருதி மகிழ வேண்டிய ஒன்று.

கோல் கொண்டு நின்ற இத்தகைய மன்னர்களது கொடுஞ்செயலுக்கு காடுகளில் வேல் கொண்டு நின்று "இடு" வென்று கூறி வழிப்பறி செய்யும் கள்வரது கொடுஞ்செயலை இக்குறளில் உவமையாகக் கூறியிருப்பது நம் உள்ளத்தையெல்லாம் சுடுகிறது.

"வேலொடு நின்றான்" என்ற சொற்களிலிருந்து அன்பு, அறம் முதலிய வேறு எதனோடும் நில்லாமை புலப்படுவதுபோல 'கோலொடு நின்

ரூன்" என்ற சொற்றொடரும் அறிஞர், அமைச்சர் முதலிய வேறு எவரொடு நில்லாமையைப் புலப்படுத்துவது எண்ணி, எண்ணி வியக்கக் கூடியதாகும்.

கொடாவிடில் துன்புறுத்துவோம் என்பதில் மட்டுமல்ல; கொடுப்பதால் நன்மை ஏதும் கிடைக்காது என்பதிலும் வேலொடு நின்ற கள்வனும் கோலொடு நின்ற மன்னனும் செயலொடு ஒத்து நிற்பது உய்த்துணரத் தக்கது.

வேலொடு நின்றவன் முன்பும் செல்வமோடு நிற்பதைக் காட்டிலும் வறுமையொடு நிற்பது நல்லது என்பது இக்குறளின் திரண்ட கருத்து.

வேலொடு நிற்பவன் வாழும் காடும், கோலொடு நிற்பவன் வாழும் நாடும் பொருளொடு நிற்பவன் வாழத் தகுதியற்றவை என்பது இக்குறளின் முடிவு.

வேலொடு நிற்பவன் கொடுமை ஒருபொழுது மட்டுமே துன்பந்தரும்; கோலொடு நிற்பவன் கொடுமையோ எப்பொழுதும் துன்பம் தரும் ஆதலின் கோலின் கொடுமைக்கு வேலின் வெம்மை ஏற்ற உவமையாக இல்லை என வள்ளுவர் உள்ளம் வருந்தியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த உவமை பொருந்தாமையாலும் இதனினும் சிறந்த உவமைகிடைக்காமையாலுமே வள்ளுவர் இக்குறளில் "என்றது போலும்"! என ஐயப்பாட்டுடன் கூறியுள்ளார். இன்றேல் அவர் "என்றது போல" எனக் கூறியிருக்க வேண்டும்.

உயிர்க்கு உடலாகவும், உடலுக்கு உயிராகவும் புவிமன்னர்களைக் கூறுவது கவி மன்னரது வழக்கு ஆதலின் உடலை வருத்தும் வேலும், உயிரை வருத்தும் கோலும் இக்குறளில் குடிகொண்டிருக்கின்றன போலும்!

கோலைப் பிடிக்கவேண்டிய மன்னன் தன் பண்பை அடியோடு இழந்துவிட்டு வேலைப் பிடிக்கின்ற வேடனின் பண்பைப் பெற்றிருந்தாலும், அவன் மன்னனுமல்ல மனிதனுமல்ல என்பதை இக்குறளாலும் நன்கறியலாம். முறைசெய்யும் மன்னவன் கொலை செய்யும் வேடனின் குணத்தைப் பெற்றுவிடுவானானால், கொடியோரைத் தேடித் தண்டித்து நல்லோரைக் காக்கும் நற்றொழிலைச் செய்ய அவன் விரும்ப மாட்டான் என்ற கருத்தும் இக்குறளில் மறைந்து காணப்படுகிறது.

ஈகைத் தொழிலுக்குரிய மன்னன் இரத்தல் தொழிலில் புகுந்து மக்களிடம் விரும்பிக் கேட்டுப் பெறுகின்ற பொருளே வழிப்பறிக்கொள்ளை என்றாகுமானால், கொடாவிடில் துன்புறுத்துவேன் என அச்சுறுத்திப் பெறும்பொருளை எதனொடு ஒப்பிடுவது? என்பதை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது இக் குறள்!

இவ் ஒரு குறள் இவ்வளவு பொருள்களைத் தருமானால் மற்ற 1329குறள்களும் என்னென்ன தரும்? என்று எண்ணிப் பாருங்கள். எடுங்கள் குறளை! படியுங்கள் நன்றாக! சிந்தியுங்கள் ஆழ்ந்து! அவ்வளவோடு நின்றுவிடாதீர்கள்! செய்கையிலும் செய்து காட்டி சிறப்பெய்தி வாழுங்கள். வாழட்டும் தமிழகம்!

—:K. A. P. Visvanatham in N. G. O. A. *Souvenir*

[திக்கெட்டிலிருந்தும் கூக்குரல் கிளம்பும் இந்நாளில் குறைவொன்றுமில்லாத ஒரு ஆசிய நாடு].

ஆசியாவின் கவலையில்லாத தேசம்

★

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலுள்ள நகரங்களிலெல்லாம் மிகவும் உலகப் பொது நோக்கம் கொண்ட நகரம் தாய்லாந்தின் தலைநகரமான பாங்காக் ஆகும். ஜெர்மனி, பிரான்சு, ரஷ்யா, நார்வே, ஸ்வீடன், ஜப்பான், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், முதலிய எல்லா ராஜ்யத்து மக்களும் இங்கு வசிக்கிறார்கள்; வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளார்கள். இதைத் தவிர பாதிரிமார்களும், ராஜதந்திரிகளும் வேறு ஏராளமாயிருக்கிறார்கள். ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் பிரிவுகள் அனைத்திற்கும் இங்கு கிளைக் காரியாலயங்கள் இருக்கின்றன. இவற்றையொட்டி பெரும்பாலான அமெரிக்கர்களும் பாங்காக் வாசிகளாயிருக்கின்றனர்.

இங்குள்ள ஸ்தாபனங்கள் பலதரப்பட்டவை. தாய்லாந்து போலீஸ்காரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ஒரு சங்கம்; பைத்தியக்காரத் தோற்றத்தை யளிக்கும் எழுத்தாளரின் கூட்டங்கள், வியாபாரம் போன்ற தொழில்கள் புரியும் சாக்கில் ஒற்றர் வேலையிலீடுபட்டிருக்கும் பல தேசத்து நபர்கள் முதலியவர்களை இந்நகரத்தில் காணலாம்.

நீங்கள் பானங்கள் அருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்றால், அங்கு உங்கள் மேஜைக்கருகில் அமர்ந்து பானம் அருந்துபவர் அநேகமாய் ஏதாவது ஒரு அயல் நாட்டு ஒற்றராய்தானிருப்பார். பாங்காக் நகரத்திலுள்ள ஐரோப்பியர்களின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மனிலாஒப்பந்தத்தின் தலைமைக் காரியாலயத்தை இங்கு ஸ்தாபிக்கும்போது அதையொட்டியும் இங்கு 'பெரிங்கிகள்' (இது தாய்லாந்துகாரர் வெள்ளையர்களுக்கு அளித்துள்ள பெயர்) பலர் வரலாம்.

ஆயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணிகள் இந்நகரத்திற்கு எப்போதும் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருப்பார்கள். இவ்வளவு அதிகமாய் இருக்கும் 'பெரிங்கிகளை' தாய்லாந்துகாரர்கள் சட்டை செய்வதே கிடையாது. இவ்வளவு வெள்ளையர்கள் பாங்காக் நகரத்தில் இருந்துகொண்டு தீய விஷயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தும் தாய்லாந்துகாரர்களுக்கு விசேஷமான தீங்குகள் ஒன்றும் நேரிடாததற்குக் காரணம் தாய்லாந்தில் பிற நாட்டார் ஆட்சி செலுத்தாததேயாகும். இதனால் தாய்லாந்துக்காரருக்கு அடிமைப் மனப்பான்மையே இல்லை. வெளிநாட்டாரை விருந்தாளிகளாகவும் தங்களை விருந்தளிப்பவர்களாகவும் தான் இவர்கள் கருதுகிறார்கள்.

வெள்ளையர்களிடம் தாய்லாந்துக்காரர்களுக்கு விரோத மனப்பான்மை கிடையாது. பெருந்தன்மை, சகிப்புத்தன்மை, அனுசரிப்பு முதலிய குணங்கள் வாய்ந்த தாய்லாந்துக்காரர்கள் விருந்தினருக்கு மகிழ்ச்சியும் சேர்த்தியானதுமான உபசரிப்பையளிக்கிறார்கள். தாய்லந்தில் வசிக்

கும் ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் இவர்கள் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவு அதிகப்படியாக வியாபாரமும் வருமானமும் அதிகப்படியாகக் கிடைக்கிறது. இதைத் தவிர வெள்ளேயர் களின் எண்ணிக்கை அதிகமானுல் தாய்லாந்துக்காரர்கள் மிகவும் மோகங் கொண்டுள்ள தேனீர் மதுபான முதலான விருந்துகள் கணக்கின்றி நடை பெறும் அல்லவா? தாய்லாந்துகாரரின் முக்கிய குணம் விரகு வெளிநாட் டாருக்கு அளிக்கும் மரியாதை. வெள்ளேயர் ஆட்சி புரிந்த தேசங்களுக் குச் சென்ற பிறகு பாங்காக்கிற்கு வருவோருக்கு இது மிகத் தெளிவாகத் தெரியும். இது ரிக்ஷாக்காரர் முதல் ராஜ வம்சி அங்கத்தினர் வரை அவ ரவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்தவாறு மரியாதை காண்பிக்கிருர்கள்.

தாய்லாந்தில் ராணுவ ஆட்சி நடைபெறுகிறது. ராணுவ தோரணேயி லேயே தான் நிர்வாகம் நடைபெறுகிறது. அதாவது ஆட்சியை நிர் வகிப்பவர்கள் மீது பொது மக்களுக்கு அபிமானமும், மதிப்புமில்லே.

ஆனல் ராஜ்யத்தில் அரசரிடமும் அரச குடும்பத்தின் மீதும் தாய்லாந் துக் காரர்களுக்கு இந்த விசுவாசமுண்டு. மிகப்பழமையான பண்பாடுள்ள ராஜ்யங்களில் பல விந்தையான பழக்க வழக்கங்களேக் காணலாம். எஜ மானருக்கு சேவகன் ஆகாரமோ, மற்றெதையோ அளிக்கும்போது குச்சிபோல் நிற்காமல் உடம்பை, நமஸ்கரிப்பதுபோல வளேந்துகொண்டு தன் விநயத்தைத் தெரிவிப்பான். இப்போது மேல்நாட்டு பழக்க வழக்கங் கள் தினந்தோறும் தாய்லாந்தில் பரவி வருவதால் இந்தப் பழமையான பழக்கங்கள் இப்போது மறைந்து வருகின்றன.

அந்நிய நாட்டார்களே தாய்லாந்து ஆதரிப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் இந்த தேசத்துப் புராதன மதமான பௌத்த மதமாகும். நூற்றுக்கணக்கான பௌத்த தேவாலயங்களேயும் ஆயிரக்கணக்கான பௌத்த சந்நியாசிகளேயும் இங்கே காணலாம். தாய்லாந்துக்காரர்கள் வாழ்க்கையிலேயே மதம் ஒரு பிரதான அங்கமாக விளங்குகிறது.

தினந்தோறும் தாய்லாந்துக்காரர் முதன் முதலாகச் செய்யும் காரியம் மஞ்சளாடைத் தரித்துக் கொண்டு வீதிகளில் அன்றாடம் பிக்ஷைக்கு வரும் பௌத்த பிக்ஷுகளுக்கு பிக்ஷையளிப்பதுதான். தினந் தோறும் தாய்லாந்துக்காரர்கள் தேவாலயங்களுக்குச் சென்று பிரார்த்தனே கள் புரிந்து தெய்வீகப் பிரசங்கங்களேக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

வாலிபர்கள் அநேகரும் மூன்று மாதங்கள் வரை சந்நியாசி மடங்களில் பயிற்சி பெறுகிருர்கள். தாய்லாந்துக்காரர்கள் கவலேயற்றவர்கள். அரசி யல், சமூகம், பொருளாதாரத் துறைகளேப் பற்றிய தலேவலி ஒன்றுமே கிடையாது.

இந்த ராஜ்யத்தில் தேவைக்கு அதிகமாகவே அரிசி உற்பத்தியாகிறது. ஆகையால் உணவில்லாத் திண்டாட்டம் இங்கே கிடையாது. பௌத்த மதம் வாழ்க்கையில் சாந்தியைக் கற்பிக்கிறது. நாளேயைப் பற்றிய சிந் தனேயே இங்கே எவருக்கும் கிடையாது. இதனுலேயே வெள்ளேயர்களுக்கு இந்த நாட்டின்மீது அபார மோகம். அரசியல் விஷயங்களேப் பற்றி நீங் கள் எந்த தாய்லாந்துக்காரரிடம் சம்பாஷித்தாலும், அவர் பேச்சை மாற்றி

விட்டு வெயில், மழை போன்ற சில்லறை விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு விரும்புவார். பூசலும் கிளர்ச்சியும் நிறைந்த ஆசியாவில் இம்மாதிரி ஒரு அமைதி நிலவும் நாடு எவருக்கும் உவகை தானே அளிக்கும்!

—Adaptation of a *New York Times* article by Peggy Durdin.

நியூயார்க்கில் ஒரு நாள்

குறைந்த பட்சம் ஒரு கொலை.
அசட்டை மூலம் ஒரு உயிருக்காவது ஆபத்து.
21 பேர் தாக்குதலுக்கு ஆளாகுதல்.
மூன்று ஸ்திரீகளாவது கற்பழிக்கப்படுதல்.
140 வியாபார ஸ்தலங்களிலும், வீடுகளிலும் கொள்ளை.
40 மோட்டார் களவுகள்.
31 தெருக்கொள்ளைகள்.
84 மோசடி கேஸ்கள்.

இவைதான் நாகரிக நியூயார்க் நகரத்தின் தினசரி நிகழ்ச்சிகளின் குறிப்புகள். இரவு நேரத்தில் நியூயார்க்கின் பல பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் தனியாக வெளியே செல்வதற்குப் பயப்படுவதில் என்ன அதிசயம்?

★

திருமணப் பரிசு!

தி. காளிமுத்து

★

[கலியாணம் என்பது ஒரு தீராத பிரச்னையாக இருப்பது பெண்களுக்கு மட்டுமன்று; பிள்ளைகளுக்கும் அப்படியே.]

அரசியல் துறையில் மட்டும் ஐந்தாண்டு திட்டங்களில்லை. என் தாய் எனக்கு பெண் பார்த்து முடிவு செய்ததே ஒரு ஐந்தாண்டு திட்டம்தான். 'அந்த வீட்டுப் பெண் கொஞ்சம் கறுப்பு. அது அழகாயில்லை. இதற்கு கண் பெரிதாய் இருக்கிறது. அதற்கு மூக்கு எடுப்பாய் இருக்கிறது. ஒல்லியாய் இருக்கிறாள். பருமனாய் இருக்கிறாள். வாய் நீளம். சுத்த அசடு, 'கலகல' வென்று பேசமாட்டாள். அவளுக்குத் தலையில்தான் பூ சுற்ற வேண்டும்' என்று ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏதாவது ஒரு குறை கூறுவாள்.

ஒவ்வொரு தடவை பெண் பார்க்கச் செல்லும் போதும் நாங்கள் யுத்தத்திற்கு வேறு ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். ஒரு தடவை பக்கத்துத் தெருவில் ஒரு பெண்ணைப்பார்த்துவிட்டு 'அப்பவே சந்தேகப் பட்டேன். சலசல வென்று கூச்சமில்லாமல் பேசுகிறாள். அடே!...அப்பா! அவள் வாய் எளவளவு நீளம்!' என்று என் அம்மா சொல்லியதை யாரோ பெண் வீட்டாரிடம் சொல்லி விட்டார்கள். பார்க்கலாமா! "என் பெண் என்ன பட்டியா அல்லது பல்லில்லாத பாட்டி வாய் மாதிரி நீளமாயிருக்கிறதா?" என்று சண்டைக்கு வந்துவிட்டார்கள்.

இன்னொரு பெண் பரந்த முகமாக இருக்கிறது என்று சொல்வதற்கு பதில் "அது என்ன மொந்தை மாதிரி" என்று கூறி விட்டு என் அம்மா பட்டபாடு இன்னும் ஞாபகத்திலிருக்கிறது.

மற்றொரு தடவை பெண்ணுக்குச் சிங்கப்பல் இருக்கிறதா என்று பார்க்கிறேன் என்று பெண்ணை வாயைத் திறக்கச் சொல்லவும், அவர்கள் "என்ன எங்கள் பெண்ணை மாடு என்று நினைத்துக்கொண்டா பார்க்க வந்தீர்கள்" என்று அமருக்கு இளம்பி விட்டனர்.

தாழங்கர்ல், பாம்பு படம், ஏறு நெற்றி, இறங்கு நெற்றி, கோரை மயிர், நீளக் கழுத்து இதேபோல் எனக்குப் பெண் பார்க்க

கிளம்பிய ஒவ்வொரு தடவையும் ஏதாவது சொல்லி ஒரு சண்டை யுடன்தான் வீடு திரும்புவாள். இவைதான் பெண் பார்க்க சென்றதற்கு அம்மாள் கொண்டு வரும் பரிசு.

பெண் பார்க்கப் போட்ட ஐந்தாண்டு திட்டமும் முடிந்தது. பணமும் கரைந்தது. வம்புதான் வளர்ந்தது. அம்மாவும் அலேந் தலேந்து அலுத்துப்போய் கடைசியில் கண்ணுக்கும் மூக்குக்கும் சரியாயிருந்தால் சரி, இனி நம்மால் அலேய முடியாது என்ற முடி வுக்கு வந்து விட்டாள்.

அந்த சமயம்தான் என் தர்ம சகபத்தினியாய் இப்பொழுது இருக்கிருளே அவளுக்கு ஒரு 'சான்ஸ்' அடித்தது. அம்மா அவளே பார்த்துவிட்டு வந்ததும் "ஊம்...அவரவர்களுக்கு போட்ட படி தான் நடக்கும். எண்ணெயைத்தான் தேய்க்கலாம் எழுத்தை அழிக்க முடியுமா? ஒருவனுக்கென்று ஒருத்தியை படைத்திருக் கும் பொழுது நாம் என்னத்தைதான் வேண்டாமென்ருலும் நின்று விடுமா? எவ்வளவுதான் எண்ணெயைத் தடவிக்கொண்டு புறண் டாலும் ஒட்டுவதுதானே ஒட்டும். ஆசையிருக்குது தாசில் பார்க்க......என்ன செய்வது" என்று அறையில் படித்துக்கொண் டிருக்கும் என் காதில் விழும்படி மொன மொனத்தாள்.

அம்மா அஸ்திவாரம் ஆழமாய் போடுவதைப் பார்த்ததும் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டாள் என்று நினேத்துக்கொண்டேன். அம்மா அத்துடன் நிற்கவில்லே, என் அறைக்குள்ளேயே வந்து விட்டாள். "இதோ பார்—பெண்ணேப் பார்த்தேன். நானும் என் ஞல் முடிந்தமட்டும் ஐந்து வருஷம் சலிச்சு சலிச்சுதான் பார்த் தேன். உன் அதிர்ஷ்டம் அப்படி ஏதேஷ்டமாய் பொங்குகிறது. நான் என்ன செய்ய? இதோ பார், இந்தப் பெண்ணே நீ கலியாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும். இனி என்ஞல் பெண் பார்க் கப் போகவோ வரவோ முடியாது. உடம்பு சத்து அத்தனேயும் செலவழிஞ்சு போச்சு" என்ருள். அதற்கு "நாஞென்றும் கல் யாணம் செய்துகொள்ளத்தான் வேணடுமென்று ஒற்றைக்காலில் தபஸ் செய்யவில்லேயே!" என்றேன்.

"ஆமாம்—நீயேதான் தபஸ் செய்யரே. ஈட்டுக்கும் பாட்டுக் கும்தான் நானிருக்கேனே. உனக்கென்ன கவலே? வேளா வேளேக்கு சோறு. படுகிறவர்களுக்கல்லவா தெரியும் வருத்தம்? இனி என்ஞல் அடுப்பருகில் போய் சமைக்கக்கூட முடியாது. போதும் போதும் பட்டவரையில் பலன். நீ கலியாணந்தான் கட் டிக்கொள். கட்டிக்கொள்ளாமலிரு. பின்ஞல் 'ஒரு பிள்ளேயை வளர்த்தாள், கலியாணம்கூட செய்யாமல் விட்டுவிட்டு போய்விட் டாள்' என்று ஊர் உலகம் சொல்லுமே என்றுதான் பார்க்கிறேன். எனக்கென்ன ஒரு வயிறு, நாலு இடத்தில் இரந்து குடித்தாலும்

போச்சு. நம் கடமையை செய்துவிட்டால் எங்கே போனாலும் நிம்மதியாய் இருக்கலாம் என்று நான்தான் தபஸ் செய்கிறேன்'' என்று சண்டமாருதம் பொழிய ஆரம்பித்துவிட்டாள்.

என் அம்மா எவ்வளவு அலுத்துக்கொண்டாளோ அதைவிட பன்மடங்கு எனக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. மாப்பிள்ளை பார்க்க வருகிறார்களே அவர்களிடம் நான் பட்ட பாடு ''சிவனே இலவம் பஞ்சுதான் படுமோ'' என்று பாடத் தூண்டியது. ''படமுடியாதினித் துயரம் படமுடியாதரசே'' என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியதாயிற்று.

ஒன்றும் சொல்லாமல் திடுதிடுப்பென்று மாப்பிள்ளை பார்க்க ஒருவர் வீட்டுக்கு வருவார். அப்பொழுதுதான் நம்மிடம் சலவை வேஷ்டி சட்டை பெட்டியிலிருக்காது. ஏதோ இருப்பதில் வெள்ளையாக பார்த்து உடுத்திக்கொண்டால், வந்தவர் ''ஏது பையன் நீட்டா இருக்கமாட்டார் போலிருக்கே'' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு போவார். முன்கூட்டியே சிலர் இன்றைக்கு வருகிறோம் என்று தெரிவித்துவிட்டு வருவார்கள். அவர்களுக்காக வாட்சு, மோதிரம் இரவல் வாங்க அலைவதற்குள் கால் ஓய்ந்து போகும். அப்படி வாங்கிய இரவல் வாட்சும் சரியாய் ஓடாது. ஒருதரம் மாப்பிள்ளை பார்க்க வந்தவர்கள் என்னை மணி என்ன என்று கேட்டுவிட்டார்கள். நான் வாட்சை பார்த்தேன். அதில் மணி ஒன்று ஆகியிருந்தது. உண்மையில் அப்போது மணி நான்காவது இருக்கும். நான் என்ன செய்வது? வாட்சைப் பார்த்து முழித்த முழியிலேயே அவர்கள் சிரித்துக்கொண்டு சரி மணி நாலிருக்கும், ரயிலுக்கு நேரமாகிறது, போய் வருகிறோம் என்று கிளம்பிவிட்டனர். அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார்கள்! எனக்கு மணிகூட பார்க்கத் தெரியாது என்றுதானே!

ஒரு சமயம் மோதிரத்திற்காக அலைந்து அலைந்து பார்த்தேன். கிடைக்கவில்லை. சரி என்று கில்ட்டு மோதிரத்தை வாங்கிவிட்டேன். அன்று வந்தவர்களில் ஒருவர் என் விரலிலிருந்த மோதிரத்தைப் பார்த்து இது வாங்கியதா? செய்ததா? நல்லாயிருக்கிறதே—என்றார். எனக்கு அப்பொழுது எப்படி இருக்கும்? என்னடாயிது மனுஷன் 'தாருங்கள் பார்ப்போம்' என்று கேட்டால் என்ன செய்வது? மோதிர மட்டுமல்லாமல் மாப்பிள்ளை குட்டுமல்லவா வெளியாகிவிடும் என்று பயந்துகொண்டே இல்லை இது அம்மா—— என்ன காப்பி போட்டாச்சா என்று எழுந்து உள்ளுக்குள் நழுவி விட்டேன்.

ஏன், என்னையே பலர் பலவிதமாக கருதினர். ஒருவர் என்ன மாப்பிள்ளை ரொம்ப மெலிந்துபோய் இருக்கிறார். ஒரு சமயம் டி. பி. இருக்குமோ. என்ன மாப்பிள்ளை சோகைபோல் வெளுத்துப் போயிருக்கிறார். பிள்ளை ரொம்ப டிப்டாப்பாக நடக்கிறார் என்று

அபிப்பிராயம் தெரிவித்தார். என்ன பிள்ளையாண்டான் ஒல்லியாய், சிவப்பாய் இருப்பான் என்றீர்கள்; மாநிறமாய் வாட்டசாட்டமாயிருக்கிறனே! ஆனல் ஆடம்பரம், டிப்டாப்பைப் பார்த்தால் பிடிக்கவில்லை. தலையோ "கிருஸ்தவர் போல கிராப்" என்று சர்டிபிகேட் கொடுத்தார் ஒரு வயது முதிர்ந்த பெரியவர்.

நீங்கள் வருபவர்கள் அபிப்பிராயப்படியெல்லாம் நடக்க ஆரம்பித்தால் ஆபத்துதான். கிராப் வேண்டாமென்று அப்ளா குடுமி வைத்தால் மறுபடி வருபவர்கள் என்ன மாப்பிள்ளை பழைய 'மடிசஞ்சி' போலிருக்கிறது. தலையில் குடுமி வைத்திருக்கிறரே எங்கள் பெண்ணுக்குப் பிடிக்காது என்பார்கள். சரி, தலையில் கிராப் வைத்தாலும் ஆகவில்லை, குடுமி வைத்தாலும் பிடிக்கவில்லை. ஆகையால் மொட்டையாக அடித்து விட்டால் சரியாக போய்விடும் என்று தலையை நன்ருக ஒழுங்காக வழவழவென்று மொட்டை அடித்துக்கொண்டு விட்டாலோ, அடுத்தாற்போல் வருபவர்கள் "இது என்ன புத்த பிக்ஷு மாதிரி, மாப்பிள்ளையாய், லக்ஷணமாயில்லை" என்று நம் தலையைக் கொண்டே நம்மை நிதானித்து சர்டிபிகேட் வழங்குவர். ஆகையால் தலை ஜாக்கிரதை! மாப்பிள்ளை பரீக்ஷையில் தேறுவதற்கு சிரசே பிரதானம்.

இவையெல்லாம் ஒருவிதமாக தாண்டிவிட்டாலும் குறுக்கே நின்று சோதிக்கிறது ஜோசியம். ஜோசியரிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். அவர் வந்து நெடுக்கும் குறுக்கும் கோட்டைக் கிழித்து கிரஹங்களை பிடித்து அதில் அடைத்து, பொருத்தம் பதினென்றும் இருக்கிறதா? என்று ஆரம்பித்து மூன்று பொருத்தங்களாவது சரியாக இருக்கிறது என்று சொல்வதற்குள் பையன் செலக்ஷன் பரீக்ஷை முடிவை எதிர்பார்த்து நிற்பதைபோல்தான் நிற்கவேண்டும். அவர் தீர்ப்பு நமக்கு சாதகமாக வந்துவிட்டாலும் சரியாய்விட்டதா? நகைகள் சீர் வரிசைகள் ஆகிய இந்த நரகாசுரர்களையெல்லாம் கடந்து ஏணி வழியே ஏறி மேல் சென்ருல் பரிசம் என்னும் ஒரு பெரும் பாம்பு வாயைப்பிளந்து நம் வருகைக்காக காத்திருக்கிறது. அதை மிகச் சாமர்த்தியமாக சமாளிகக வேண்டும். இல்லாவிட்டால் நாம் இவ்வளவு தூரம் பட்ட பாடெல்லாம் வியர்த்தமாகி விடும். மறுபடியும் நாம் கீழிருந்து மேல் ஏறுவதற்குள்—அப்பப்பா!

இதையும் ஒரு விதமாக சமாளித்து திருமண கட்டத்தை அடைந்தால் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பெண் கழுத்தில் தாலி கட்டும் வரையில் ரொம்பவும் உஷாராக 'கப்சிப்' என்று வாயைத் திறக்காமல், பெண் வீட்டார் எள் என்ருல் எண்ணெய் என்று நிற்கவேண்டும். அவர்கள் போடு தோப்புகரணமென்ருல் எண்ணிக்கொள்ளுங்கள் என்று சொல்லவேண்டும். அதுவும் கொஞ்சம் பணமுள்ள பட்டினத்துப் பெண் வீட்டார் என்ருல் நம் பாடு அதோ கதி. சாம்பாரில் உப்பில்லை என்பதி

லிருந்து கர்ப்பியில் ஜீனி அதிகம் என்பதுவரை நம்மிடம் சண்டை பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள். பஞ்சதந்திர கதைகளில் படித்த பஞ்சதந்திரங்களன்றி இன்னும் ஏதாவது பத்து தந்திரங் களிருந்தாலும் தயவுசெய்து அதையும் கடன் வாங்கி கடைப் பிடிக்க கற்றுக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் அவர் களுக்கு ஜவாப் செய்ய முடியும்.

இவ்வளவு இடுக்கண்களையும் தாண்டி 'டென்சிங் இமயத்தின் சிகரத்தில் கொடி நாட்டியது போல்' நாம் நம் திருமணத்தில் வெற் றிக் கொடி நாட்டியதும், நமக்கு கிடைக்கும் பரிசுகள், கடன், மாமி யார், மருமகள் சண்டை. ஆம், என் தாய் ஐந்து வருடம் அலை யாய் அலைந்து ஆசைக்கு ஒரு மருமகளை அன்போடு கொண்டு வந்து என தலையில் கட்டினளே. அவளே இப்பொழுது குறை படுகிருள். மருமகள் வந்ததும் வீட்டில் தரித்திரம் வந்துவிட்ட தாம். கலியாணத்திற்காக வாங்கிய கடன் கழுத்தை நெறித்தால் அதற்கு அவளா பொறுப்பு! இதே எண்ணத்தை மனத்தில் வைத் துக்கொண்டு அவளிடம் அம்மாவுக்கு வெறுப்பு.

"ஆகாத பெண்டாட்டி என்ருல் கால்பட்டால் குற்றம் கைப் பட்டால் குற்றம்" என்பார்களே அதேபோல் சிறிய விஷயத்திற் கும் பெரிய சண்டை. அம்மாள்தான் அப்படி இருக்கிருர்களே நாமாவது ஒதுங்கினல் சண்டையிருக்காதே என்று எண்ணி எனது சகபத்தினி இருக்கிருளே அவளாவது ஒதுங்கி போவாளா என்ருல் அதுதானில்லை. "மாமி உடைத்தாள் மண் சட்டி. மருமகள் உடைத்தால் பொன் சட்டி போலிருக்கிறது" என்று முன்னுக்கு நிற்பாள். நான் என்ன செய்வது? இதுதான நான் என் திருமணத்திற்காக கஷ்ட நஷ்டமடைந்து, எண்ணரியத் தியா கம் செய்து ஈற்றில் அடையவேண்டிய திருமணப் பரிசு?

[மேற்கண்ட கட்டுரை நாகை இமயப்பதிப்பகத்தார் வெளி யிட்டுள்ள "திருமணப்பரிசு" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள் ளது.பதிப்பாசிரியர் தோ. ந. வீரராகவனல் தொகுக்கப்பட்ட இப் புத்த கத்தில் காதல்-கலியாண விஷயங்களைப் பலகோணங்களில் சுவையான கட்டுரைகள் மூலமும்கற்பனைக் கதைகள்மூலமும் தத்ரூபமாக சித்திரித் துக் காட்டப்பட்டுள்ளன. 180 பக்கங்கள் கொண்ட இப் புத்தகத்தின் விலை ரூபாய் இரண்டரைதான்.]

[திருடன், வழிப்பறிக்காரன் ஜேபடிக்காரன், கொள்ளைக்காரன் குண்டர் முதலிய சமூக விரோதிகள் நாளை தோன்ருமலிருக்க......]

பாதை வாசிகளுக்கு வீடு, வாசல்

கதியற்ற சிறுவர்களின் முதல் தோற்றம்.

ஜேபடிக்காரர்களையும், மற்றும் திருடர்களையும், இன்னும் அமைதியான வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிக்கும் மனித இனங்களைப் பற்றியும் "இவர்கள் தொலைய மாட்டார்களா" என்ற கூக்குரலை எங்கும் சகஜ

மாய்க் கேட்கலாம். ஆனால் இம்மாதிரி ஆத்திரமடைபவர்கள் ஒரு கண மாவது "இந்த மனிதரகம்" எய்கு வ்வாறு தோன்றுகிறதென்பதை சிந்திப்பதுண்டா? இப்படி சிந்திப்பதன் மூலமும் சில ஆராய்ச்சிகள் செய் வதன் மூலமும் சில ஆச்சரியகரமானதும் பரிதாபகரமானதுமான தகவல் களை அறிந்து கொள்ளலாம்.

கதியற்ற நிலைமை மாறியதின் ஒரு சின்னம்.

தீய செயல்களைப் புரிந்தே வாழ்க்கை யை நடத்துபவர்கள் கணக்கில்லாமல் எப் போதுமே உலகில் நடமாடுவதற்கு ஒரு முக்கிய காரணம் இவர்கள் பெரும் பாலோரையும் சீர் திருத்த முடியா தென்பதுதான் ஒரு ஜேபடிக்காரனுக்கு ஒருதரம் சிறைவாச மளித்தால், சிறையி லிருந்து விடுதலை யடைந்த தினமே அவன் ஜேபடித் தொழிலைத்திரும்பவும் ஈடுபடுகிறன். இதுபோலவேதான் மற்ற ரகங்களைச் சேர்ந்த தீயச்செயல்களைப் புரிபவர்களும். இவர்களனைவருக்கும் பாப—புண்ணிய சிந்தனையில்லாத தோடு உழைத்து வியர்வையைச் சிந்தி வாழ்க்கை நடத்துவது இவர்கள் வெறுக்கும் காரியம். சிறைக்குச் சென்றால் வசிக்க இடமும் உடுக்க உடை யும், உண்ண உணவும் கிடைப்பது நிச்சயம். அதனால் இவர்கள் எப்போ தும் சிறைவாசஞ் செய்வதிலேயே பற்றுதல் கொண்டுள்ளார்கள்.

இம்மாதிரி இனத்தை யொழிக்க வேண்டுமானால் இவர்களைச் சீர்திருத் தும் முயற்சிகள் இளமையிலேயே தொடங்கவேண்டும். நீங்கள் எல்லோரும் நகரங்களில் பாதை ஓரங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கலாம்

குப்பை கூளங்களைக் கிளறி அவற்றிலிருந்து எச்சில் உணவை எடுப் பதில் சின்னஞ்சிறு குழந்தைகள் ஆழ்ந்திருப்பது தெருச் சண்டைகள், முதலியவை நம் கண்ணில் பட்டும் இவற்றை லட்சியம் செய்யாமல் ஒதுங் கியே செல்கிறோம். இவ்வாறு அறிவுடையோர்கள் ஒதுங்குவதுதான் தீயச் செயல்கள் புரிபவர்கள் ஒழியாமலிருப்பதற்கும், இவர்கள் அதிகரிப்பதற்கும் ஒரு முக்கிய காரணமாகும். இவ்வுண்மையை யுணர்ந்த ஒரு நாகபுரிவாசி வீதிகளிலேயே பிறந்து வளர்ந்து தீய செயல்களைப் புரிவதில் சிறுவர்கள் தேர்ச்சி பெறுவதைத் தடுக்க ஒரு வழி காட்டியுள்ளார்.

17 வயதுவரையிலுமுள்ள 30 சிறுவர்களுக்கு ஒரு வாசஸ்தலத்தை யளித்து கௌரவமாகவும், நாணயமாகவும் வாழ்வதற்குமுள்ள வசதிகளைச் செய்து, மிக அத்தியாவசியமான சீர்திருத்த முயற்சியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

நாகபுரி ரயில்வே ஸ்டேஷன் அதிகாரிகள் இப்போது உபயோகிக்காத பிரயாணிகள் தங்குமிடத்தில் இந்த 30 வாலிபர்கள் வசித்துவரும் விடுதி தோன்றியுள்ளது.

ஆனந்தத்துடன் அருந்த தேனீருமுண்டு.

இந்த ஏற்பாட்டைச் செய்தது 1954-ம் ஆண்டில் மழை பலமாக அடித்துக்கொண்டிருந்த ஒரு இரவில் தான். Y. M. C. A. வின் காரியதரிசி ஸ்ரீ தர்மராஜ் என்பவர் ரயில்வே ஸ்டேஷனில் மழைநீர் தேங்காத மூலையில் அநேக வாலிபர்கள் ஒளிந்துகொண்டிருப்பதைக் கவனித்தார். உடனே அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து பூட்டிக் கிடந்த அறையைத் திறந்து அதில் அன்றிரவு இந்தவாலிபர்கள் தங்குவதற்கு ஏறபாடு செய்தார் நாகபுரி ரயில்வே ஸ்டேஷன் அதிகாரிகள் அந்த அறையைச் சுத்தஞ் செய்து, வர்ணமடித்து, அழகு படுத்தினார்கள். அருகிலிருந்த நிலத்தையும் பண்படுத்தி விளையாட்டு மைதானமாக்கினார்கள்; ஒரு தண்ணீர்க் குழாய், குளிப்பதற்கு இடம், முதலிய வசதிகளும் ரயில்வே ஸ்டேஷன் அதிகாரிகள் செய்து கொடுத்தார்கள்.

Y. M. C. A. வின் அங்கத்தினர்கள் இவர்களுக்கு நித்திரை செய்வதற்கு பாய், தலையணை, கம்பளி முதலியவற்றையும் அளித்தார்கள். பால் அருந்துவதற்கு பால் பவுடர் டப்பிகளும் ஏராளமாகக் கிடைத்தன. வாலிபர்கள் கல்வி பயில, கற்பலகை, புத்தகங்கள் முதலிய யாவும் Y. M. C. A. அங்கத்தினர்களிடமிருந்து கிடைத்தன.

1954-ம் ஆண்டு சுதந்திரத்தினத்தன்று இந்த அனாதை வாலிபர்களின் விடுதியை மகாத்மா காந்தி புதல்வர் ராமதாஸ் காந்தி திறந்துவைத்தார்.

அவர்களெல்லாம் எவருக்கும் வேண்டாதவர்களென்ற நோக்கம் வாலிபர்கள் மனத்திலிருந்து மாறித் தங்களைப் பற்றியும் அக்கறை கொள்வதற்கு மனிதர்கள் இருக்கிறார்களென்ற மகிழ்ச்சி இந்த வாலிபர்களுக்கு ஏற்பட்டது. அதிகாலையில் இவர்களுக்கு ஸ்நானம் செய்விப்பது பால் கொடுப்பது. சுத்தமான உடைகளை இவர்கள் அணிந்துகொண்டிருக்கிறார்களா வென்று மேற்பார்வையிடுவது, போன்ற காரியங்களைக் கவனிப்பதற்காக Y. M. C. A. அங்கத்தினர் ஒருவரே விடுதியில் இரவில் தங்குகிறார்.

அனாதை வாலிபர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பது, பலவித விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுப்பது போன்ற வேலைகளை மற்ற அநேக Y. M. C. A. அங்கத்தினர்கள் கவனிக்கிறார்கள். இந்த விடுதியில் ஒரு சிறு வைத்திய சாலையுமுண்டு.

ஒரு சந்தர்ப்பத்தில் சில Y. M. C. A. அங்கத்தினர்கள் 50 சட்டைகளை விடுதி வாலிபர்களுக் களித்தார்கள். புது சொக்காய்களை பெரும் பாலான வாலிபர்கள் விற்று தின்பண்டங்களை வாங்கித்தின்று விட்டனர். சிலர் சினிமா பார்ப்பதற்கும், சிகரட்டுகள் குடிப்பதற்கும் சூது விளையாடுவதற்கும் செலவழித்து விட்டனர்.

இம்மாதிரியான தீய காரியங்கள் செய்வதை மறக்கடித்து சாதாரண மனிதர்கள் வாழும் சூழ்நிலைகளில் சாதாரண மனிதர்களைப் போல் இவர்கள் வாழவேண்டுமென்பதற்காக நாகபுரி Y. M. C. A. அங்கத்தினர்கள் முயன்று வருகிறார்கள்.

கால்ஜோடுகளுக்குப் பாலிஷ் போடும் கருவிகளைச் சில வாலிபர்களுக்கு வாங்கிக் கொடுத்தார்கள். சிலரைக் கூடை நெய்வதற்குப் பயிற்சியளித்து அதற்குள்ள சாதனங்களையுமளித்துள்ளார்கள். சிலரைத் தொழிற் சாலைகளில் சேர்த்துக்கொண்டு பயிற்சி யளித்து, பிறகு சம்பளமும் கொடுப்பதாக சில நாகபுரி தொழிலதிபர்கள் வாக்குறுதியளித்துள்ளார்கள்.

பந்து விளையாட்டுகளைத் தவிர இவர்கள் பொழுது போக்கிற்காக இந்தியாவிலுள்ள அமெரிக்கர் காரியாலய ஆதரவில் சினிமா வசதிகளுமுண்டு. இந்த வாலிபர்கள் சில சந்தர்ப்பங்களில் சங்கீத கச்சேரிகளும் நடத்தியுள்ளார்கள்.

பாதை ஓரங்களில் ஆயுள் முழுவதும் வாழ்நாளைக் கழிக்கும் ஜீவன்களுக்கு இவ்வளவு வசதிகளை அளித்தால் போதாதாவென்றுதான் அனைவரும் நினைக்கலாம். இவ்வளவு வசதிகளைப் பெற்ற இந்தக் கதியற்ற வாலிபர்களில் சிலர் இந்த விடுதி தொடங்கிய சில மாதங்களுக்கெல்லாம் இங்கிருந்து ஓடிவிட்டார்களாம்! பிறகு இவர்களுக்குப் பதிலாக வேறு அனாதைச் சிறுவர்களை விடுதி அதிகாரிகள் சேர்த்துக் கொண்டார்களாம்!

—With Ack. to *ONLOOKER*.

மனித இனம் ஒழியவேண்டுமா?

அல்லது யுத்தம் ஒழிய வேண்டுமா?

★

அணுகுண்டு யுகம் பிறந்தாகி விட்டது. அணுகுண்டை விட சக்தி வாய்ந்த குண்டுகளும் தயாராகி விட்டன. மனித இனமே ஒழிந்துபோய் விடுமோ என்ற திகில் விஞ்ஞானிகளிடையே பரவியுள்ளது. சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விஞ்ஞானிகள் தங்களுக்கு இந்தத் திகிலுண்டென்பதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டனர். இவ்வாறு ஒப்புக்கொண்டதன் சின்னமாக இவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை கீழே கொடுத்துள்ளோம். இந்த அறிக்கை ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரமாயிருப்பதும் அதன் முக்கியத்துவத்தைக் கருதித்தான் 'திரட்டி'லும் இடமளித்துள்ளோம். இதற்குக் கையொப்ப மிட்டுள்ளவர்கள் விஞ்ஞான உலகத்தில் மிகப் பிரபலமானவர்கள். மனித வர்க்கம் அழிந்தே போய்விடுமென்று மிகவும் மனம் உருகி இந்த அறிக்கையை இவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இதில் குறிப்பிட்டுள்ள சமாதான வழியைத்தான் இந்திய சர்க்கார் ஏற்கனவே கடைபிடித்து வருகிறார்கள். மேல் நாட்டுச் சர்க்கார் அதிகாரிகளும் தலைவர்களும், உலகம் உய்ய இந்த வழியைக் கடைபிடிப்பார்களென்று இறைவனை வேண்டுகிறோம்.

பொது மக்களுக்கு நாசம் விளைவிக்கும் கருவிகளின் தயாரிப்பு பெருவாரியாக அபிவிருத்தி அடைந்திருப்பதால் உலகத்திற்கே ஏற்பட்டுள்ள பரிதாபகரமான நிலையைப் பற்றி விஞ்ஞானிகள் சிந்திக்க வேண்டும். அரசியல் ஞானமும் மற்றுமுள்ளவர்களுக்கு இந்தக் கருவிகளைப் பற்றி தனிப்பட்ட அபிப்பிராயங்களிருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் அவர்கள் பற்றுதல்களைப் புறக்கணித்து உலக மக்கள் அனைவரும் மனிதர்களென்ற ஒரே நோக்கத்தைக் கொள்ள வேண்டியது அத்தியாவசியம் மனித இனத்தின் சரித்திரம் மிக விந்தையானதுதான். ஆனால் இந்த இனத்தை இப்போது ஒழிக்க வேண்டுமென எவரும் விரும்ப மாட்டார்கள்.

நாம் பாரபட்சமின்றியே பேசுகிறோம். ஒரு கட்சிக்கோ, ஒரு ராஜ்யத்தின் சார்பாகவோ ஒருவரைப் புறக்கணித்து மற்றொருவரின் செல்வாக்கையோ, ஆதரவையோ பெறும் நோக்கத்தில் பேசவில்லை. அனைவரும் ஒன்றுபோல் ஆபத்தில் சிக்கியவர்கள் தான். இந்த ஆபத்து என்ன என்பதை யாவரும் சரியாகத் தெரிந்து கொண்டால் மட்டுமே தான் அதிலிருந்து விமோசனம் பெறும்வழியை வகுக்க முடியும்.

இப்பொழுது நாங்கள் பேசுவது ஒரு குறிப்பிட்ட ராஜ்யத்தையோ கண்டத்தையோ வகுப்பையோ சேர்ந்தவர்களென்ற ஹோதாவில் அல்ல.

இன்று தயாராகவுள்ள ஆயுதங்களை உபயோகப்படுத்தி யுத்தம் துவங்கினல் ஒரே நொடியில் தூளாய்விடும் மனித குலத்தைச் சேர்ந்தவர் என்ற ஹோதாவில்தான் பேசுகிறோம்.

இன்றுள்ள உலகம் பூசல்களால் நிறைந்தது. எல்லா அற்ப பூசல்களையும்விட மிகப் பயங்கரமானது, கம்யூனிஸ்டுகளுக்கும் அவர்களை எதிர்ப்பவர்களுக்குமிடையேயுள்ள பூசல்தான் நம் சிந்தனைகளுக்கு புதிய உருவகம் கொடுக்கவேண்டும். இன்றும் நாளையும் உலக மலனை நிலை நிறுத்துவதற்குள்ள வழி ஒரு ராஜ்யத்திற்கோ, ஒரு இனத்திற்கோ யுத்தத்தில் வெற்றியளிக்க முறைகளை வகுப்பதல்ல. ஏனென்றால் யுத்தத்தில் வெற்றியளிப்பதற்கு மனிதனல் வகுக்ககூடிய முறைகளே கிடையாது.

இன்றும் நாளையும் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் இவைதான் :- எந்த வழிகளைத் தேடினல், எந்த முறைகளை வகுத்தால், அகில உலகத்திற்கு அடியோடு நாசம் விளைவிக்கும் ஆயுதங்களை யுத்தங்களில் உபயோகிப்பதைத் தடுக்க முடியும்!

இன்று தயாராயுள்ள அணு, ஜலவாயு குண்டுகளை உபயோகிப்பதன் மூலம் எந்த அளவிற்கு நாசம் விளைவிக்கலாமென்பதை அதிகாரத்திலுள்ளவர்கள்கூடத் தெரிந்துகொள்ளவில்லை.

அணுகுண்டு என்றால் ஒரு நகரத்தை அறவே அழிக்கும் நாச ஆயுதமென்றே பொது மக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனல் இன்றுள்ள புதுரகக் குண்டுகள் இவற்றைவிட அதிகச் சக்தி படைத்தவை. ஒரு அணுக்குண்டு ஹீரோஷிமா பூராவையுமழித்துவிட்டது. லண்டன் நியூயார்க் மாஸ்கோ, முதலிய மிகப்பெரிய நகரங்களையழிப்பதற்கு ஒரே ஜலவாயு குண்டு போதும்.

ஜலவாயு குண்டுகள் உபயோகிக்கும் ஒரு யுத்தம் மூலம் பெரிய நகரங்கள் யாவும் அழிந்துபோவது நிச்சயந்தான். ஆனல் இதுகூட ஒரு பெரிய துர்ப்பாக்கியமல்ல. லண்டன், நியூயார்க் மாஸ்கோ முதலிய நகரங்களிலுள்ள மக்களனைவரும் மறைந்து விட்டாலும் காலப் போக்கில் உலகம் இந்த அதிர்ச்சியை மறந்துவிடும். ஆனல் அணுகுண்டு ரகத்தைச் சேர்ந்த கருவிகளால் விளையும் நாசம் நகரங்களை யழிப்பதோடு நின்றுவிடாது. படிப்படியாக நாசம் பரவிக்கொண்டேவரும். குண்டுவீச்சுக்கு ஆளான நகரத்தைவிட பன்மடங்கு பெரிய பிரதேசங்களிலுள்ள மக்கள் படிப்படியாக மாள்வார்கள்.

ஹிரோஷிமாவிற்கு நாசம் விளைவித்த அணுகுண்டைவிட 2,000 மடங்கு அதிகம் சக்தி வாய்ந்த குண்டுகளை அப்போது தயாரித்துள்ளார்கள். இந்த ரகத்தைச் சேர்ந்த ஒரு குண்டை சமுத்திரத்தடியில் வெடிக்கச் செய்தால்கூட ஆகாயம் முழுவதும் விஷப் பொருள்களால் நிறைந்துவிடும். இந்தப் பொருள்கள் யாவும். காலப் போக்கில் தூசியாகவும், மழையாகவும் நிலத்தில் விழுகின்றன. தூசியால் பாதிக்கப்பட்ட ஜப்

பானிய செம்படவர்களைப் பற்றியும் அவர்களுக்கு நேர்ந்த ஆபத்துக்களைப்பற்றியும் பத்திரிகைகளில் பலர் படித்திருக்கலாம்.

ஆகாயத்தில் சேர்ந்துள்ள விஷப்பொருள்கள் வாயுமூலம் எவ்வளவு தூரம் வியாபிக்குமென்று எவராலும் கூற முடியாது. இந்தப் பிரச்னையைப் பற்றிப் பிரத்தியேகமாக ஆராய்ச்சி செய்த நிபுணர்களின் அபிப்பிராய பிரகாரம் ஒரு யுத்தத்தில் ஜலவாயு குண்டுகளை உபயோகித்தால் அத்துடன் மனித இனம் அழிந்தே போய் விட்டதென்று கொள்ளலாமாம். திடீரென மரணம் சில லக்ஷம் மக்களை மட்டுமேதான் பாதிக்குமென்றாலும், சில வாரங்களிலோ, அல்லது சில மாதங்களிலோ, உலக மக்களனைவரும் நோய்களால் பாதிக்கப்பட்டு மரணவேதனைகளை யனுபவித்து ஒவ்வொரு அங்கமும் அழுகிப் போய் பஞ்சேந்திரியங்களும் ஒவ்வொன்றாக ஒடுங்கிப்போகும் நிலையையடவார்கள்.

பிரபல விஞ்ஞானிகளும் யுத்த சாஸ்திர நிபுணர்களும் அணிகுண்டு ரகங்களின் உபயோகத்தைப் பற்றி அடிக்கடி எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆனால் எவரும் இந்தக் குண்டுகளை உபயோகிப்பதால் எந்த அளவிற்கு நாசமேற்படுமென்பதைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறியதில்லை. அதனால் நாசம் எந்த அளவிற்கு ஏற்படலாமென்பதை பொதுமக்களனைவரும் உணர்ந்து கொள்வது அத்தியாவசியம்.

நிபுணர்களும், விஞ்ஞானிகளும் அவரவர்கள் பிரத்தியேகமாக ஆராய்ந்துள்ள அம்சங்களைப் பற்றியோ, பகுதிகளைப் பற்றியோதான் பேசுவார்கள். பொதுவாக அநேக அம்சங்களைப் பற்றி அறிந்துள்ள விஞ்ஞானிகள் அணுகுண்டு ரகங்கள் மனிதனுக்கு அழிவையளிப்பது நிச்சம் என்றுதான் கருதுகிறார்கள்.

இன்றைய பயங்கர பிரச்னை இதுதான் :—

இதைக் கவனியுங்கள் !

மனித இனத்தை ஒழிப்போமோ ?

அல்லது யுத்தத்தை ஒழிப்போமா ?

யுத்தத்தை ஒழிப்பது எப்படியென்று அநேகர் கலவரமடையலாம்.

யுத்தத்தை ஒழிப்பதென்றால் ஒவ்வொரு ராஜ்யமும் அதன் அரசாங்கத்திற்குக் கட்டுபாடுகள் வகுத்துக்கொள்ள வேண்டும். இதைத் தவிர மிகவும் அத்தியாவசியமானது மனித இனத்திற்கு முக்கியமான ஆபத்து என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டியது.

மனித இனத்திற்கு ஆபத்து என்றால் அது தன்னையும் குடும்பத்தையும் பாதிப்பதாகுமென்று அநேகரும் தெரிந்துகொள்ளாத விஷயம். பொதுவாக " உலகத்திற்கு ஆபத்து மனித வர்க்கத்திற்கு ஆபத்து" என்றெல்லாம் கூறும்போது பெரும்பாலோர் அந்த ஆபத்து தங்களுக்குத்தான், தங்கள் குடும்பத்தாருக்குத்தான் என்பதை

மறந்து உலகில் எங்கோ ஒரு மூலையில் வசித்துக்கொண்டிருக்கும் ஏதோ சிலருக்கு ஏதோ நேரிடலாமென்று ஒரு வெளி வந்த அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றனர். இப்படி உலகில் ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஒரு இனம் நசித்த பிறகும் தாங்களும் தங்கள் உற்ருர் உறவின் நண்பர்களும், எல்லோரும் இன்ப வாழ்க்கையை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பார்களென்று தான் பெரும்பாலோர் கருதுகின்ருர்.

ஆனல் இதெல்லாம் தவறு; அபத்தமுமகூட. சமாதான காலங்களில் பயங்கர யுத்தக் கருவிகளை உபயோகப்படுத்துக் கூடாதென்றெல்லாம் ஒப்பந்தங்கள் ராஜயங்களுக்கிடையே கையெழுத்தாகலாம. ஆனல் யுத்தம் துவங்கிவிட்ட தருணத்திலிருந்தே இந்த ஒப்பந்தங்களை அனைவரும் மறந்துவிடுகிருர்கள். மிகத் தீவிரமாக ஜலவாயு குண்டுகளைப்போன்ற நர்சகுண்டுகளைத் தயாரிக்கிருர்கள்.ஒரு கட்சி தயாரிக்காதிருப்பினும் மற்ற கட்சி கட்டாயம் தயாரிக்கும் என்ற விஷயம் இருபாலருக்கும் தெரிந்ததேயாதலால் இருவரும் நாசப் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபடுவது சகஜம்.

மனித இனத்திற்கு அக்கறை இருப்பின் சுபிட்டசத்தையும் விவேகத்தையும் அபிவிருத்தி செய்துகொள்ள மார்க்கங்களிருக்கின்றன.

சாதாரண மனிதர்கள் என்ற ஹோதாவில் நாங்கள் பொது மக்களை வேண்டுவது இதுவே நீங்கள் மனிதர்கள் என்பதை மாத்திரம் நினைவிலிருத்தி மற்றயாவையும் மறந்திடுங்கள். அப்படிச் செய்வீர்களேயானல் மண் உலகத்தைப் பொன்னுலகமாக்கலாம். அப்படிச் செய்யாவிடில் இம்மாயப் பிரபஞ்சமே நரகமாகிவிடும்.'

பொதுமக்களையும் விஞ்ஞானிகளையும் கிழ்க்காணும் திட்டங்களைக் கையாளக் கோறுகிருேம்.

ராஜ்யங்களுக்கிடையே நேரிடக்கூடிய யுத்தங்களில் அணு ஜலவாயுகுண்டு ரகங்கள் உபயோகப்படுத்த படுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் உலகிலுள்ள சகல ராஜ்யங்களின் சர்க்கார்களோடும் அவர்கள் எந்த ராஜயத்தோடும் எக்காரணத்தாலும் யுத்தத்தில் ஈடுபடமாட்டார்களென்றும் எந்தத் தகராறையும் சமரசமாகத் தீர்த்துக் கொள்வார்களென்றும் பகிரங்கமாக வாக்குறுதியளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருேம்.

(LATE) ALBERT EINSTEIN,
BERTRAND RUSSELL.

HIDEKI YUKAWA, Kyoto University.

P. W. BRIDGEMAN, American Nobel Prizeman, Harvard University.

LEOPOLD INFELD Warsaw University.

B. I. MULLER, Nobel Prilzeman. Indiana (Usa) University.

C. S. POWELL, British Nobel Prizeman, Bristol University.

J. ROTBLATI, London University.

F. JOLIOT-CURIE, France.

கவியின் கனவு

★

தூரத்திலே பருவமறிந்த பெண்ணின் பண்புடன் அமைதியாக அன்ன நடைபோட்ட ஆற்றங்கரையிலே கவியின் குடிசை எழிலோவியமாய்க் காணப்பட்டது. முன்னால் ஓங்கி நீண்டு வளர்ந்திருந்த ஒரு மரத்தடியில், ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் ஹியூன்ஸாங். அவர் ஒரு கவிஞர்மட்டுமல்ல, சரித்திர ஆராய்ச்சியாளருங்கூட. சற்று பின் பக்கம் திரும்பினார். ஒரு ராஜ சேவகன் பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தான். "மகாகவி அவர்களுக்கு நமஸ்காரம். ராஜாவிடமிருந்து வருகிறேன்."

"ராஜாவிடமிருந்தா? நீ இந்த ஊர் இல்லை போலிருக்கிறது. இந்திய உடைகளை அணிந்துகொண்டு—

"ஆமாம். நான் இந்திய ராஜ்யத்தை ஆளும் ஹர்ஷனிடமிருந்து வருகிறேன். நீங்கள் எங்கள் ஆஸ்தானத்திற்கு வந்து எங்களை கௌரவிக்கவேண்டும். உங்களை அழைத்துச் செல்ல எல்லாவற்றையும் தயார் செய்துகொண்டு வந்திருக்கிறேன்—தாங்கள் புறப்பட வேண்டியதுதான்—என்று விநயமாக கூறினன் அந்த இந்தியன்.

'ஆம். இந்தியாவைப் பற்றி வெகுவாக கேள்விப்பட்டிருக்கின்றேன், அதுவும் ஹர்ஷ சக்ரவர்த்தியின் புகழ்தான் எங்கும்பரவியிருக்கிறதே, அவசியம் வருகிறேன். எனக்கும் இந்த சீனதேசத்து தொல்லைகள் எல்லாம் மறந்திருந்தால் கொஞ்சம் மன அமைதியாவது கிட்டும். என்று உடனே புறப்பட்டு விட்டார் ஹியூன் ஸாங்.

★

தலை நகருக்குள் நுழைந்ததுமே அவருக்கு அமோகமான வரவேற்பு. வாழைத் தோரணங்களும் பந்தல்களும் வெகு ஆடம்பரமாக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'சீன தேசத்து கவிஞருக்கு நல்வரவு' என்று சித்திரத்தில் தீட்டிய பட்டுத் துணிகள் பொன்போல மிளிர்ந்தன, நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய வெள்ளி ரதம், சுற்றிலும் தொங்கி யாடும் சின்னஞ் சிறு தங்க மணிகள் ரமணீயமாக ஒலிக்க, அவரைப் பவனி அழைத்துச் செல்ல நின்று கொண்டிருந்தது.

மக்கள் எல்லோரும் வீதியில் தரிசிக்க கும்பல்களாக கூடியிருந்தனர். மல்லிகை,முல்லை, ரோஜா இதழ்களை வாரி வாரி இறைத்தனர் கவி ஏறி வந்த ரதத்தின்பேரிலே. தானே தன் சிம்மாசனத்தில் இருந்து எழுந்தோடி வந்து, அவரை அன்புடன் எதிர் கொண்டழைத்து, மார்புறத் தழுவி, ஆசனத்தில் அமரச் செய்தான் ஹர்ஷன். சபையில் எல்லோரையும் அறிமுகப் படுத்திய பிறகு விருந்திட்டு உபசரித்தான். பிறகு தனியான தன் அந்தரங்க அறைக்குச் சென்று கவியுடன் அளவளாவி தோட்டத்தில் விளையாட வந்த அரசனது செல்வக் குமரி புஷ்பகந்தி, யாரோ ஒரு அந்நியருடன் ஏகாந்த அறையில் தனித்துப் பேசிக்கொண்டிருக்கும் தன் தந்தையைக் கண்டதும் சிறிது தயங்கினாள். அவள் தயங்குவதை சாரளத்தின் வழியாக கண்ட அரசன், "புஷ்பகந்தி வா அம்மா!" என்று அன்புடன் அழைத்தார். ஹியூன் ஸாங் அவள் வருதை தன் ஓரக்கண்ணால் பார்த்தார். பதினைந்து பதினறு வயது மேலிராத பெண் பருவமங்கையின் பூரண எழிலுடன் காட்சி அளித்தாள். அவள் முகத்தில் தோன்றிய காந்தியையும், அடக்கத்தின் அமைதியையும், அதிருபலாவண்யமும் அவரைப் பிரமிக்கச் செய்தன.

"புஷ்பா! இவர் சீனதேசத்து கவிஞர்—நம் ஆஸ்தானத்திலேயே

தங்கியிருக்க ஏற்பாடு செய்துவிட்டேன் பெரிய சரித்திர ஆராய்ச்சியாளரும்கூட.''

"அறிஞரே! இவள் என் ஒரே குமரி புஷ்பகந்தி. என்னை வாழ்விக்கவந்தவள். இவள் நாட்டியமும், ஏழு நரம்புகளையுடைய யாழின் இன்னிசையையும் நன்றாக பயின்றவள்—ஆனால்—கவிஞரே—இயற்கையோடு உள்ளம் இணைந்து, அந்த இன்பத்திலே திளைத்து, காட்டிலே ஆடுகின்ற மாமயிலின் அழகைக் கண்டும், இரவுகளிலே குயிலின் இசையை அனுபவித்த உங்களுக்கு —என் புஷ்பா அவளுடைய இசை —பிரமாதமாகத் தோன்றாது—'' என்று புலவரை மிகவும் உயர்வாகத் தூக்கி வைத்து பேசிவிட்டார் ஹர்ஷன். புஷ்பாவின் அழகை ரசித்துக்கொண்டிருந்த ஹியூன்சாங்கிற்கு அவளுடைய நாட்டியத்தையும் கண்டு களிக்க ஆவல் ஏற்பட்டது.

அவரது முகக் குறிப்பைஉணர்ந்து கொண்ட அரசன் "புஷ்பா! அலங்காரம் செய்து கொண்டுவா. கொஞ்ச நேரம் யாழி வாசித்து வாசித்துவிட்டு, ஒரு அபிநயமும் செய்து காட்டு. இவர் ஒரு பெரிய கவிஞர் மட்டுமல்ல. ஒரு கலைஞரும் கூட. நம் ஆட்சியின் சரித்திரத்தில் உன்னை எழுதுவதோடு மட்டுமல்லாமல், அதில் உன் கலைத் திறனையும் எழுத அவருக்குச் சந்தர்ப்பமளி. அவருடைய ஆசிகள்தான் உன்னை மேன்மையடைய செய்யும்''

யாழின் நரம்புகளை மீட்டி நாத வெள்ளத்தை பொழியத் தொடங்கினாள். அவளுடைய மிருதுவான ஸ்பரிசத்தைக்கூட தாங்கமாட்டாது அவை ஸ்வரக் கண்ணீரைப் பெருக்கின. அவளுடைய விரல்கள் வசந்த காலத்து தென்றல் காற்றில் சதா அசைந்து கொண்டிருக்கும் இளந் தளிர்களைப்போல் துரு துருவென்று நரம்புகளின் மேல் துடித்துக்கொண்டிருந்தது—கவிஞர் மெய்மறந்து போய் விட்டார். இருந்தாலும் பிரமாதம் என்று கூற மறக்கவில்லை.

அவள் நாட்டியமாடினாள். நளினம், மென்மை, எல்லா பாவங்களும் அவளுடைய நாட்டியத்திலே கண்டார். அந்த அபிநயத்திலே ஆயிரக்கணக்கான அதி அற்புதமான 'பிடிகள்' முகத்திலே காதல், விரகம், தாபம், கோபம் எல்லாம் மாறிமாறி இசைக்குத் தகுந்தாற் போல தெரித்தன—இறுதியில் அவள் நாட்டியமாடிக்கொண்டே தன் இருதயத்தில் இறங்கியிருப்பதை உணர்ந்தார் கவி. அரசரோ கவிஞரின் முகத்தில் மாறுபட்டு வரும் உணர்ச்சிகளின் ரேகைகளை கவனித்து வரலானார். அவரையும் அறியாமல், சில சமயங்களிலே, புகழ்ச்சியாகப் பேசியதையும் குறிப்பாக உணர்ந்து கொண்டார். ஆனால் கவிஞர் உள்ளக்கிடக்கையை யாரே அறிவர்?

"இவ்வளவு கலாரசம் பொருந்திய என் புஷ்பாவுக்கேற்ற இளவரசன் கிடைக்கவில்லையே—''என்று கூறிக் கொண்டே அவளைப் பார்த்தார். வெட்கத்தினால் புஷ்பாவின் முகம் குபீரென்று குங்குமம் போல சிவந்தது. மேலும் அங்கிருக்க நாணமுற்றவளாய் வெளியே சென்று விட்டாள். காற்றிலே அசைந்தாடும் பூங்கொடிபோல அவள் அசைந்து அசைந்து செல்லும் அழகைப்பார்த்தபடியேநீண்ட பெருமூச்சு விட்டார் கவி.

"எனக்கு கீழ்ப்படிந்த அரசர்கள் எல்லோருக்கும் கலை என்றாலே பொருள் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் புஷ்பாவிற்கோ, அரச பதவி யில்லாவிட்டாலும் பாதகமில்லை. கலை உணர்ச்சி உள்ளவனாக வேண்டும் என்கிறாள்... என்று தன் குறைகளைக் கூறிக் கொண்டான் ஹர்ஷ சக்ரவர்த்தி. ஆனால் அந்த வார்த்தைகள் எல்லாம் அவர் செவியில் விழுந்ததாகத் தெரியவில்லை. 'புஷ்பா' இன்னும் அவர் கண்முன் நாட்டியமாடிக்

கொண்டிருப்பதைக் கண்டார். யாழின் ஒலி இன்னும் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தது — பேச்சு எப்படி எப்படியோ வளைந்து அவருடைய வாழ்க்கையைப் பற்றி வந்தது. 'கலை, காதல் என்று நான் கவிகளைப் பாடினல் மட்டும் என்–மனித உள்ளம்—சாந்தியடைந்து விடுகிறதா? அதை வாழ்க்கையில் அனுபவித்தறிய அவலமனசு ஆசைப் படுகிறது. இன்று 'புஷ்பாவின் நாட்டியத்தைக் கண்டதும், அந்த யாழின் இன்னிசையும், அவளது குறலினிமையும் என் உள்ளத்தை உருக்கி விட்டன' என்ருர் தம்மையும் மீறிய உணர்ச்சியினுல்.

கவிஞரே இது உண்மைதானு? தாங்கள் என் மகளை மனமார விரும்புகிறீர்களா? உங்களை மருமகனுக அடையஎவ்வளவுபுண்ணீயம் செய்திருக்கவேண்டும் என்று உணர்ச்சி பொங்க கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததும்ப, நாத் தழுதழுக்கக் கூறினர். பழம் நழுவி பாலில் விழுந்தது.

அடுத்த பக்ஷமே, வெகு விமரிசையாகத் திருமணமும் நடந்தேறியது. ஆனல் பலரிடையே பெருத்த ஏமாற்றமும் வருத்தமும் இருந்தன. சிற்றரசர்கள் எல்லோருக்கும் ஒரு பெரிய இடி. கேவலம் நாடு கடந்து வந்த ஒரு சீன தேசத்து கவிஞனுக்கு தன் கன்னிகையை தானம் செய்து கொடுத்துவிட்டாரே என்ற மனத் தாங்கல்.

★

கூரை மீது எழுகின்ற மெல்லிய சுருள் சுருளான புகை இல்லத்தின் அமைதியைக் காட்டுகிறது. வைகயறையில் பறவைகள் எழுப்புகின்ற கானமும், உழவர்கள் உவகையில் பாடும் கானமும், துள்ளிக்குதித்தது. ஓடிக்கொண்டு மந்தைக்குவரும் கன்றுகளின் மணீ ஓசையும், ஆயர்களின் புல்லாங்குழலின் நல்லிசையும், அனுபவித்தவாறு மாலை பொழுதை கழித்து விடுவார் கவிஞர். அவைகள் அவன் கற்பனைக்கும் உரம் அளித்து ஊக்கத்தை தந்தது. பிற்பகலிலே அரச சபை கலைந்ததும் சரித்திர ஆராய்ச்சியிலே ஈடுபட்டுவிடுவார்.

மாலையிலே, அந்திமயங்கும் நேரத்திலே வானமும், வையமும் கீழ்த் திசையில் வெகு தூரத்திலே ஒன்றை ஒன்று தொட்டு புளகாங்கிதமடையும் வேளையிலே, அரண்மனைத் தோட்டதில் சம்பங்கிப் பூக்களின் சுகந்தத்தை அந்த ரம்மியமான சூழ்நிலையிலே புஷ்பகந்தியோடு சேர்ந்து அனுபவிப்பார்.

நாட்கள் பல உருண்டோடின.

ஒருநாள் ஏதோ ஒன்றை சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, புஷ்பா விம்மி விம்மி அழுது கொண்டே அவரது அறைக்குள் நுழைந்தாள்.

'என்ன புஷ்பா? ஏன் அழுகிருய்' என்ருர் பதட்டத்துடன்.

"இன்று காலை என் தகப்பனர் பூஜை செய்து கொண்டிருக்கும் போது, எங்கள்குலதெய்வம் அசரீரியாக வந்து எங்களுக்கு கெடுதி நேரப் போவதாக சொல்லிற்ரும். நானும் நீங்களும் ஒன்ருக இருப்பது...ஏற்கனவே உங்களுக்கு நிறைய விரோதிகள் ஏற்பட்டுவிட்டனர் இங்நாட்டில். ஆஸ்தானத்தில் மற்றும்உள்ள புலவர்கள் தங்களைக் கொலை செய்ய சதி செய்திருப்பதாக ஒரு வதந்தியும் ஏற்பட்டிருக்கிறது...ஒன்று விம்மலுக்கும் விக்களுக்குமிடையே கூறினள்.

எதற்காக இந்த வீண் கவலை? நாம் ஊரோடு போய் விடலாமா? குடிசையில் தங்கி, ஆனந்தமாக வாழலாமே. இந்த ராஜபோக வாழ்க்கையிலே என்றும் என்றும் ஆபத்துதான் என்று மனம் ஒரு விநாடிக்குள் எண்ணலாயிற்று "பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்

களே—ஏதாவது வழி சொல்லுங்களேன். உங்களுடைய ஊருக்கு நடந்தும் வந்துவிடுகிறேன். அங்கு உங்களுடன் தனித்து வாழ்ந்தாலே போதும்'' என்று தன் கண்களை புடவைத் தலைப்பினால் துடைத்தவாறே கூறினாள்.

ஒரு அயல்நாட்டு—இந்தியப் பெண்ணை—அதுவும் ராஜபோகத்தில் ஊட்டி வளர்க்கப்பெற்ற ராஜகுமாரியை எப்படி காப்பாற்ற முடியும் என்ற அச்சம் தோன்றிற்று அவருக்கு அவளைக் கலியாணம் செய்து கொண்டதிலிருந்துதானே உன் நிர்மலமான வாழ்க்கையில் சஞ்சலம் ஏற்படத் தொடங்கியது. இப்பொழுது உயிருக்கே ஆபத்து வந்துவிடப் போகிறதே... எப்படி தனியாக வந்தாயோ...அப்படியே நீ தனித்துதான் ஊருக்குச் செல்லவேண்டும்...போதும் நீ நடத்திய தாம்பத்ய வாழ்க்கை என்று மனம் இடித்துக் கூறியது. பளிங்கு போன்ற தெளிவான நீரில், நம்முடைய உருவமும், சூழ்நிலையும் அழகாகப் பிரதிபலிக்கும். அவன் வாழ்க்கையிலும் சகல அம்சங்களும் இன்று வரை இன்பக்காட்சிகளாகவே பிரதிபலித்தது. ஆனால்... அதே நீரில் ஒரு சிறிது கல்லை வீசி எறிந்து சிறிது தெளிவைக் கலக்கினால் எல்லா பிரதிபிம்பங்களும் நிலையில்லாமல் ஆடிக்குமிழியிடுமோ அதே ரீதியில்தான் அவன் வாழ்க்கையிலும் சலனமுறத் தொடங்கிற்று.

ஆனால் அறிவோ அவள் உன் காதல் மனைவியாயிற்றே. அவளை இங்கு விட்டுவிட்டாஓடப்பார்க்கிறாய் இதுதானா நீ காதலுக்கு கொடுக்கும் மதிப்பு. காதலின் பொருள் இதுதானா?'' என்றது.

என்ன காதல் வாழ்க்கை வேண்டியிருக்கு. இல்லை. காதலும் சாதலும் ஒன்றுதானா? காதலிப்பதும் கொல்வதும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறதா?... இங்குதானே காதல் ஆரம்பமாயிற்று. இதே இடத்தில் காதலும் .... என்று முணுமுணுத்தார்.

புஷ்பா! என்னை மறந்து மன்னித்து விடு. உன்னை அழைத்து செல்லவும் முடியாது. இங்கு உன்னோடு இனிதவிக்கவும் முடியாது. ஆகையால்...எனக்கு வழியனுப்பு... என்று கெஞ்சினார். உடைந்த யாழிலிருந்து வெளிப்படும் அபஸ்வரம் போலிருக்கிறது அவர் குரல்.

'என்னை மணந்து, இல்லற இன்பத்தை அனுபவித்து, இப்போது, என்னை மறந்து மன்னித்துவிடு என்று கூறுகிறீர்களே ... உண்மையில் நீங்கள் மனிதர்தானா? அல்லது மிருகமா?......என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களுடன் கட்டாயம் மகிழ்ச்சியுடன் எளிய வாழ்க்கையை ஏற்றுக்கொள்வேன். பரந்துகிடக்கும் மணல் வெளியில் பாம்பு நெளிவது போல் தெளிந்துசலசலவென்றுதரைமணல் தெரியும்படி ஓடும் ஆற்று நீரை அனுபவித்தவாறே காலத்தை கடமையோடு கழித்துவிடத் தயார்!' என்று கூறினாள்.

ஆனால் கவிஞரோ பதில் ஒன்றும் கூறாமல், தலையைக் குனிந்தவாறே யோசனையிலாழ்ந்தார். புகையில் அடங்கிய தீ எழுவதுபோல் ஒரே வாக்கியம் சீறிக்கொண்டு அவள் வாயினின்று எழுந்தது "நீங்களா என் கணவர் இல்லை, என் வாழ்வைக் கெடுக்க வந்த பாதகன். பாதகன். ஹியூன், நீ பாதகன்! என்று கத்தினாள்; கதறினாள்; விம்மினாள்; விம்மினாள்.

"புஷ்பா! வாயை மூடிக்கொள். உனக்கு வெறி பிடித்து விட்டதா? அந்த சபதத்தை என்னால் பொறுக்க முடியவில்லையே''...என்று அவளுடன் சேர்ந்து அவரும் கதறினார்.

திடுக்கிட்டு எழுந்தான் சீனகவி ஹியூன்ஸாங். இவ்வளவுநேரம்தான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்

போது, ஒரு வண்டு தன் காதின் அருகில் ரீங்காரம் செய்துகொண்டிருப்பதைக் கண்டார். யாரும் தன் காதின் அருகில் கத்தவில்லை என்றும், இவ்வளவும் தன் கனவில் நடந்தது என்றும் மெல்ல புரிந்து கொண்டார்.

அந்தக் கனவில் கண்ட புஷ்பகந்தியைப் போல ஒரு குமாரத்தி இருப்பாள், அவளைக் காணலாம் என்ற ஆசையுடனும் நம்பிக்கையுடனும் தான் ஹியூன்ஸாங் இந்தியாவுக்கு ஹர்ஷன் ஆண்டபோது வந்ததாக சரித்திரக் கற்பனை.

—ஏ.ஸி. சீனிவாசன்.

(Est. 1902)
எங்கும் புகழ்பெற்ற
ஆரோக்கிய திவ்யாமிர்தம்
மூலவியாதி, 9-க்கும் மலச்சிக்கல், உஷ்ணமேகம்,
பித்தவாவிற்கும் சிறந்தது.
1 சேர் டின் (48 நாள் மருந்து) 3—6—0
Props: **G. ABRAHAM & SONS,**
G S. Sadanam
Kundara P. O. T. C. State.
N. B. Wanted Agents in all places on decent commission.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப்
புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

நிறங்களின் கருத்து

இங்கு நாம் ஆராயப் புகுவது 'வெண்மை-செம்மை' என்னும் நிறங்களையும் இவை பற்றி நந்தமிழ் நூல்களில் வழங்கும் குணங்களையுமே. இவ்விரு நிறங்களும் ஒரே குணம் வாய்ந்தன வென்பதை முதலில் விளக்குவோம்.

இரண்டும் மங்களச் சொற்களே. "வெண்மையன்" என்று குற்றமற்றவனையும் "செம்மையன்" என்று ஒழுக்கமுடையவனையும் கூறுகின்றோம். வெண்டாமரையில் கலைமகளும், செந்தாமரையில் திருமகளும் கோயில் கொண்டதாக நமது நூல்கள் கூறுகின்றன. வெண்டாமரையென்பது குற்றமற்ற தூய வெள்ளையுள்ளம். செந்தாமரையென்பது செம்மைக் குணம்—ஒழுக்கம் வாய்ந்த தூயவுள்ளம். கலைமகள் தருவது கல்வி; திருமகள் தருவது செம்மை—ஒழுக்கம். கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் ஒழுக்கமென்பது பரிமேலழகர் முதலிய ஆன்றோர் கருத்து.

இனி, வெண்மை நிறத்துக்குச் சந்திரனையும், செம்மை நிறத்துக்கு முருகனையும் உதாரணமாக எடுத்துக்கொண்டு, இவ்விருவருக்குமுள்ள ஒற்றுமைக் குணங்களைக் காண்போம்.

சந்திரன்; பூரணசந்திரன்.

முருகன்; பேரறிவுடையவன்.

அமுதமயமானவன்—

சந்திரன்; அமுதமயமானவன்.

முருகன்; அழிவில்லாதவன்.

கொடிச்சி வாய்க்குமுதம் விள்ளச் செய்பவன்—

சந்திரன்; கொடியிலுள்ள குமுதமலர் விரியச் செய்பவன்.

முருகன்; வள்ளியின் வாய்க்குமுதந் திறந்து பேசச் செய்பவன்.

பரஞ்சோதிகட்பொறி—

சந்திரன்; சிவபெருமானது கண் இந்திரியம்.

முருகன்; சிவபெருமானது கண்ணில் தோன்றிய அனற்பொறி வடிவம்.

வேலையுகப்பவன்—

சந்திரன்; கடலை விரும்புவன்.

முருகன்; வேலாயுதத்தை விரும்புவன்.

அடுத்து, இவ்விரு நிறங்களின் குண வேற்றுமைகளையும், நிறம் பற்றியெடுத்துக்கொண்ட சந்திரன்—முருகன் இவர்களின் வேற்றுமைகளையும் கவனிப்போம். ஒருவனை "அறிவிலி" யென்றதற்கு "வெள்ளையறிவு" என்றும், "நாணினன்" என்றற்கு முகம் வெளுத்தான் என்றும் கூறுகின்றோம். ஒருவனைச் சினந்தான் என்றதற்குச் "சிவந்தான்" என்றும் கூறுகின்றோம். "கறுப்பும் சிவப்பும்" வெகுளிப் பொருள் என்றார் தொல்காப்பியனாரும். ஆகையால் முற்கூறிய இவ்விரு நிறங்களின் குணமும் ஈண்டு முற்றிலும் வேறுபட்டன. இம்முறையில் சந்திரன், முருகன் ஆகிய இவ்விருவர்கட்குமுள்ள வேற்றுமைகளைக் கவனிப்போம்.

சந்திரன்—கலைகள் வளரவும் தேயவுமுள்ளவன். முருகன்—அழியாக் கலைகள் என்றும் நிரம்பியவன். சந்திரன்—இரவோன்; இரவில் சஞ்சரிப்பவன்; இரக்கின்றவன். முருகன்—இரக்கும் புலவருக்கு உதவுவோன். சந்திரன் புறவிருளை மட்டும் நீக்குபவன்; முருகன் அகவிருளையும் நீக்குபவன். சந்திரன் கிரணத்தைச் சகோரப்புள் மட்டும் உண்டு மகிழும். முருகன் எவ்வுயிர்க்கும் இன்பமளிப்பவன். இக்காரணங்களால் முருகன் சந்திரனினும் உயர்ந்தவனாவன்.

இவ்வாறு நிறங்கள் பற்றி நமது இலக்கிய யுலக ஆன்றோர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் நமக்கு என்றும் அழியாவின்ப மூட்டுவனவன்றோ!

—S. M. Pillay.

NANJUNDAN & CO

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res: 603 / Office At 657

Agents For:

COMPLETE RANGE OF TEXTOOL TEXTILE SPINNING MACHINERY

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198261

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 22-A, Narasingapuram Street, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by:

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6-A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone : 4688

Retail Show Room :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone : 4688

Retail Show Room :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.